
# சுகிர்தம்

சிறுவர் நேயச் செய்தி மடல்



ஆரம்பக் கல்விப் பிரிவு
தென்மராட்சிக் கல்விவலயம்

மீள்பதிப்பு
மாகாணக்கல்வித்திணைக்களம்
வடமாகாணம்,
மருதனார்மடம்,
சுன்னாகம்.

# சுகிர்தம்

## பிள்ளைநேய அணுகுமுறைத் திட்டமிடல் சிறப்பிதழ்

தென்மராட்சிக் கல்வி வலயத்தின்
பிள்ளைநேய அணுகுமுறைக்கான உத்தியோகபூர்வ செய்திமடல்

மீள்பதிப்பு
மாகாணக்கல்வித் திணைக்களம்
வடமாகாணம்
மருதனார்மடம், சுன்னாகம்
நிதிமூலம்
CF

# நூல் விபரம்


நூல் :– சுகிர்தம்
தென்மராட்சிக் கல்வி வலயத்தின் பிள்ளைநேய
அணுகுமுறைக்கான உத்தியோகபூர்வ செய்திமடல்

வெளியீடு :– ஆரம்பக்கல்விப் பிரிவு,
தென்மராட்சிக்கல்வி வலயம்.

ஆலோசனை :– திரு. சு. கிருஷ்ணகுமார்,
வலயக்கல்விப் பணிப்பாளர்
தென்மராட்சி.

நூலாக்கம் :– திரு. ந. சர்வேஸ்வரன்
உதவிக்கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி)

நூலாக்கஉதவி :– திரு. ந.மகேஸ்வரன்
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்)

திரு.சி.தர்மராஜா
உதவிக்கல்விப் பணிப்பாளர் (முறைசாராக்கல்வி)

அட்டைவடிவமைப்பு :- திரு.த.குகரூபன்
மல்ரி வேஷன் கிறபிக்ஸ்
388 ஆலயவீதி,
நல்லூர்

மீள்பதிப்பு :- எவகிறீன் அச்சகம்,
693, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

# பிள்ளைநேயச் சிந்தனைக்கு வலுவூட்டுவோம்



எமது வலயக் கல்வி அலுவலகமும் பாடசாலைகளும் தமது கல்விப் பயணத்தைப் புத்தாக்கங்களைத் தழுவிய வகையில் தொடர வேண்டிய தேவையை உணர்ந்துகொள்வதுடன் கல்வியின் சிக்கலான நடைமுறைகளை இலகுவாக விளங்கிக் கொள்வதோடு கல்விக்கான வாய்ப்புகளை எமது சிறார்களுக்கு கூடுதலாக வழங்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். எமது செயற்பாடுகள் யாவற்றிலும் தொழில்நுட்பம் சார்ந்த நவீன உத்திகளைக் கையாள வேண்டிய தேவை உள்ளதால் தகவல்களை உருவாக்குவதற்கும் அவற்றை அறிவதற்கும் விளங்கிக் கொள்வதற்கும் உரிய தேவையின் திறன்களைப் பெற்றுக் கொள்வதற்கும் உசாத்துணையாகப் பிள்ளை நேயக் கல்விப் பரிமாணங்களை அடிப்படையாகக் கொண்ட இத்திட்டமிடல் செய்திமடல் பரிமாறப்படுகின்றது.

புலமைசார் வித்துவம் என்பது மட்டும் கல்வி அபிவிருத்தியில் போதுமானதாகாது என்பதுடன் பகுத்தாய்ந்து சிந்தித்தல், பிரச்சினையைத் தீர்த்தல், தீர்மானம் மேற்கொள்ளல், நல உறவு பேணல், குழுநிலை புரிதல், பொறுப்புணர்ந்து நடத்தல், விழுமியம் பேணல் போன்ற பன்முக ஆளுமைகளையும் கல்விப் புலத்திலுள்ள ஒவ்வொருவரும் கையாண்டு தமது இருப்புகளை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமானதாகும். தவறின் அகப்பையில் வராதவிடத்து பானையை நிறைத்துக் கொள்ளல் வேண்டுமென்ற கருத்துக்கிணங்க விசேட செயற்றிட்டங்களை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்படுவது தவிர்க்க முடியாதென்பது யதார்த்தமானதாகும்.

கையில் வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைந்து மேனி சலித்தால் போல் எம்மவர்கள் ஊர் நகர்ந்து சுயமுகவரி தொலைந்து போய் நாட்டு நடப்புகளை காரண காரியமாக்கி செயலற்றவர்களாக நடமாடுவதைப் பேதமை என்பதா? விதி என்பதா? புரிய முடியாதுள்ளது. நாகரிக மோகத்தில் காலத்தை வெல்ல முடியாது, எதிர்காலத் திட்டமிடல் இன்றிய வாழ்வியல் கோலங்களால் ஈர்க்கப்பட்டு உலக சூழலுக்குள் மூழ்கித் தோற்றவர்கள், தோற்றுக் கொண்டிருப்பவர்கள் பலர் எம் மத்தியில் மௌமனமாக உலா வந்து கொண்டிருக்கின்றார்கள். இதனை உணர்ந்து மாற்று வழிமுறைகளைச் சமூகத்திற்கு வழங்க வேண்டிய பொறுப்புகள் அனைத்தையும் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

கடந்த காலங்களில் எதிர்கால முன் எதிர்வுகள் பற்றிய நோக்கு, தீர்க்க தரிசனமற்ற குறுங்காலத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது வருந்தத்தக்க விடயமாகும். நீண்ட கால, நெகிழ்ச்சியான சுழலும் அபிவிருத்தித் திட்டங்கள் செயலற்ற பாணியில் சேய்மைப்படுத்தப்பட்டுள்ளன. இதன் விளைவாகத் தர உறுதிப்பாடு மற்றும் உன்னதம் நோக்கிய வளப் பாய்ச்சலில் வினைதிறன், நவீன பொறிமுறைகள் காணாமல் போய்விட்டிருந்தன. இதனை எமது கல்விப் பேறுகளின் செம்மைத் தன்மையின் சரிவுப் போக்கு வெளிக்காட்டி வருகின்றது. மாறிவரும் உலகில் அதற்கியைந்த மாற்றங்களுடன் இணைந்து செல்வதற்கு அறிவாற்றல் செயற்பாடுகளுடன் நவீன உத்திகளும், தந்திரோபாய நடவடிக்கைகளும் உந்து விசைகளாகப் பிரயோகிக்கப்பட வேண்டும்

சகல மட்டங்களிலும் திட்டமிடல் உரித்தாளர்களைப் பங்குபெறச் செய்வது மட்டுமன்றி வகை கூறும் பண்புகளை ஏற்புடையதாக்கித் தெளிவான அணுகுமுறை ஒழுங்கில் அனைவரது இயலுமையை வலுப்படுத்த வேண்டிய இன்றைய கால சூழலின் தேவை எமது வலயத்தின் கடப்பாடாக உள்ளது. இதற்கு ஏற்ப கல்விப்புலம் சார்ந்த அனைவரும் அறிவார்ந்த நோக்கில் மாற்றங்களை ஏற்றலுடன் அதற்கு ஏற்ப இயைபு நடத்தைகளை வெளிக் கொணரும் வகையில் செயலாற்ற வேண்டும் என்பதும் எமது எதிர்பார்ப்பாகவுள்ளது. இதற்குரிய வகையில் சிறுவர் நேய அணுகுமுறையை பாடசாலை மட்டத் திட்டமிடலுடன் இணைத்து உள்ளடக்கிய இச் செய்திமடல் உங்கள் கரங்களில் தவழ்கின்றது.

இவ்வழிகாட்டிக் கைந்நூல் தயாரிப்பதில் முன்னின்று உழைத்த எமது வலயத்தின் ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு.ந.சர்வேஸ்வரன் அவர்களுக்கும் அவருக்குத் துணைநின்ற திரு.சி.மகேஸ்வரன் (பிரதிக் கல்விப்பணிப்பாளர-திட்டமிடல்), திரு.சி.தர்மராஜா (உதவிக் கல்விப்பணிப்பாளர்-முறைசாராக் கல்வி) போன்றோருக்கும் எனது பாராட்டுகள். நிதி உதவி புரிந்த யுனிசெவ் நிறுவனத்திற்கும் எனது நன்றிகள்.

இவ்வகையில் சகல தரப்பினரும் இந்நூலின் பயனைத் தழுவி வலய,பாடசாலை மட்ட செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு எம்மை எதிர்நோக்கியுள்ள சவால் மிகுந்த பணிகளில் வெற்றியடைவதற்கு உதவிட வேண்டும்.

சு.கிருஷ்ணகுமார்,
வலயக் கல்விப்பணிப்பாளர்.

# Preface



The concept of Child Friendly School / Approach (CFS / CFA) was launched in Sri Lanka in 2002 as a joint initiative between the Ministry of Education and UNICEF. It began as a small pilot project with 125 schools in North Western Province in 2002. Following successes in North Western Province, the CFS initiative was expanded in 2004 to include 1,400 schools. Save the Children and Plan International in Sri Lanka also played significant roles in the promotion and expansion of Child Friendly Approach in schools.

In 2007, the Ministry of Education began to elaborate upon a national framework for its CFS programme, which has become a key corner stone in addressing quality teaching and learning environment in primary education. The established framework envisages to bring about a coordinated and systems-development approach to the implementation of Child-Friendly Schools all over Sri Lanka.

With the present efforts made by the Zonal Education Office, I am happy to say that the vision of having child friendly approaches in most of the schools in Thenmarachi zone is much closer.

During the displacement, Thenmarachi Zone accommodated the massive influx of displaced students in its classrooms until the time when these students were able to return to their places of origin along with their family members. The contributions made by each and every member of the Zone is commendable.

I feel delighted to acknowledge the Zone for representing the province at the national level in demonstrating its best practices outcomes from the 40 CFA piloted schools. Among the seven schools that were exhibited at the national level out of the CFA piloted schools, Kaithadi Kalaivani school was one. I am happy to have witnessed the team in action in the school, in my recent visit.

The students from the zone has continued to excel in extracurricular activities and examinations both at provincial and national levels. I would like to applaud for the dedication of the zonal team and all the teachers school management team and school development society members for being so inspirational to the children, the community, and external stakeholders like ourselves. It must also be acknowledged that the zonal team continues to explore new technologies such as zone web page which is routinely updated and the bulletins and news-letters that the Zonal Team publishes.

I appreciate the leadership of the Zonal Education Director and his entire team inclusive of the teaching community and school development society members for their perseverance and commitment. I wish them success in this most worthy endeavor that will no doubt pass down the baton to next new leaders, professionals, and educators.

*Mr.Prakash.Tuladhar*
*Head of Field Office*
*Unicef.*

# முகவுரை



சிறுவர் நேய செய்திமடல் ஒன்றை யுனி செவ்வின் நிதியுதவி யூடாக வெளியிடுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. அவ் விதழைச் "சிறுவர் நேயப்பாடசாலைத் திட்டமிடல் தொடர்பான சிறப்பிதழாக" வெளியிடுவது பொருத்தமாக இருக்கும் என்ற சிந்தனை எமக்கு ஏற்பட்டது. இதற்கான காரணம் சிறுவர் நேய அணுகு முறை மற்றும் பாடசாலை மட்ட திட்டமிடல் செய்ம் முறை என்பவை கல்விப்புலத்தில் இன்று பெற் றுள்ள முக்கியத்துவம் ஆகும்.

இலங்கையில் ஆரம்பக்கல்வித்துறையில் 2002 ஆம் ஆண்டில் இருந்து சிறுவர் நேயப் பாடசாலைகள் தொடர்பான செயற்றிட்டம் யுனிசெவ் அமைப்பால் செயற்படுத்தப்பட்டு வந்தது. ஆயினும் தற்போது கல்வி அமைச்சு 2016 ஆம் ஆண்டளவில் இலங்கையின் சகல ஆரம்பப் பாடசாலைகளையும் சிறுவர் நேயப் பாட சாலைகளாக மீளுருவாக்கம் செய்யும் இலக்கோடு சிறுவர் நேய அணுகுமுறையை முன்னெடுக்கிறது. எனவே சிறுவர் நேய அணுகுமுறை தொடர்பான செயற்பாடுகள் தற்போது கல்வித்துறையில் முக்கிய இடத்தைப்பிடித்துள்ளது.

1983 ஆம் ஆண்டில் பாடசாலைத் திட்டமிடல் தொடர்பாக வெளி வந்த சுற்றறிக்கை ஊடாக பாடசாலை மட்ட திட்டமிடல் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது. 2014 இல் வெளி வந்த வழிகாட்டி வரை தொடர்ச்சியாக பாடசாலைத் திட்டமிடலில் காலத்திற்கு காலம் மாற்றங்கள் செய்யப்பட்டன. எனினும் தற்போது மிக முக்கியத்துவம் கொடுத்து அமுலாக்கப்படும் விடயமாகப் பாடசாலை மட்ட திட்டமிடல் செய்ம்முறை காணப்படுகிறது. அந்தவகையில் பாடசாலைகள் தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் முக்கியத்துவப்படுத்தப்படுகிறன.

1. பாடசாலை தூரநோக்கு, செயல்நோக்கு என்பவற்றைக் கொண்டிருக்க வேண்டும்
2. பாடசாலைகள் ஐந்தாண்டுகளுக்கான தந்திரோபாயத் திட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும்
3. பாடசாலைகள் வருடாந்த அமுலாக்கல் திட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும்
4. பாடசாலைகளின் செயற்பாடுகள் இத்திட்டங்களின் அடிப்படையில் இடம்பெற வேண்டும்
5. பாடசாலை தொடர்பான மதிப்பீடுகள் இத்திட்ட அமுலாக்கம் பற்றியதாக அமைதல் வேண்டும்

எனவே சிறுவர் நேயப் பாடசாலைகளை திட்டமிட்டு வெற்றிகரமாக செயற்படுத்த இச்செய்திமடலில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் கல்வித்துறையினருக்கு உதவும் என்பது எமது அசைக்கமுடியாத நம்பிக்கை. எமது பிள்ளைகளுக்கான சிறப்பான எதிர்காலத்தைப் பெற்றுக்கொடுக்க எமது நம்பிக்கை நிஜமாக வேண்டி எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

ந.சர்வேஸ்வரன்
ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்

# எமது பங்களிப்பு......

ஒரு நாட்டில் நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தியை (பேண்தகு அபிவிருத்தி) ஏற்படுத்துவது பாடசாலைக் கல்வியின் பிரதான இலக்குகளில் ஒன்றாகும். ஐக்கிய நாடுகள் சபை நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்திக்கான தசாப்தமாக 2005 -2014 காலப்பகுதியைப் பிரகடனப்படுத்தியது. சிறுவர் உரிமையும், பாடசாலை மட்ட திட்டமிடலும் கல்வி தொடர்பாக நிலைத்திருக்ககூடிய அபிவிருத்தியின் பிரதான செயற்பாடுகளாக காணப்படுகின்றன. நிலைத்திருக்ககூடிய அபிவிருத்திக்கான தசாப்தத்தின் இறுதிவருடமான 2014 இல் அது தொடர்பான நடவடிக்கையை பாடசாலைகளில் காத்திரமாக முன்னெடுப்பதற்கு உரிய வழிகாட்டல்களை இச் செய்திமடல் முன்வைக்கின்றது. இச் செயற்பாட்டை மேற்கொள்வதற்கான யுனிசெவ்வின் உதவியானது எமது வலயத்தைப் பொறுத்தவரை பெறுமதிவாய்ந்த செயற்பாடாகும்.



சகல பாடசாலைகளும் படசாலை மட்ட திட்ட மிடலை முறையாக மேற்கொண்டு அதனடிப்படையில் பாடசாலையைச் செயற்படுத்துவது அத்தியாவசியமானது. ஆயினும் பாடசாலைகளின் திட்மிடலுக்கும் பாடசாலையின் செயற்பாட்டுக்கும் இடையில் பாரிய இடைவெளியிருப்பதை அனுபவரீதியாக அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இவ் இடைவெளியை நீக்குவதற்கு இம்மடலின் ஊடாகத் திட்டமிடலைச் செயற்பாட்டுடன் ஒருங்கிணைப்பதற்கான விடயங்களை வழங்குவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு உவகைகொள்கிறேன்



முறைசாராக் கல்விப் பிரிவு அனைவருக்கும் கல்விவாய்பை உறுதிப்படுத்ததும் செயற்பாடுகளை முன்னெடுக்கிறது. அந்தவகையில் ஆரம்பக்கல்வியில் மாணவரை உள்ளீர்த்தல் மாணவரைப் பங்குபற்றவைத்தல் மாணவரைத் தக்கவைத்தல் தொடர்பான செயற்பாடுகளை முறைசாராக் கல்விப் பிரிவு முன்னெடுக்கின்றது. இவை சிறுவர் நேயம் மற்றும் பாடசாலைத் திட்டமிடலுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளது. அந்தவகையில் இம் மடலாக்கத்தில் இணைந்து இவ்விடயங்களை உட்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

சி.மகேஸ்வரன்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
திட்டமிடல் பிரிவு


சி.தர்மராசா
உதவிக் கல்விப் பணிப்பாளர்
முறைசாரக் கல்விப் பிரிவு

## “காலத்தி னால்செய்த நன்றி சிறிது எனினும் ஞாலத்தின் மாணப் பெரிது”

- இச் செய்திமடல் உருவாக்கத்திற்கான ஆலோசனையையும் அவ்வப்போது முழுமையான ஈடுபாட்டுடன் திருத்தங்களை யும் கருத்துக்களையும் வழங்கி நெறிப்படுத்திய வலயக் கல்விப் பணிப்பாளர் திரு சு.கிருஷ்ணகுமார் அவர்களுக்கும்,
- இச் செய்திமடலை வெளியிடுவதற்கான செயற்றிட்டத்தையும் அதற்கான நிதியுதவியையும் வழங்கிய யுனிசெவ்விற்கும் கல்விசார் இணைப்பாளர் செல்வி ச.கார்த்தியாயினி அவர்களுக்கும்,
- இச் செய்திமடலினை சரவைநோக்கு செய்து திருத்தங்கள் மேற்கொண்ட தொழில் வழிகாட்டல் அலுவலர் திரு. க.ஈஸ்வரன் அவர்களுக்கும்
- இச் செய்திமடலின் அட்டைப்படத்தை சிறப்பாக வடிவமைத்துத் தந்த மல்ரிவேசன் கிறபிக்ஸ் திரு. குகரூபன் அவர்களுக்கும்
- இச் செய்திமடலினை அழகுறவடிவமைத்து அச்சேற்றிய மாருதி அச்சகத்தினருக்கும்

................ எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆரம்பக் கல்விப்பிரிவு
தென்மராட்சிக் கல்வி வலயம்



# உள்ளடக்கம்


1. ஆரம்பக் கல்வியும் சிறுவர்நேய அணுகுமுறையும் *பக்.01*

2. பாடசாலை பற்றிய அறிமுகம் *பக்.13*

3. திட்ட இலக்குப் பற்றிய தகவல்கள் *பக்.31*

4. பாடசாலை மட்ட திட்டங்கள் *பக்.35*

5. பாடசாலைத் திட்டமிடற் செய்ம்முறை *பக்.45*

6. திட்டமிடலுக்கான கணிப்பீடுகளை மேற்கொள்ளல் *பக்.57*

7. பிள்ளைநேய திட்டமிடலில் கவனிக்க வேண்டிய விடயங்கள் *பக்.65*

# ஆரம்பக் கல்வியும் சிறுவர்நேய அணுகுமுறையும்

## ஆரம்பக்கல்விப் பிரிவிற்கான இலக்குகள் 2012-2016

இலங்கையில் கல்வி அபிவிருத்தி தொடர்பாக கல்வி அமைச்சின் கல்வித் துறை சார் அபிவிருத்திச் சட்டகத்தில் ஐந்தாண்டுகளுக்கான அபிவிருத்தி இலக்குகள் வரையறுக்கப்பட்டுள்ளது. இவ் இலக்குகளில் ஆரம்பக்கல்வி விருத்தி தொடர்பாக ஆறு இலக்குகள் முன்வைக்கப்பட்டுள்ளது. இவ் இலக்குகள் அனைத்தும் பொதுவாக சிறுவர் நேய அணுகுமுறையுடன் சம்மந்தப்பட்டிருந்தாலும் 5வது இலக்கு குறிப்பாக சிறுவர் நேய அணுகுமுறையைப் பற்றிக் கூறுகிறது. இது கல்வி அமைச்சின் கொள்கையில் சிறுவர் நேய அணுகுமுறை கொண்டுள்ள முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.

1. தரமான ஆரம்பக்கல்வியைப் பெற்றுக்கொள்வதில் நியாயத்தன்மையை உறுதிப்படுத் தல்
2. ஆரம்பக்கல்வியில் 5-9 வயது பிள்ளைகளின் பங்குபற்றலை உறுதிப்படுத்தல்
3. ஆரம்பக்கல்வியைப் பூர்த்திசெய்யும் முழுப்பிள்ளைகளும் அடிப்படைக் கற்றல் தேர்ச்சி யை அடைவதை உறுதிசெய்தல்
4. ஆரம்பக்கல்வியைப் பூர்த்திசெய்யும் 80% மான பிள்ளைகள் விரும்பத்தக்க கற்றற் தேர்ச்சியில் பாண்டித்திய நிலையை அடைவதை உறுதிசெய்தல்
5. கற்றல் கற்பித்தலில் சிறுவர் நேயஅணுகுமுறையை மேம்படுத்துவதற்காக உட்படுத்தல் தன்மை கொண்ட கற்றற் சூழலை உறுதிப்படுத்தல்
6. தேசிய நியமங்களுக் கேற்ப முழு ஆரம்பப்பாடசாலைகளிலும் உட்கட்டுமான வசதிகள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தல்

**Source: National Strategic plan ESDFP-Relevance of Primary Education (2012-2016)**

## இலங்கையில் சிறுவர் நேயப்பாடசாலைகளுக்கான பரிமாணங்களும் நியமங்களும்

ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக சிறுவர் நேய பாடசாலைகள் தொடர்பான செயற்பாடுகள் இலங்கையில் இடம்பெற்று வருகின்றது. எனினும் 2007 ம் ஆண்டில் சிறுவர் நேய அணுகுமுறையை கல்வி அமைச்சு நாடளாவியரீதியில் அமுல்படுத்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்தது. அந்தவகையில் சிறுவர் நேய பாடசாலைகளுக்கான வழிகாட்டிக் கைநூல் வெளியிடப்பட்டது. அன்நூலில் சிறுவர் நேய அணுகுமுறையின் பரிமாணங்கள் தெளிவாக வரையறுக்கப்பட்து.

**1. முதலாவது பரிமாணம் –** உரிமைகளை அடிப்படையாகக் கொண்டு உயிரோட்டமான வகையில் உட்படுத்தல்.

**1.1. நியமம்:** பாடசாலையிலிருந்து இடைவிலகுவதைத் தடுப்பதற்கும் பாடசாலை செல்லாத பிள்ளைகள் தொடர்பாகத் தேடியறிவதற்கும் துலங்கல் காட்டுவதற்கும் பயனுறுதியுடைய பொறிமுறை உள்ளது. அப்பொறிமுறை செயற்படுகின்றது.

**1.2. நியமம்:** பாடசாலையில் காணப்படும் செயற்பாடுகளில் கலந்து கொள்வதற்கும் வளங்களைப் பயன்படுத்துவதற்கும் சகல பிள்ளைகளுக்கும் சமமான வாய்ப்பு உண்டு.

**1.3. நியமம்:** உடல், உளத் தண்டனைகள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. பயமுறுத்தல், தொந்தரவு செய்தல் போன்றவற்றைத் தடுப்பதற்கான செயன்முறைகளும் அவற்றுக்குத் துலங்கல் காட்டுதலும் உண்டு.

**1.4. நியமம்:** சிறுவர் உரிமை தொடர்பாக ஒட்டுமொத்த பாடசாலைச் சமூகத்தினரும் அறிவூட்டம் பெற்றுள்ளனர். அவ்விளக்கத்துடனேயே பாடசாலையின் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

**2 இரண்டாவது பரிமாணம்** - ஆண் பெண் சமூகவியல்புகளில் கவனம் செலுத்துவோம்.

**2.1. நியமம்:** ஆரம்பக்கல்வியைப் பூரணப்படுத்துவதற்கும் இடைநிலைக் கல்விக்குப் பிரவேசிப்பதற்கும் உதவுமுகமாகப் பெண்பிள்ளைகளுக்கும் ஆண் பிள்ளைகளுக்கும், சமவாய்ப்பு வழங்கப்படுகின்றது.

**2.2. நியமம்:** பாடசாலையில் சகல செயற்பாடுகளின் போதும் (கலைத்திட்டம், இணைப்பாடவிதானம்) பெண் பிள்ளைகளும் ஆண் பிள்ளைகளும் சமமான அடிப்படையில் பங்குபற்றுகின்றனர்.

**2.3. நியமம்:** பாடசாலையில் பௌதிக வளங்கள், பெண் பிள்ளைகளுக்கும் ஆண் பிள்ளைகளுக்கும் பொருத்தமான விதத்தில் காணப்படுகின்றன

**3 மூன்றாவது பரிமாணம் –** பிள்ளைகளின் கற்றற் பேறுகளை விருத்தி செய்தல்.

**3.1. நியமம்:** கற்றலுக்கு உதவுவதற்காக மனித வளங்களும் வகுப்பறை வசதிகளும் போதுமான அளவில் உள்ளன.

**3.2. நியமம்:** வகுப்பறைச் சூழல் உட்படுத்தல் முறையில் அமைந்துள்ளது. அழுத்தங்கள் கிடையாது. சனநாயக ரீதியானது. கற்றலுக்குப் பொருத்தமானது.

**3.3. நியமம்:** பிரதேச சூழல், பண்பாடு போன்றவை பற்றிய அறிவைப் பெற்றுக் கொடுப்பதற்குப் பாடசாலைக் கலைத்திட்டம் பொருத்தமாக இசைவாக்கப்பட்டுள்ளது.

**3.4. நியமம்:** வழங்கப்பட்டுள்ள வாய்ப்புகளினூடாகச் சுய ஆர்வத்துடன் ஆசிரியர்கள் தமது திறன்களைத் தொடர்ச்சியாக விருத்தி செய்து கொள்வார்கள்.

**3.5. நியமம்:** கற்பித்தலின் போது மாணவர் மையக் கற்பித்தல் முறை பயன்படுத்தப்படும்.

**3.6. நியமம்:** அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள், முறையாகக் கணிப்பீடு செய்யப்படுகின்றன. சகல மாணவர்களும் அத்தியாவசியக் கற்றற் தேர்ச்சிகளில் பாண்டித்தியத்தை அடையச் செய்வதற்காக பயனுள்ள வழிமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**4 நாலாவது பரிமாணம் –** பிள்ளைகளின் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும், கவனிப்பையும் உறுதிப்படுத்தல்.

**4.1. நியமம்:** சுகாதாரம், கவனிப்பு, பாதுகாப்புத் தொடர்பாகப் பாடசாலை மட்டத்திலான கொள்கைகள் உண்டு.

**4.2. நியமம்:** உணவு, நீர், கழிவகற்றல் போன்றவை தொடர்பாக பாடசாலையில் போதுமானளவு வசதிகள் உண்டு.

**4.3. நியமம்:** உணவு, நீர், கழிவகற்றல் வசதிகளோடு பாடசாலைச் சூழல் பாதுகாப்பான தாகப் பேணிவரப்படுகிறது.

**4.4. நியமம்:** மாணவர்களுக்கான தேர்ச்சி மையச் சுகாதாரக் கல்வி பயனுள்ளவாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**4.5. நியமம்:** பயனுறுதியுள்ள உள சமூக உதவியும் வழிப்படுத்தும் சேவைகளும் உள்ளன. அவை பயன்படுத்தப்படுகின்றது.

**4.6. நியமம்:** துன்புறுத்தல்கள், துஸ்பிரயோகங்கள், அழுத்தங்கள் போன்றவற்றிலிருந்து பிள்ளைகள் பாதுகாப்பாக உள்ளனர்.

**4.7. நியமம்:** அனர்த்த முகாமைக்காக திட்டமிட்ட முன்னாயத்தம் உண்டு. அது நடை முறைப் படுத்தப்படுகின்றது.

**5 ஐந்தாவது பரிமாணம் –** மாணவர், குடும்பம், மற்றும் சமூகத்தின் உயிரோட்டமான பங்களிப்பு.

**5.1. நியமம்:** மாணவர்கள், குடும்பங்கள், சமூகத்தினர் போன்றோரின் பயனுள்ள பங்களிப் புடன் சுய கணிப்பீடு இடம்பெறுவதுடன் பாடசாலை அபிவிருத்தித் திட்டமும் ஒழுங்கமைக்கப்படுகிறது.

**5.2. நியமம்:** பாடசாலை அபிவிருத்தித் திட்டம் (SDP) நடைமுறைப்படுத்தப்படும் போது அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், குடும்பம், சமூகம் போன்றோர் பங்களிப்புச் செய்கின்றனர்.

**5.3. நியமம்:** பாடசாலை அபிவிருத்தித் திட்டம் (SDP) கண்காணிப்பின்போதும் மதிப்பீடு செய்யப்படும்போதும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், குடும்பம், சமூகம் போன்றோர் பங்களிப்புச் செய்கின்றனர்.

**5.4. நியமம்:** சிறுவர் நேய, வீடு/சமூக சூழல் போன்றவற்றின் மேம்பாட்டுக்காகப் பாடசாலை உயிரோட்டமாகப் பங்களிப்புச் செய்கிறது.

**6 ஆறாவது பரிமாணம் –** சிறுவர் நேயக் கொள்கைகள், முறைமைகள், ஒழுங்கு விதிகள் ஊடாக உதவி பெறல்.

**6.1. நியமம்:** அரச கொள்கைகளும், சட்ட திட்டங்களும், அவற்றை நடைமுறைப்படுத் துதலும் சிறுவர் நேயப் பாடசாலை அபிவிருத்திக்கு உதவும்.

**6.2 நியமம்:** குறித்த சகல அரச நிறுவனங்களுக்கிடையில் சகல நிலைகளிலும் பயனுள்ள இணைப்புக் காணப்படும்.

**6.3. நியமம்:** நிதி வளங்கள் பல்வேறு நிலைகளிலும் பொருத்தமாகப் பயன்படுத்தப் படும்.

**6.4. நியமம்:** சகல நிலைகளிலும் தரமான தொழில்நுட்ப உதவித் தொகுதிகள் காணப்படும்.

**6.5. நியமம்:** கலைத்திட்டத்திலும் பாடநூல்களிலும், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளிலும் சிறுவர் நேயக் கோட்பாடு அடங்கியிருக்கும்.

Source: **சிறுவர் நேய அணுகுமுறை தொடர்பான ஆலோசனை வழிகாட்டி – ஆரம்பக் கல்விப் பிரிவு – கல்வி அமைச்சு**

Child Friendly Information

## சிறுவர்நேயப் பாடசாலைகள்

1. சிறுவர் உரிமைகளை அடிப்படையாகக் கொண்டு சகல மாணவர்களையும் உயிரோட்டமான வகையில் உட்படுத்தும்
2. ஆண்-பெண் சமூக இயல்புகளில் கவனம் செலுத்தும்
3. தரமான கற்றற் பேறுகளை விருத்தி செய்யும்
4. பிள்ளைகளின் ஆரோக்கியம், கவனிப்பு மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்.
5. உயிரோட்டமுள்ள சமுகப் பங்களிப்பை உறுதிப்படுத்தும்
6. சிறுவர் நேய முறைமை, கொள்கைகள், அணுகுமுறைகள் மற்றும் விதிமுறைகள்ஊடாக உதவி பெறும்.

### சிறுவர் நேயப்பாடசாலைகளில் எதிர்பார்க்கப்படும் அம்சங்கள்

2016ம் ஆண்டளவில் இலங்கையின் சகல ஆரம்பப்பாடசாலைகளையும் சிறுவர் நேயப் பாடசாலைகளாக மீளுருவாக்கம் செய்யும் இலக்கினை அடையும் நோக்கில் ஜனாதிபதி செயலாளர் அலுவலகத்தின் சிறுவர் நேய பாடசாலைகள் கண்காணிப்பு அலகு செயற்படுகிறது. இவ் அலகு சிறுவர் நேயப் பாடசாலைகளை மதிப்பிடுவதற்கான ஐந்து அளவு கோல்களையும் அவற்றுள் அடங்கும் அம்சங்களையும் எடுத்துக்காட்டியள்ளது.

### பாடசாலைமீது மாணவர்கள் கொண்டுள்ள விருப்பும் அன்பும்.

- மாணவர்கள் தலைமையின் கீழ் பாடசாலையில் நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளினதும் செய்கின்ற சேவைகளினதும் எண்ணிக்கை
- மாணவர்களுக்கு உள, உடல் தண்டனைகள் வழங்காமை
- பக்கச் சார்பின்றி மாணவர்களைச் சமமாகக் கவனித்தல்
- மாணவர்கள், அதிபர் மற்றும் ஆசிரியர்களுடன் கொண்டுள்ள நெருங்கியதொடர்பு
- மாணவர்களுக்கு வழங்கப்படும் பொறுப்புகளில் அவர்களால் நிறைவேற்றப் பட்டுள்ள சதவீதம்
- மகிழ்ச்சியுடன் பாடசாலைக்கு வருகை தரல் அதிரித்துள்ளமை

- பாடசாலை சுற்றாடலுக்கும் அதன் நற்பெயருக்கும் அன்புடன் செயற்படுவதில் ஈடுபாடு
- இணைபாடவிதான செயற்பாடுகள் தொடர்பாக பாடாசலை வேளைக்கு மேலதிக மாக பாடசாலையில் காலத்தைச் செலவிடுவதில் காட்டும் விருப்பம்.
- முறைப்பாடுகளும் ஒழுக்காற்று பிரச்சினைகளும் குறைந்துள்ளமை.

## அதிபரின் முயற்சி, ஆற்றல் மற்றும் பாடசாலை மீது கொண்டுள்ள பற்று

- காலையிலேயே பாடசாலைக்கு வருகை தருதல், பாடசாலை நேரத்தில் பாட சாலையில் தங்கி இருத்தல் மேலதிகமான நேரம் பாடசாலையில் தங்கி இருத்தல்.
- வருடாந்த சொந்த லீவினை எடுக்காமலிருப்பதற்கான முயற்சி (ஆகக் கூடிய 5 நாட்கள்)
- வெளி நிறுவனங்கள், அயற் பாடசாலைகள், மற்றும் அலுவலகத்துடன நல்லுற விற்கான உதாரணங்கள்
- அலுவலகத்தின் ஒழுங்கமைப்பு பேணப்படுதல்
- பௌதிக மனித வளங்களின் உச்ச அளவிலான பயன்பாடு மற்றும் பாதுகாப்பிற் காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள், விருப்பத்திற்குரியதும் வினைதிறன் மிக்கதுமான பாடசாலை பௌதீக சூழலைப் பேணுவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்
- நடைமுறைப்படுத்தப்படும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் (ஆகக் குறைந் தது மூன்று)
- மாணவர்களின் அடைவு மட்டத்தினை முன்னேற்ற எடுக்கப்பட்டுள்ள செயற்பாடு கள் (ஆகக் குறைந்தது 2)
- சகல ஆசிரியர்களையும் மாதத்திற்கு ஒரு முறையாவது உள்ளக மதிப்பீட்டிற்கு உட்படுத்தல்
- வருடத்திற்கு சமூகத் தலைவனாக செயற்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை
- ஆசிரியர்களிடம் வரவேற்பு இருப்பதற்கான சான்றுகள்
- புதிய தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை
- பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்திப் பயிற்சித் தேவைகளை இனங்கண்டு ஆசிரிய அபிவிருத்தி செயற்பாடு மேற்கொள்ளப்பட்ட தடவைகள்
- தீர்மானங்கள் மேற்கொள்ளும் போது பாடசாலை அபிவிருத்தி சங்கம் கூட்டப்பட்ட தடவைகளும், சமூக பங்களிப்புடனான செயற்பாட்டுச் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கையும்.

## ஆசிரியர் குழாத்தின் கலாசாரம்

- நேரம் பிந்தி வருகை தருதல் குறைந்துள்ளமை
- பாடசாலை ஆசிரியர்களின் நாளாந்த லீவு பெறும் சதவீதம் குறைவாகவே இருத்தல்

- லீவு எடுக்கும் நாட்களில் வேலைகளை ஒப்படைத்தல் மற்றும் விடுபட்ட பகுதி களை முடித்தல்
- பிள்ளைகளின் பலம், பலவீனம், தொடர்பாக பெற்றோர்களுடன் கலந்தாலோ சித்த தடவைகளின் எண்ணிக்கை
- தொழில் வாண்மை விருத்திக்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்
- அறிவுப்பரிமாற்றம் தொடர்பாக ஆசிரியர்களுக்கிடையிலான தொடர்பு
- மாணவர்களின் உடல் நலம் மற்றும் போஷாக்கு தொடர்பாக கண்காணிக்கப் பட்டு தவறுகள் திருத்தப்படுதல்
- கற்றல் செயற்பாடுகளைத் தயாரிப்பதற்காக மாணவர்களின் கருத்துகளைப் பயன்படுத்தல்
- இணைப்பாடவிதான செயற்பாடுகளில் உற்சாகத்துடன் பங்கு பற்றும் ஆசிரியர் களின் சதவீதம்
- நேர அட்டவணைக்கு இசைவாக்கம் அடைதல் சகல சிறுவர்களுக்கும் மற்றும் சிறுவர்களின் மட்டத்திற்கு ஏற்பவும் கற்றல் செயற்பாடுகளைத் திட்டமிடல்
- கற்றல்,கற்பித்தல் தொடர்பாக சுய கணிப்பீடு
- அதிபருக்கு வழங்கும் ஒத்துழைப்பு

## மாணவரிடையே நிகழ்கின்ற சாதகமான பாடசாலைச் சூழல்

- பாடசாலையின் மரபினைப் பேணுவதற்கு மாணவர்கள் எடுக்கும் செயற்பாடுகள்
- மற்றவர்களுக்கு உதவுவதற்கும் நட்புறவினைப் பேணுவதற்கும் மாணவர்கள் முன்வருதல்
- ஏனைய மதத்தவர்களையும் இனத்தவர்களையும் மதித்தல் பொது இடங்களில் நடத்தை மற்றும் பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல்
- பாடசாலையின் பௌதீக வளங்களைப் பாதுகாத்தல் மாணவர்களை சுயகற்ற லுக்கு மற்றும் ஓய்வு நேரத்தினைப் பயனுள்ள வகையில் செலவிடுவதற்கும் ஈடுபடுத்தல்
- நற் சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிப்பதில் காட்டும் அக்கறை
- அவசர நிலைமைகளுக்கு முகங்கொடுப்பதற்கான ஆயத்தப் பாடசாலைகளுக்கு இடையில் சிநேகபூர்வமான தொடர்பு
- பிள்ளைகளுக்கிடையில் நற்பழக்கவழக்கங்களை ஏற்படுத்தப் பாடசாலை மூலம் செயற்படுத்தும் செயற்பாடுகளில் மாணவர்கள் தலைமைத்துவம் வழங்குவதின் சதவீதம்

## மாணவர்களின் அடைவு மட்டத்தினை உயர்த்துவதற்காக முன்னெடுக்கப் பட்டுள்ள வேலைத் திட்டங்கள்

- கற்றலில் பலம், பலவீனம் என்பனவற்றை இனங்காண்பதற்கான கண்டறிதலும், செயற்படுத்தும் பொருத்தமான பரிகாரச் செயற்பாடுகளின் மட்டமும்
- உயிரோட்டமுள்ள கற்றல் சூழல் ஒன்றினை அமைத்தல்

♦ மாணவர்கள் வருகை தராத காரணத்தினால் விடுபடும் பாடங்களை மீண்டும் நடத்த முறையான வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்

♦ நூலகப் பாவனைக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளமை

♦ வீட்டில் கற்றலுக்கான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதற்குப் பாடசாலை முன் வந்து செயற்படுத்தும் செயற்பாடுகள்

♦ மாணவர்களின் ஆக்கங்களை வெளியிடுவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள்

♦ மாணவர்களின் கற்றல் சந்தர்ப்பங்களை முன்னேற்றுவதற்காக வெளிவாரீயாக வள நபர்களின் உதவிகளைப் பெறுதல்

♦ மாணவர்களின் தனித்துவமான திறன்களை இனங்காண்பதற்கான வழிமுறைகள் உண்டு

♦ மாணவர்களின் விருப்பத்திற்கேற்றவாறு ஒழுங்கமைக்கப்பட்ட பௌதிக சூழல் தொடர்பான உதாரணங்களின் எண்ணிக்கை

♦ மாணவர்கள் ஆசிரியர்கள் மீதும் பாடசாலை மீதும் காட்டும் விருப்பத்தினை அளப்பதற்கான வழிமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

தேசிய மட்ட வெற்றிகள்

## ஆரம்பக் கல்வி தொடர்பாக வகை கூறலும் கடமைப் பொறுப்புக்களும்

ஆரம்பக்கல்வித்துறை மற்றும் சிறுவர் நேய அணுகுமுறை தொடர்பாக வலய, கோட்ட கல்வி அலுவலகங்கள் கொண்டுள்ள பொறுப்புக்கள் தெளிவாக கல்வி அமைச்சினால் வரையறுக்கப்பட்டுள்ளது. பாடசாலைகள் இக் கடமைக்கூறுகள் தொடர்பாக அவதானம் செலுத்த வேண்டியது. அவசியமாகும்.

## வலயக் கல்வி அலுவலகம்

1. பாடசாலைக்குச் செல்லும் வயதெல்லைக்குட்பட்ட பிள்ளைகளுக்கு 2 கி.மீ தூரத்திற்குள் பாடசாலையைப் பெற்றுத்தருதல்.

2. ஆரம்பக்கல்வி மாணவர்கள் ஒவ்வொரு முதன்மை நிலைக்கும் பிரவேசிக்கும் போது அடைந்துள்ள புகுமுகத் தேர்ச்சி தொடர்பாக இனங்காணும் வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

3. ஒவ்வொரு முதன்மை நிலை இறுதியிலும் அடைய வேண்டிய அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளை அடைந்து கொள்வதற்குத் தேவையான செயற்பாடுகளைச் செய்தல்.

4. ஒவ்வொரு தரங்களுக்கும் உரிய பாட மட்டத்திலான தேர்ச்சி அடைவு தொடர்பான விபரங்களைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் பகுப்பாய்வு

5. ஆரம்பக் கல்வி நிலையில் சகல மாணவர்களுக்கும் பாடஇணைச் செயற்பாடுகளில் பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தித்தருதல்.

6. ஆரம்பக் கல்வி நிலையில் மாணவர்களின் விழுமிய விருத்திக்காகவும் முழுமையான ஆளுமை விருத்திக்காகவும் போதியளவு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

7. ஆரம்பக் கல்விப் பிரிவு மாணவர்களுக்கான சுகாதார மேம்பாட்டு வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

8. ஐந்தாந் தரத்தில் ஆரம்பக் கல்வியை நிறைவு செய்யும் சகல மாணவர்களும் இடைநிலைக் கல்வியில் பிரவேசிப்பதற்காக அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளை அடைந்துள்ளமையை உறுதிப்படுத்தல்.

9. ஆரம்பக் கல்வியை வழங்கும்போது மொழிமூலமாகத் தேசிய மொழியை மட்டும் (சிங்களம் அல்லது தமிழ்) பயன்படுத்துவதை உறுதி செய்தல்

10. ஆரம்பக் கல்வித்தகைமை உடைய ஆசிரியர்களை ஆரம்பக்கல்விப் பிரிவின் கற்பித்தல் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தல்.

11. ஆரம்பப் பாடசாலைகளில் அதிபர்கள், ஆரம்பக் கல்விப் பிரிவுடன் கூடிய இடைநிலைப் பாடசாலைகளின் அதிபர்கள், மற்றும் ஆரம்பக் கல்விப் பகுதித் தலைவர்களை ஆரம்பக் கல்வீ தொடர்பாக அறிவூட்டம் பெறுவதில் ஈடுபடுத்தல்.

12. தேசிய நியமங்களுக்கேற்ப சகல ஆரம்ப பாடசாலைகள் மற்றும் இடை நிலைப் பாடசாலைகளில் ஆரம்பக் கல்விப் பிரிவு அபிவிருத்தி அடைந்துள்ள மையை உறுதிப்படுத்துதல்.

13. பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தில் ஆரம்பக் கல்வி அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் போதியளவு உள்ளடக்கப்பட்டிருத்தல் மற்றும் நடைமுறைப்படுத் துவதற்குத் தேவையான வழிகாட்டுதல்கள் தொடர்பாக உறுதிப்படுத் திக்கொள்ளல்.

14. பண்புசார் ஆரம்பக் கல்வியை நடைமுறைப்படுத்துவதற்காக ஆரம்பக்கல்விப் பிரிவிற்குத் தர உள்ளீடுகளைப் பெற்றுத் தருதல் மற்றும் பயன்படுத்துதலைக் கண்காணித்தல்.

15. வருடாந்தத் தொகை மதிப்பீட்டிற்கு அமைவாக ஆரம்பக் கல்விப் பிரிவிற்கான இற்றைப்படுத்தப்பட்ட தரவுகளைப் பேணுதல் மற்றும் பயன்படுத்துவதில் உரிய உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தல்.

16. ஆரம்பக் கல்விப் பாடவிதானத்தை நடைமுறைப்படுத்தும் போது இனங்காணப் படுகின்ற பலம் மற்றும் அபிவிருத்தி அடைய வேண்டிய சந்தர்ப்பங்கள் தொடர்பாக மாகாண மற்றும் கல்வி அமைச்சிற்கு அறியத்தருதல்.

17. பாடப் பொறுப்பு அலுவலர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், மற்றும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் செயல்நிலை ஆய்வு மற்றும் ஆரம்பக் கல்விக்கு அமைவான ஏனைய ஆய்வுக் கற்கைகளில் ஈடுபடுதல் வெளிப்படுத்துதல் மற்றும் மாகாண, தேசிய மட்டங்களுக்கு அறியத்தருதல்.

18. ஆரம்பக் கல்வி நிலையில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற முதலாம் தேசிய மொழி, இரண்டாம் தேசிய மொழி, ஆங்கில மொழி, கணிதம், சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் மற்றும் சமயம் ஆகிய பாடங்களுக்கும் விளையாட்டு, அழகியல் மற்றும் பாட இணைச் செயற்பாடுகள் தொடர்பாக உதவியளிக்கும் வகையில் போதியளவு ஆசிரிய ஆலோசகர்களின் உதவி கிடைக்கின்றமை பற்றி உறுதிப்படுத்திக்கொள்ளல்.

19. கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகள்.

## கோட்டக் கல்வி அலுவலகம்

1. கோட்டப் பிரதி அல்லது உதவிக் கல்விப் பணிப்பாளர்களின் மேற்பார்வையின் கீழ் இருக்கும் ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர்களின் கடமைப் பொறுப்புக் களைக் கண்காணித்தலும் வழிகாட்டுதலும்.

2. வலய ஆரம்பக்கல்வி உதவி அல்லது பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுடன் இணைந்து அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு அறிவூட்டல் செய்யும் வேலைத் திட்டங்களை நடத்துதல்.

3. பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்படும் வருடாந்தத் திட்டங்கள் மற்றும் இடைக்கால அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல்.

4. கட்டாயக் கல்விச் சட்டத்தின்கீழ் பாடசாலைக்குச் செல்லக்கூடிய வயதில் இருக்கின்றதும் பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகளைப் பாடசாலைக்கு உள்வாங்குவதற்கு கிராம அலுவலருடன் இணைந்து செயற்படுதல்.

5. பாடசாலை மற்றும் வேறு உதவி நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுதல்.

6. திட்டமிட்ட செயற்பாடுகளின்போது ஆரம்ப நிலைக்காக நியாய மாகச் செயற்படும் விதத்தில் காலத்தை ஒதுக்குவது பற்றி உறுதிப்படுத்துதல்.

7. மனித வள, பௌதீக வள நிதி மற்றும் நேரம் ஆகிய வளங்களைப் பெற்றுக்கொள்வதற்குப் பாடசாலை மட்டத்தில் திட்டமிடுகின்ற போது மற்றும் வழங்கலின் போது ஆரம்பப் பிரிவிற்காக உள்ளீடு செய்யப்படுகின்றதை உறுதிப்படுத்தல்.

8. அனைத்து ஆரம்ப பாடசாலைகள் பிரிவில் தமது இடைக்கால ஆரம்பக் கல்வி அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் செயற்படுத்தப்படும் வருடாந்தத் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றமை தொடர்பாக உறுதி கூறுதல் மற்றும் கண்காணித்தல்.

**Source: வலயக் கல்வி அலுவலகங்கள் மற்றும் கோட்டக் கல்வி அலுவலகங் களின் வகை கூறல் மற்றும் கடமை பொறுப்புக்கள் – கல்வி அமைச்சு**

# சிறுவர் நேயப் பாடசாலையும் திட்டமிடலும்

உயர் ஆற்றலும் பண்பும் கொண்ட எதிர்கால சமூகத்தை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிப்பது ஆரம்பக் கல்விச் செயற்பாடாகும். தரமான ஆரம்பக் கல்வி தரமான சமூகத்தின் அத்திபாரமாகும். தரமான கல்வி தரமான கற்பித்தல் செய்ம்முறையில் பெருமளவு தங்கியுள்ளது. தரமான கற்பித்தல் செய்ம்முறை பின்வரும் மூன்று பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1. சிறுவர் நேய அணுகுமுறை (child friendly)
2. செயற்பாடு சார் கற்பித்தல் (activity based)
3. சமூகப் பங்குபற்றல் (participatory)

ஒன்றுடன் ஒன்று நெருக்கமான தொடர்பை இவை கொண்டுள்ள தால் இப் பண்புகள் தனிதனியாக அமுல்படுத்த முடியாதவை. எனவே சிறுவர் நேய அமுலாக்கம் தரமான கல்வியை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

முறையான திட்டமிடல் அற்ற எந்தவொரு செயற்பாடும் வெற்றி பெறாது. அந்தவகையில் தரமான கல்வி என்ற இலக்கை அடைய பிள்ளை நேய அணுகுமுறை தொடர்பாகப் பாடசாலைகளில் முறையான திட்டம் காணப்பட வேண்டியது அத்தியாவசியமாகும். எனவே பிள்ளை நேய அணுகு முறையுடன் கூடிய திட்டமிடலை மிகத் திருத்தமாக எவ்வாறு மேற்கொள்வது எனத் தொடர்ந்து நோக்குவோம்.

பாடசாலைத் திட்டமானது பின்வரும் அடிப்படைப் பகுதிகளைக் கொண்டிருக்கும்.

## 01. பாடசாலை பற்றிய அறிமுகம்

1. அடிப்படைத் தகவல்கள்
2. மாணவர் பற்றிய தகவல்கள்
3. ஆசிரியர் பற்றிய தகவல்கள்
4. கல்வி சாரா ஊழியர் பற்றிய தகவல்கள்
5. கல்வி அடைவு பற்றிய தகவல்
6. கட்டிடங்ளின் பரப்பும் வகையும்
7. பாடசாலையின் பகுதிகள் பற்றிய விபரம்
8. பாடசாலைத் தளபாடங்கள் பற்றிய விபரம்
9. உபகரணங்கள் பற்றிய தகவல்
10. ஏந்து பிரதேசம் பற்றிய தகவல்
11. தொகுதிப் பாடங்களைக் கற்கும் மாணவர் விபரம்
12. எதிர்கால மாணவர் தொகை

## 02. திட்ட இலக்கு பற்றிய தகவல்கள்

1. தூரநோக்கு
2. செயல்நோக்கு
3. விழுமியம்

## 03. சுழற்சி முறை ஐந்தாண்டு அபிவிருத்தி திட்டம் (உபாயத்திட்டம்)

1. பொது நிர்வாகம் தொடர்பானது
2. மனித பௌதிக வளம் தொடர்பானது
3. கலைத்திட்ட முகாமை தொடர்பானது

## 04. வருடாந்த அமுலாக்கல் திட்டம்

1. வருடாந்த அமுலாக்கல் திட்டம்
2. மாதாந்த அமுலாக்கல் திட்டம்
3. வருடாந்த செலவு மதிப்பீடு

Child Friendly Information

## புகையிலை மற்றும் போதைப் பொருட்களில் இருந்து பாதுகாத்தல்
## Prevention of Tobacco and Dangerous drugs

2006 ஆம் ஆண்டின் 27ம் இலக்க புகையிலை மற்றும் போதைப் பொருட்கள் பற்றிய தேசிய அதிகார சபைச் சட்டம். இச்சட்டத்தின் 31ம் பிரிவின் படி 21 வயதுக்குக் குறைந்தவர்களுக்குப் புகையிலை உற்பத்திப் பொருட்களை அல்லது போதைப் பொருட்களை விற்பனை செய்தல், விற்பனை செய்வதற்காகச் சமர்ப்பித்தல் அல்லது அவற்றை விற்பனை செய்வதற்காக இடமளித்தல் அல்லது முயற்சி செய்தல் தடுக்கப்பட்டுள்ளது.

### அட்டைப்படம்

கற்றலில் பின்தங்கிய மாணவர்களிற்கான பொருத்தமான பரிகாரத்தை மேற் கொள்வதற்காக அவர்களின் நிலையை விளங்கிக் கொள்ள வலயத்தின் வழிகாட்டல் ஆலோசனை அலகினால் மருத்துவ பரிசோதனை முகாம் நடத்தப்படுகிறது. "நேசமுடன்..." ஏன்ற தலைப்பில் நடத்தப்படும் இம் மருத்துவ முகாமில் மாணவனுடன் நேசமுடன் உரையாடும் மருத்துவரின் காட்சி அட்டைப்படத்தை அலங்கரிக்கிறது

Important

பாடசாலை அபிவிருத்தி திட்டமும் (school development plan - SDP) பாடசாலை வருடாந்த அமுலாக்கல் திட்டமும் ஒரே விடயங்களாகும். பாடசாலை சுய மதிப்பீடும் (school self assessment - SSA ) பாடாலை சுயமதிப்பீடும் மீளாய்வும் ஒரே விடயங்கள் ஆகும்.



2013 ஆம் ஆண்டு மாகாண மட்ட ஆரம்பப் பாடசாலகளுக்கான நூலகங்களைத் தரப்படுத்தல் தெரிவில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையின் நூலகம்.




2014 ஆம் ஆண்டில் சிறந்த செயற்பாடுகள் கொண்ட பாடசாலைகளில் ஒன்றாகத் தெரிவுசெய்யப்பட்டு கல்வி அமைச்சால் சிறுவர் நேய அணுகுமுறையை எடுத்துக்காட்டுவதற்கான வீடியோ தாயரிப்பதற்கு தெரிவுசெய்யப்பட்ட இலங்கையின் ஒரே தமிழ் பாடசாலை என்ற பெருமையைப் பெற்றது கைதடி கலைவாணி வித்தியாலயம்.

# பாடசாலை பற்றிய அறிமுகம்

பாடசாலை பற்றிய சுருக்கமான விபரம் திட்டத்தின் ஆரம்பத்தில் பின்வருமாறு சுருக்கமாக வழங்கப்பட வேண்டும்.

**1. அடிப்படைத் தகவல்கள்**

FORMAT 1

| | | |
|---|---|---|
| 1 | பாடசாலைப் பெயர் | |
| 2 | பாடசாலை முகவரி | |
| 3 | கோட்ட கல்வி அலுவலகம் | |
| 4 | கிராம உத்தியோகத்தர் பிரிவும் இலக்கமும் | |
| 5 | உள்ளூராட்சி சபை | |
| 6 | பிரதேச செயலர் பிரிவு | |
| 7 | பாடசாலைக் குறியீட்டு இலக்கம் | |
| 8 | தொகை மதிப்பீட்டு இலக்கம் | |
| 9 | பரீட்சை இலக்கங்கள் | |
| 10 | பாடசாலை வகை | |
| 11 | வகுப்புகளின் பரம்பல் | |
| 12 | மொழிமூலம் | |
| 13 | இடஅமைவு (நகரம் / கிராமம்) | |
| 14 | தொலைபேசி இலக்கம் | |
| 15 | அலுவலகம் | |
| 16 | அதிபரின் இருப்பிடம் | |
| 17 | அதிபரின் கைத்தொலைபேசி | |
| 18 | தொலைநகல் இலக்கம் | |
| 19 | மின்னஞ்சல் முகவரி | |
| 20 | இணையத்தள முகவரி | |

**வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுமதிக்கு வழங்கப்படும் திட்டத்தில் பாடசாலையின் பின்னணி, பாடசாலையின் வரலாறு என்பவற்றை உள்ளடக்கத் தேவையில்லை. ஆனால் மாகாண கல்வித் திணைக் களத்திற்கோ, வேறு பாடசாலை பற்றிய தகவலை அறியாத தரப்பினருக்கோ வழங்கப்படும் திட்டத்தில் அவற்றை உள்ளடக்க வேண்டும்.**

2. மாணவர் பற்றிய தகவல்கள்

பகுதி வாரியாக மாணவர் தொகையும் பால் நிலையும்

FORMAT ②

| வகுப்பு ஆரம்பபகுதி | பிரிவு 1 | | | பிரிவு 2 | | | பிரிவு 3 | | | ஆண் மொத்தம் | பெண் மொத்தம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | | | |
| 1 | | | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | | | |
| 4 | | | | | | | | | | | | |
| 5 | | | | | | | | | | | | |
| மொத்தம் 1 | | | | | | | | | | | | |

FORMAT ③

| வகுப்பு ஆரம்பபகுதி | மதம் | | | | மொழி | | | விசேட | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சைவம் | கத்தோலிக்கம் | கிறிஸ்தவம் | இஸ்லாம் | தமிழ் | ஆங்கிலம் | இரு மொழி | உடற் குறைபாடு | உளக் குறைபாடு | தாயை இழந்தோர் | தந்தையைஇழந்தோர் | பெற்றோரை இழந்தோர் | வறுமை |
| 1 | | | | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | | | | |
| 4 | | | | | | | | | | | | | |
| 5 | | | | | | | | | | | | | |
| மொத்தம் 1 | | | | | | | | | | | | | |

Child Friendly Information

### சிறுவர்நேயப் பாடசாலை

**சர்வதேச சிறுவர்உரிமைகள் பிரகடனத்தின்படி சகல பிள்ளைகளதும் சகல உரிமைகளையும் செயல்ரீதியில் நிறைவேற்றுவது சிறுவர்நேயப் பாடசாலையாகும்.**

**– சிறுவர் நேய அணுகுமுறை தொடர்பான ஆலோசனை வழிகாட்டி 2013**

## FORMAT ④

| கனிஷ்ட இடைநிலை | பிரிவு 1 | | | பிரிவு 2 | | | பிரிவு 3 | | | ஆண் மொத்தம் | பெண் மொத்தம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | | | |
| 6 | | | | | | | | | | | | |
| 7 | | | | | | | | | | | | |
| 8 | | | | | | | | | | | | |
| 9 | | | | | | | | | | | | |
| மொத்தம் 2 | | | | | | | | | | | | |

## FORMAT ⑤

| கனிஷ்ட இடைநிலை | மதம் | | | | மொழி | | | விசேட | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சைவம் | கத்தோலிக்கம் | கிறிஸ்தவம் | இஸ்லாம் | தமிழ் | ஆங்கிலம் | இரு மொழி | உடற் குறைபாடு | உளக் குறைபாடு | தாயை இழந்தோர் | தந்தையைஇழந்தோர் | பெற்றோரை இழந்தோர் | வறுமை |
| 6 | | | | | | | | | | | | | |
| 7 | | | | | | | | | | | | | |
| 8 | | | | | | | | | | | | | |
| 9 | | | | | | | | | | | | | |
| மொத்தம் 2 | | | | | | | | | | | | | |

**Child Friendly Information**

**சிறுவர் நேயப் பாடசாலையென்பது......**

- மகிழ்ச்சியானதும் ஆரோக்கியமானதுமான பிள்ளைகள் உள்ள,
- அன்பு, ஆர்வத்துடன் கற்பிக்கும் ஆசிரியர்கள் உள்ள,
- பாடசாலை சமூகத்திடம் உதவி ஒத்தாசை பெறுகின்ற,
- பிள்ளைகளை அவர்களின் உச்சநிலைக்கு இட்டுச் செல்கின்ற,
- பாதுகாப்பான, சுகாதாரமான சூழலைக் கொண்ட,

.............. இடமாகும்

– சிறுவர் நேயப் பாடசாலை –2005

## FORMAT ⑥

| சிரேஷ்ட இடைநிலை 1 | பிரிவு 1 | | | பிரிவு 2 | | | பிரிவு 3 | | | ஆண் மொத்தம் | பெண் மொத்தம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | | | |
| 10 | | | | | | | | | | | | |
| 11 | | | | | | | | | | | | |
| மொத்தம் 2 | | | | | | | | | | | | |

## FORMAT ⑦

| சிரேஷ்ட இடைநிலை 1 | மதம் | | | | மொழி | | | விசேட | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சைவம் | கத்தோலிக்கம் | கிறிஸ்தவம் | இஸ்லாம் | தமிழ் | ஆங்கிலம் | இரு மொழி | உடற் குறைபாடு | உளக் குறைபாடு | தாயை இழந்தோர் | தந்தையைஇழந்தோர் | பெற்றோரை இழந்தோர் | வறுமை |
| 10 | | | | | | | | | | | | | |
| 11 | | | | | | | | | | | | | |
| மொத்தம் 3 | | | | | | | | | | | | | |

Child Friendly Information

### சிறுவர் உரிமையை பாதுகாக்கும் பொறுப்பு

- சிறுவர்களிடத்து விசேட பாதுகாப்பும் விசேட கண்காணிப்பும் காட்டப்படுத்தல் வேண்டும் எனச் சிறுவர் உரிமைகள் பட்டயத்தின் 18ம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- தாய், தந்தை இருவர் மீதும் சிறுவர்களை வளர்த்தெடுத்து அபிவிருத்தி செய்தல் தொடர்பான சமமான பொறுப்பு காணப்படுகின்றது.
- சூழ்நிலைக்கேற்ப இப் பொறுப்பானது சட்டபூர்வமான பொறுப்பாளர்களையும் பாதுகாவலர்களையும் சாரும். அவர்கள் எப்போதும் பிள்ளைகளின் நலன்கருதிச் செயற்படுத்தல் வேண்டும்.

## FORMAT 8

| வகுப்பு சிரேஷ்ட இடைநிலை - 2 | பிரிவு 1 | | | பிரிவு 2 | | | பிரிவு 3 | | | ஆண் மொத்தம் | பெண் மொத்தம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | | | |
| 12-கலை | | | | | | | | | | | | |
| -வர்த்தகம் | | | | | | | | | | | | |
| - உயிரியல் விஞ்ஞானம் | | | | | | | | | | | | |
| - பௌதீக விஞ்ஞானம் | | | | | | | | | | | | |
| - தொழில்நுட்பம் | | | | | | | | | | | | |
| 13-கலை | | | | | | | | | | | | |
| -வர்த்தகம் | | | | | | | | | | | | |
| - உயிரியல் விஞ்ஞானம் | | | | | | | | | | | | |
| - பௌதீக விஞ்ஞானம் | | | | | | | | | | | | |
| - தொழில்நுட்பம் | | | | | | | | | | | | |
| மொத்தம் 4 | | | | | | | | | | | | |

## FORMAT 9

| வகுப்பு கனிஷ்ட இடைநிலை-2 | மதம் | | | | மொழி | | | விசேட | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சைவம் | கத்தோலிக்கம் | கிறிஸ்தவம் | இஸ்லாம் | தமிழ் | ஆங்கிலம் | இரு மொழி | உடற் குறைபாடு | உளக் குறைபாடு | தாயை இழந்தோர் | தந்தையைஇழந்தோர் | பெற்றோரை இழந்தோர் | வறுமை |
| 12-கலை | | | | | | | | | | | | | |
| -வர்த்தகம் | | | | | | | | | | | | | |
| - உயிரியல் விஞ்ஞானம் | | | | | | | | | | | | | |
| - பௌதீக விஞ்ஞானம் | | | | | | | | | | | | | |
| - தொழில்நுட்பம் | | | | | | | | | | | | | |
| 13-கலை | | | | | | | | | | | | | |
| -வர்த்தகம் | | | | | | | | | | | | | |
| - உயிரியல் விஞ்ஞானம் | | | | | | | | | | | | | |
| - பௌதீக விஞ்ஞானம் | | | | | | | | | | | | | |
| - தொழில்நுட்பம் | | | | | | | | | | | | | |
| மொத்தம் 4 | | | | | | | | | | | | | |

## FORMAT 10

| வகுப்பு ஆரம்பபகுதி | பிரிவு 1 | | | பிரிவு 2 | | | பிரிவு 3 | | | ஆண் மொத்தம் | பெண் மொத்தம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | | | |
| மொத்தம் 1 | | | | | | | | | | | | |
| மொத்தம் 2 | | | | | | | | | | | | |
| மொத்தம் 3 | | | | | | | | | | | | |
| மொத்தம் 4 | | | | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | | | | |

Important

1. விசேட தேவையுள்ள மாணவர்கள் மருத்துவரீதியாக உறுதிப்படுத்தப்பட்டவர்களாக இருக்க வேண்டும். பாடசாலை குறித்த மாணவரிற்கு முறையாக கல்வி வழங்கும் வசதிகளை கொண்டிருக்க வேண்டும்.
2. கடந்த வருடங்களில் மாணவர் மொத்ததொகைகளுடன் இவ்வருட மொத்த தொகைகளை ஒப்பிட்டு வேறுபடுவதற்கான காரணங்களைச் சுருக்கமான குறிப்பாக காட்ட வேண்டும்

## FORMAT 11

**3. ஆசிரியர் பற்றிய தகவல்கள்**

| தொடர் இல | ஆசிரியர் பெயர் | பால் நிலை | குடியியல் நிலை | நியமன வகை | தொழிற் தகைமை | கல்வித் தகைமை | கடமை புரியும் பிரிவு | பிறந்த திகதி | முதல் நியமன திகதி | இப் பாடசாலை நியமன திகதி | கற்பிக்கும் பிரதான பாடம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | | |

Important

1. ஆசிரியர்கள் ஆரம்பப்பிரிவு, கனிஷ்ட இடைநிலை, சிரேஷ்ட இடைநிலை என வேறுபடுத்திக் காட்டப்பட வேண்டும்.
2. பின்னிணைப்பாக ஆசிரியர் நேரஅட்டவணை எதிர்வரும் வருடத்திற்கானது காட்டப்பட வேண்டும்.

**4. கல்வி சாரா ஊழியர் பற்றிய தகவல்கள்**

**FORMAT 12**

| தொடர் இல | ஊழியர் பெயர் | பால் நிலை | குடியியல் நிலை | பிறந்த திகதி | கல்வித் தகைமை | முதல் நியமன திகதி | நியமன வகை | கடமை புரியும் பிரிவு | இப் பாடசாலை நியமன திகதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | |
| 2 | | | | | | | | | |
| 3 | | | | | | | | | |

**5. கல்வி அடைவு பற்றிய தகவல்கள்**

**5.1. ஆரம்ப வகுப்புகளில் தேர்ச்சிகளை (ELC) அடைந்த மாணவர்களுக்கான புள்ளிகள்**

**FORMAT 13**

| முதன்மைநிலை | ஒரே தடவையில் பூர்த்திசெய்த தேர்ச்சிகளின் வீதம் | | |
|---|---|---|---|
| | தவணை 1 | தவணை 2 | தவணை 3 |
| 1 - தரம் 1 | | | |
| - தரம் 2 | | | |
| 2 - தரம் 3 | | | |
| - தரம் 4 | | | |
| 3 - தரம் 5 | | | |

Child Friendly Information

### சிறுவர் உரிமையைப் பாதுகாக்கும் அரச நிறுவனங்கள்.

இலங்கையில் சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கும்பொருட்டு சட்ட ஏற்பாடுகளும் அச்சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு பல நிறுவனங்களும் செயற்படுகின்றன. அவ்வாறு செயற்படும் நிறுவனங்கள் கீழே தரப்படுகின்றது.

1) தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை.

2) மாவட்ட சிறுவர் அபிவிருத்தி சபை.

3) பொலிஸ் மகளிர் மற்றும் சிறுவர் நடவடிக்கைப் பணியகம்.

5) தொழிற் திணைக்களம்.

6) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

## 5.2. கணிப்பீட்டு வேலைத்திட்டம்

**FORMAT (14)**

| முதன்மைநிலை | மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | தவணை 1 | | தவணை 2 | | தவணை 3 | |
| | செய்ய வேண்டிய கணிப்பீடுகள் | செய்யப்பட்ட கணிப்பீடுகள் | செய்ய வேண்டிய கணிப்பீடுகள் | செய்யப்பட்ட கணிப்பீடுகள் | செய்ய வேண்டிய கணிப்பீடுகள் | செய்யப்பட்ட கணிப்பீடுகள் |
| 1 - தரம் 1 | | | | | | |
| - தரம் 2 | | | | | | |
| 2 - தரம் 3 | | | | | | |
| - தரம் 4 | | | | | | |
| 3 - தரம் 5 | | | | | | |

## 5.3. தவணைப் பரீட்சைகளின் புள்ளிகள்

**FORMAT (15)**

| தரம் 3 | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தவணை 1 | | | தவணை 2 | | | தவணை 3 | | |
| பாடம் | வருடம் | தோற்றியோர் | 35க்கு கீழ் பெற்றோர் சதவீதம் | 75க்கு மேல் பெற்றோர் சதவீதம் | தோற்றியோர் | 35க்கு கீழ் பெற்றோர் சதவீதம் | 75க்கு மேல் பெற்றோர் சதவீதம் | தோற்றியோர் | 35க்கு கீழ் பெற்றோர் சதவீதம் | 75க்கு மேல் பெற்றோர் சதவீதம் |
| தமிழ்மொழி | 201.. | | | | | | | | | |
| | 201.. | | | | | | | | | |
| | 201.. | | | | | | | | | |
| கணிதம் | 201.. | | | | | | | | | |
| | 201.. | | | | | | | | | |
| | 201.. | | | | | | | | | |
| சுற்றாடல் | 201.. | | | | | | | | | |
| | 201.. | | | | | | | | | |
| | 201.. | | | | | | | | | |
| ஆங்கிலம் | 201.. | | | | | | | | | |
| | 201.. | | | | | | | | | |
| | 201.. | | | | | | | | | |

**Important**

1. இவ்வாறு தரம் 4 தரம் 5 இற்கு தயாரிக்க வேண்டும்.
2. இவ்வாறு இடைநிலை கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவுப் பாடங்களுக்கும் தயாரிக்க முடியும்
3. இதன் மூலம் வருடரீதியாக பாடவிருத்தியின் போக்கு கணிக்கப்படுகின்றது

**FORMAT 16**

| வருடம் | | 2012<br>3ம் தரம் 2ம் தவணை | | | 2013<br>4ம் தரம் 2ம் தவணை | | | 2014<br>5ம் தரம் 2ம் தவணை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பாடம் | தோற்றியோர் | 35க்கு கீழ்ப் பெற்றோர் சதவீதம் | 75க்கு மேற் பெற்றோர் சதவீதம் | தோற்றியோர் | 35க்கு கீழ்ப் பெற்றோர் சதவீதம் | 75க்கு மேற் பெற்றோர் சதவீதம் | தோற்றியோர் | 35க்கு கீழ் பெற்றோர் சதவீதம் | 75க்கு மேற் பெற்றோர் சதவீதம் |
| தற்போது தரம் 5 இல் உள்ளோர் | தமிழ்மொழி | | | | | | | | | |
| | கணிதம் | | | | | | | | | |
| | சுற்றாடல் | | | | | | | | | |
| | ஆங்கிலம் | | | | | | | | | |
| தற்போது தரம் 4 இல் உள்ளோர் | தமிழ்மொழி | | | | | | | | | |
| | கணிதம் | | | | | | | | | |
| | சுற்றாடல் | | | | | | | | | |
| | ஆங்கிலம் | | | | | | | | | |

Important

1. கனிஷ்ட பிரிவில் இவ்வாறு பொருத்தமான வடிவில் பாடரீதியான அடைவு காடடப்படுதல் வேண்டும் பாடசாலைகள் பண்புசார் விருத்தியில் அடைவு மட்டம் தொடர்பான அட்ட வணைகளைப் பயன்படுத்தலாம்.

### 5.3. பொதுப்பரீட்சை பெறுபேறுகள்

**FORMAT 17**

| வருடம் | புலமைப்பரிசில் பரீட்சை அடைவு மட்டம் (5வருடங்களுக்கு)வருடம் | தோற்றியோர் தொகை | வெட்டுப் புள்ளிகளுக்கு அதிகமாகப் பெற்றோர் | வெட்டுப் புள்ளிகளுக்கு அதிகமாகப் பெற்றோர் சதவீதமாக | 100 புள்ளிகளுக்கு அதிகமாகப் பெற்றோர் | 100 புள்ளிகளுக்கு அதிகமாகப் பெற்றோர் சதவீதமாக | 70 புள்ளிகளுக்குக் குறைவாகப் பெற்றோர் தொகை | 70 புள்ளிகளுக்குக் குறைவாகப் பெற்றோர் சதவீதமாக |
|---|---|---|---|---|---|---|---|---|
| 20..... | | | | | | | | |

Important

1. இவ்வாறு கனிஷ்ட நிலையில் க.பொ.த சாதாரணதர மற்றும் க.பொ.த.உயர்தர பெறுபேறுகள் தயாரிக்கப்பட வேண்டடும்
2. குறைந்தது மூன்று வருடங்களுக்குரிய பொதுப்பரீட்சைப் பெறுபேறு காட்டப்பட வேண்டும்

## கட்டிடங்களின் வகையும் பரப்பும்

**FORMAT 18**

| தொ.இல | கட்டடம் | எண்ணிக்கை | பரப்பு |
|---|---|---|---|
| 1 | வகுப்பறை | | |
| 2 | ஆசிரியர் ஓய்வறை | | |
| 3 | மலசல கூடம் | | |
| 4 | சிறுநீர்க் கழிப்பிடம் | | |
| 5 | நூலகம் | | |
| 6 | கேட்டல், காட்சி அறை | | |
| 7 | கணினி மூலை | | |
| 8 | பிரதான மண்டபம் | | |
| 9 | அலுவலகம் | | |
| 10 | களஞ்சியம் | | |
| 11 | சமையலறை | | |
| 12 | காவலாளி அறை | | |
| 13 | விஞ்ஞான ஆய்வுகூடம் | | |
| 14 | கணினி ஆய்வுகூடம் | | |
| 15 | விவசாய ஆய்வுகூடம் | | |
| 16 | மனையியல் ஆய்வுகூடம் | | |
| 17 | பல் பயன்பாட்டு அறை | | |
| 18 | சித்திர அறை | | |
| 19 | நடன அறை | | |
| 20 | சங்கீத அறை | | |
| 21 | ஆற்றுப்படுத்தல் அறை | | |
| 22 | சுகவீன அறை | | |
| 23 | தொழிநுட்ப ஆய்வுகூடம் | | |
| 24 | தொழில்நுட்ப பீடம் | | |
| 25 | விளையாட்டு அலகு / தொகுதி | | |
| 26 | மாணவர் விடுதி | | |
| 27 | ஆசிரியர் விடுதி | | |
| 28 | அதிபர் விடுதி | | |
| 29 | செயற்பாட்டறை | | |
| 30 | விசேடகல்வி அலகு | | |
| 31 | சிற்றுண்டிச் சாலை | | |
| 32 | முதலுதவி அலகு | | |
| 33 | பற்சிகிச்சை அலகு | | |
| 34 | வாகனத் தரிப்பிடம் | | |
| 35 | காவலாளி நிலையம் | | |
| 36 | விளையாட்ரங்கு | | |
| 37 | திறந்த வெளியரங்கு | | |

## பாடசாலையின் பகுதிகள்

**FORMAT 19**

| தொ.இல | பகுதி | எண்ணிக்கை | பரப்பு |
|---|---|---|---|
| 1 | தோட்டம் | | |
| 2 | மூலிகைத் தோட்டம் | | |
| 3 | பூந்தோட்டம் | | |
| 4 | சிறுவர் விளையாட்டு முற்றம் | | |
| 5 | மைதானம் | | |
| 6 | கற்றற் பூங்கா | | |
| 7 | கோவில் | | |
| 8 | நீர் விளையாட்டிடம் | | |
| 9 | செயற்பாட்டு மேசை | | |
| 10 | முகப்பு வளைவு | | |
| 11 | கிணறு | | |
| 11 | நீர்த்தாங்கி | | |
| 12 | மழைநீர் சேகரிப்பு தொகுதி | | |
| 13 | மதில் | | |
| 14 | பாதுகாப்பு வேலி | | |

பாடசாலைத் தளபாடங்கள் பற்றிய விபரம்

FORMAT 20

| தொ.இல | வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மாணவர் மேசை வகை 1 (ஆரம்பப் பிரிவு) - C வகை | |
| 2 | மாணவர் கதிரை வகை 1 (ஆரம்பப் பிரிவு) - C வகை | |
| 3 | மாணவர் மேசை வகை 2 (ஆரம்பப் பிரிவு) - C வகை | |
| 4 | மாணவர் கதிரை வகை 2 (ஆரம்பப் பிரிவு) - C வகை | |
| 5 | மாணவர் மேசை வகை 3 (இடைநிலைப் பிரிவு) - B வகை | |
| 6 | மாணவர் கதிரை வகை 3 (இடைநிலைப் பிரிவு) - B வகை | |
| 7 | மாணவர் மேசை வகை 4 (இடைநிலைப் பிரிவு) - A வகை | |
| 8 | மாணவர் கதிரை வகை 4 (இடைநிலைப் பிரிவு) - A வகை | |
| 9 | ஆசிரியர் மேசை | |
| 10 | ஆசிரியர் கதிரை | |
| 11 | அலுவலக மேசை | |
| 12 | அலுவலக கதிரை | |
| 13 | நூலக மேசை | |
| 14 | நூலகக் கதிரை | |
| 15 | விஞ்ஞான கூட மேசை | |
| 16 | விஞ்ஞான கூட முக்காலி | |
| 17 | விஞ்ஞானகூட கதிரை | |
| 18 | கணினி மேசை | |
| 19 | கணினி கதிரை | |
| 20 | கரும்பலகை | |
| 21 | வெள்ளைப்பலகை | |
| 22 | பச்சைப்பலகை | |
| 23 | பலகைத்தாங்கி | |
| 24 | புரட்டல் அட்டைத் தாங்கி | |
| 25 | செருகல் அட்டைத் தாங்கி | |
| 26 | வகுப்பறை மறைப்பு | |
| 27 | இறாக்கை | |
| 28 | அலுமாரி | |
| 29 | கோவை அலுமாரி | |

Child Friendly Information

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

சிறுவர் இன்னல்கள் தொடர்பிலான சகல புலனாய்வு மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளின் மேற்பார்வை செய்தல் உட்பட விசேட அதிகாரங்களுடன் 1998 ஆம் ஆண்டு 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்ட ஏற்பாடுகளைக் கொண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நிறுவப்பட்டுள்ளது.

### தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் செயற்பாடுகள்

1. சிறுவர் துஷ்பிரயோகம் பற்றி விசாரணை செய்தல்.
2. சிறுவர் பாதுகாப்பு தொடர்பான சட்டத்தைச் செயற்படுத்தல்.
3. சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக ஆலோசனை வழங்குதல்
4. பாதிக்கப்பட்டவர்களுக்கு சட்ட உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
5. சிறுவர் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளல்.
6. தேசிய மட்டத்தில் சிறுவர் தொடர்பான விழிப்புணர்வூட்டல்.

பாடசாலை உபகரணங்கள் பற்றிய விபரம்

**FORMAT 21**

| தொ.இல | வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கணனி - மேசை | |
| 2 | - மடி | |
| 3 | தட்டச்சு இயந்திரம் | |
| 4 | றோணியோ இயந்திரம் | |
| 5 | போட்டோ கொப்பி இயந்திரம் | |
| 6 | புறஜெக்டர் - ஓவகெட் | |
| 7 | - மல்ரிமீடியா | |
| 8 | - சிலைற் | |
| 9 | பிறின்றர் - லேசர் | |
| 10 | - டொட்மற்றிக்ஸ் | |
| 11 | - இங்ஜெற் | |
| 12 | ஸ்கானர் | |
| 13 | லேமினெற்றிங் இயந்திரம் | |
| 14 | கசற்பிளேயர் | |
| 15 | வானொலிப்பெட்டி | |
| 16 | தொலைக்காட்சி | |
| 17 | சிடி, டிவிடி பிளேயர் | |
| 18 | ஒலி பெருக்கிச் சாதனங்கள் | |
| 19 | இசைக்கருவிகள் | |
| 20 | குளிர்சாதனப் பெட்டி | |
| 21 | தையல் இயந்திரங்ள் | |

Child Friendly Information

**இலங்கைச் சிறுவர் உரிமைகள் பட்டயத்தில் ஏற்கப்பட்டுள்ள சிறுவர் உரிமைகள்**

**Rights Recognized by Declaration of Child Rights of Sri Lanka**

**இருப்பதற்கான உரிமை : (Right to Survival)**

பிள்ளைகளின் வாழ்வுரிமை, சுகாதார வசதிகளும் சேவைகளும், உணவு, சுத்தமான நீர் மற்றும் வீடு உட்பட போதுமான வாழ்வாதார நிலை.

**பாதுகாப்புப் பெறுவதற்கான உரிமை : (Right to Protection)**

பிள்ளைக்கு ஊறு விளைவிக்கக் கூடிய எல்லா வகையான செயற்பாடுகள் மற்றும் தீங்குகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறும் உரிமை, இதன் மூலம் குறிப்பிடப்படுகின்றது. அங்கவீனர், அனாதைச் சிறார், அகதிச் சிறார் உட்பட்ட எல்லாப் பிள்ளைகளுக்கும், எவ்வித வேறுபாடுகளுமின்றி இவ்வுரிமை சமமாக கிடைக்கப் பெறுதல் வேண்டும்.

**பங்குபற்றுதலுதலுக்கும் அபிவிருத்திக்கான உரிமை : (Rights to Development)**

எல்லாச் சிறுவர்களுக்கும் கல்வி, ஓய்வு, பொழுதுபோக்கு, விளையாட்டு, கலாச்சாரம் போன்ற விடயங்களில் ஈடுபடுவதற்கும் உரிமை காணப்படுத்தல் வேண்டும்.

## ஏந்து பிரதேசம் பற்றிய தகவல்கள்

**FORMAT 22**

| கிராமசேவையாளர் பிரிவு | ஆரம்பப்பிரிவு | | | | கனிஷ்ட இடைநிலை | | | | சிரேஷ்ட இடைநிலை-1 | | | | சிரேஷ்ட இடைநிலை-2 | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கிராமசேவகர் பிரிவில் பாடசாலைக்குரிய மாணவர் தொகை | கிராம சேவையாளர் பிரிவில் மாணவர் தொகை | பாடசாலை மாணவரில் கிராமசேவையாளர் பிரிவு மாணவர் வீதாசாரம் | கிராம சேவையாளர் பிரிவு மாணவரில் பாடசாலை மாணவர் வீதாசாரம் | கிராமசேவகர் பிரிவில் பாடசாலைக்குரிய மாணவர் தொகை | கிராம சேவையாளர் பிரிவவல் மாணவர் தொகை | பாடசாலை மாணவரில் கிராமசேவையாளர் பிரிவு மாணவர் வீதாசாரம் | கிராம சேவையாளர் பிரிவு மாணவரில் பாடசாலை மாணவர் வீதாசாரம் | கிராமசேவகர் பிரிவில் பாடசாலைக்குரிய மாணவர் தொகை | கிராம சேவையாளர் பிரிவில் மாணவர் தொகை | பாடசாலை மாணவரில் கிராமசேவையாளர் பிரிவு மாணவர் வீதாசாரம் | கிராம சேவையாளர் பிரிவு மாணவரில் பாடசாலை மாணவர் வீதாசாரம் | கிராமசேவகர் பிரிவில் பாடசாலைக்குரிய மாணவர் தொகை | கிராம சேவையாளர் பிரிவில் மாணவர் தொகை | பாடசாலை மாணவரில் கிராமசேவையாளர் பிரிவு மாணவர் வீதாசாரம் | கிராம சேவையாளர் பிரிவு மாணவரில் பாடசாலை மாணவர் வீதாசாரம் | |
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |
| மொத் | | | | | | | | | | | | | | | | | |

## தொகுதிப் பாடங்களைக் கற்கும் மாணவர் விபரம்

**FORMAT 23**

| வகுப்பு | கணக்கீடும் வணிகக்கல்வியும் | புவியியல் | குடியியல் | முயற்சியாண்மை | இரண்டாம் மொழி (சிங்களம்) | 1ம் தொகுதி பாடத்திற்கான மாணவர்கள் |
|---|---|---|---|---|---|---|
| தரம் 10 | | | | | | |
| தரம் 11 | | | | | | |
| மொத்தம் | | | | | | |

Child Friendly Information

### தகாத உறவு Incest

**(குற்றவியல் சட்டக் கோவையின் 364:அ பிரிவு)**

**முழுமையான அல்லது அது சார்ந்த இரத்த உறவுள்ளவர்கள் அல்லது பிள்ளைகளை தத்தெடுத்தோர் (பெற்றோர் பிள்ளைகள், சகோதர சகோதரிகள், பிற உறவினர்கள்) பிள்ளையுடன் பாலுறவில் ஈடுபடுதல் இதன் மூலம் குறிக்கப்படுகின்றது. இக்குற்றம் புரிந்தோருக்கு ஏழு வருடங்களுக்குக் குறையாததும் மற்றும் 20 வருடங்களுக்கு கூடாததுமான காலத்திற்கு சிறைத்தண்டனையும் மற்றும் அபராதமும் விதிக்கப்படலாம்.**

## FORMAT 24

| வகுப்பு | கர்நாடக சங்கீதம் | சித்திரம் | நடனம் | ஆங்கில இலக்கிய நயம் | தமிழ் இலக்கிய நயம் | நாடகமும் அரங்கியலும் | 2ம் தொகுதி பாடத்திற்கான மாணவர்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| தரம் 6 | | | | | | | |
| தரம் 7 | | | | | | | |
| தரம் 8 | | | | | | | |
| தரம் 9 | | | | | | | |
| தரம் 10 | | | | | | | |
| தரம் 11 | | | | | | | |
| மொத்தம் | | | | | | | |

## FORMAT 25

| வகுப்பு | தகவல் தொழில்நுட்பம் | விவசாயம் | மீன்பிடித் தொழில்நுட்பம் | வடிவமைப்புத் தொழில்நுட்பம் | மனைப் பொருளியல் | சுகாதாரமும் உடற்கல்வியும் | தொடர்பாடல் ஊடகக் கற்கை | 3ம் தொகுதிப் பாடத்திற்கான மாணவர்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| தரம் 10 | | | | | | | | |
| தரம் 11 | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | |

Child Friendly Information

### சிறுவர் உரிமைகள் தொடர்பான இலங்கைச் சட்டங்கள்

1) குற்றவியல் சட்டக் கோவை.

(1995ஆம் ஆண்டு 22ஆம் இலக்கச்சட்டம்:1998ஆம் ஆண்டு 29 ஆம் இலக்கச் சட்டம்).

2) தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டம்.

3) பராமரிப்புச் சட்டம்.

4) இளம் பராயத்தவர் பெண்கள் தொழிற் சட்டம்

5) தொழிற்சாலைக் கட்டளைச் சட்டம்.

6) சிறுவர் இளம்பராயத்தவர் கட்டளைச் சட்டம்.

7) சிறுவர் இளம்பராயத்தவர் தீங்குமிக்க வெளியீடுகள் சட்டம்.

8) வேலையாட்கள் விசேட படிகள் சட்டம்.

9) தொழிலாளர் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டம்.

10) ஆபாச வெளியீடுகள் கட்டளைச் சட்டம்.

11) சிறுவர் மகவேற்புக் கட்டளைச் சட்டம்.

**FORMAT 26**

| பாடம் | பௌதீக விஞ்ஞானம் | | உயிரியல் விஞ்ஞானம் | | உயிரியல் தொழில்நுட்பம் | | பொறியியல் தொழில்நுட்பம் | | வர்த்தகம் | | கலை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 12 | 13 | 12 | 13 | 12 | 13 | 12 | 13 | 12 | 13 | 12 | 13 |
| பௌதீகவியல் | | | | | | | | | | | | |
| இரசாயனவியல் | | | | | | | | | | | | |
| உயிரியல் | | | | | | | | | | | | |
| விவசாயம் | | | | | | | | | | | | |
| இணைந்த கணிதம் | | | | | | | | | | | | |
| உயிரியல் தொழில்நுட்பம் | | | | | | | | | | | | |
| பொறியியல் தொழில்நுட்பம் | | | | | | | | | | | | |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | | | | | | | | | | | | |
| கணக்கீடு | | | | | | | | | | | | |
| வணிகக்கல்வி | | | | | | | | | | | | |
| பொருளியல் | | | | | | | | | | | | |
| புவியியல் | | | | | | | | | | | | |
| அரசறிவியல் | | | | | | | | | | | | |
| அளவையியலும் விஞ்ஞானமும் | | | | | | | | | | | | |
| வரலாறு | | | | | | | | | | | | |
| மனைப் பொருளியல் | | | | | | | | | | | | |
| இந்துசமயம் | | | | | | | | | | | | |
| கத்தோலிக்கம் | | | | | | | | | | | | |
| இந்து நாகரிகம் | | | | | | | | | | | | |
| கிறிஸ்தவ நாகரீகம் | | | | | | | | | | | | |
| சித்திரம் | | | | | | | | | | | | |
| நடனம் | | | | | | | | | | | | |
| சங்கீதம் | | | | | | | | | | | | |
| நாடகம் அரங்கியல் | | | | | | | | | | | | |
| தமிழ் | | | | | | | | | | | | |
| ஆங்கிலம் | | | | | | | | | | | | |
| பொது ஆங்கிலம் | | | | | | | | | | | | |

Child Friendly Information

### சட்டப்படியான பெண்கள் துஷ்பிரயோகம் : (Statutory Rape)

( தண்டனைக் கோவையின் 363(அ) பிரிவு)

16 வயதுக்குக் குறைந்த பெண் சிறுமி ஒருவருடன் உடலுறவில் ஈடுபடுவது இதன் அடிப்படைக் கருத்தாகும். அதாவது ஒரு பெண்ணின் வயது 16 இற்குக் குறைவாக இருக்கும் போது, அவளின் சம்மதத்துடன் அல்லது இல்லாமல் அவளுடன் பாலுறவில் ஈடுபடுவதாகும்.

இக்குற்றத்திற்கு ஏழு வருடங்களுக்கு குறையாததும் இருபது வருடங்களுக்கு கூடாததுமான கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்படுவதுடன், அபராதமும் விதிக்கப்படும்.

FORMAT 27

| வருடம் | வகுப்பு | | | | | | | | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | |
| 201.. | | | | | | | | | | | | | | |
| 201.. | | | | | | | | | | | | | | |
| 201.. | | | | | | | | | | | | | | |
| 201.. | | | | | | | | | | | | | | |
| 201.. | | | | | | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | | | | | | |

Child Friendly Information

## சிறுவர்களுக்குக் கொடூரம் விளைவித்தல் Cruelty to Children
## (தண்டனைக் கோவையின் 308 அ பிரிவு)


சிறுவர் ஒருவரின் சட்ட ரீதியான பொறுப்பு அல்லது பாதுகாப்பைப் பொறுப் பேற்றுள்ள ஒருவர் அப்பிள்ளைக்கு அச்சுறுத்தல் விளைவித்தல், ஊறு விளைவித்தல், கவனியாதிருத்தல் அல்லது அநாதரவாக்கிவிடல் போன்றவற்றில் ஈடுபட்டால் அல்லது பிள்ளை ஒருவருக்கு கண் தெரியாமையை, காது கேளாமையை ஏற்படுத்தல் அல்லது உடலில் ஏதும் உறுப்புக்கு தீங்கு ஏற்படுத்தினால் அல்லது பிள்ளையின் உடல் அல்லது மனச் சுகாதாரத்திற்கு ஊறு ஏற்படக்கூடிய விதத்தில் கொடூரம் விளைவித்தால் அவர் பிள்ளைக்கு எதிராக கொடூரம் விளைவிக்கும் குற்றத்தைப் புரிகின்றார். பிள்ளை ஒருவருக்குக் கொடூரம் புரிதல் குற்றமானது இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத கட்டாய சிறைத் தண்டனை மூலம் தண்டிக்கப்படக் கூடிய குற்றமாகும். தொடக்கத்தில் இக் குற்றத்திற்கு நீதி மன்றத்தினால் ஒத்தி வைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. எனினும் பின்னர் தண்டனைக் கோவையில் ஏற்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் மூலம் கொடுமை விளைவித்தல் பற்றிய வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் நீதவான் நீதிமன்றத்திற்கு இல்லையென்றாக்கப் பட்டதுடன், ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதிக்கும் அதிகாரமும் அகற்றப்பட்டது. கொடூரம் புரிதல் குற்றமானது கட்டாயச் சிறைத் தண்டனை மூலம் தண்டிக்கப்பட வேண்டிய குற்றமாகும்.





2014 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 61.5 வீதமான பிள்ளைகளை வெட்டுப்புள்ளிக்குமேல் புள்ளிபெறவைத்த கல்வயல் சண்முகானந்தா வித்தியாலயத்தின் தரம் 01 மாணவர்களை இணைக்கும் கால்கோள் விழா.





2014 ஆம் ஆண்டுக்கான ஆரம்பப் பிரிவுப் பாடசாலைகளில்

1. கைதடிக்காலைவாணி வித்தியாலயம்,
2. கல்வயல் சண்முகானந்த வித்தியாலயம்,
3. போக்கட்டி அ.த.க வித்தியாலயம்,
4. கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்,
5. கைதடி நாவற்குழி அ.த.க வித்தியாலயம்,
6. கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம்

என்பன சிறந்த செயற்பாடுகளைக்(Best Practice) கொண்ட பாடசாலைகளாக தெரிவுசெய்யப்பட்டன அவற்றில் கைதடி சேதுகாலவர் வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநனர் போட்டியின் காட்சியும், போக்கட்டி அ.த.க பாடசாலையின் வாசிப்பு அறையின் காட்சியும் மேலே காட்டப்பட்டுள்ளது.




மாணவர்களின் அனுபவம் ஊடான கற்றலை மேம்படுத்துவதற்கு வலய மட்டத்தில் சகலபாடசாலை களையும் உள்ளடக்கி நடாத்தப்பட்ட மாணவருக்கான கணிதமுகாமில் கொடிகாமம் அ.த.க பாடசாலையிலும், மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடாசாலையிலும் மாணவர்கள் மகிழ்வுடன் செயற்பாட்டில் ஈடுபடும் காட்சிகள்




2014 ஆம் ஆண்டு வலய மட்டத்தில் சிறந்த சிறுவர் நேய கற்றல் சூழல் கொண்ட பாடசாலைகளாக

1. கல்வயல் சண்முகா வித்தியாலயம்,
2. சராசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம்,
3. மட்டுவில் வடக்கு அ.த.க வித்தியாலயம்,
4. மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம்,
5. சாவகச்சேரி இந்து ஆரம்பபாடசாலை,
6. மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை,
7. வரணி வடக்கு சைவப்பிரகாச விததியாசாலை,
8. கொடிகாமம் திருநாவக்கரசு ஆரம்பப்பாடசாலை,
9. போக்கட்டி அ.த.க பாடசாலை,
10. போக்கட்டி றோ.தக. பாடசாலை

ஆகிய பத்துப் பாடசாலைகள் தெரிவுசெய்யபபட்டன. அவற்றுக்கான விருது வழங்கும் நிகழ்வு ஆசிரியர் தினத்தன்று நடைபெற்றது. அந்நிகழ்வில் மட்டுவில் அ.த.க., மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயங்களின் அதிபர்கள் விருது பெறும் காட்சிகள் மேலே காட்டப்பட்டுள்ளது.

# திட்ட இலக்குப் பற்றிய தகவல்கள்

பாடசாலைத் திட்டத்தின் ஆரம்பத்தில் மகுடவாசகம், தூரநோக்கு, செயல்நோக்கு, விழுமியம் என்பன உள்ளடக்கப்படவேண்டும்

## 1. மகுடவாசகம் Motto

ஒரு நிறுவனத்தின் நோக்கு அல்லது தாற்பரியத்தை எடுத்துக்காட்டும், செயற்பாட்டை உந்தும் உட்கருத்தை அல்லது சிந்தனையை முறையாக சுருக்கி நிறுவனம் ஒன்றை வழிநடத்தும் கோட்பாடுகளினை வெளிப்படுத்தும் சொற்தொடர் மகுடவாசகம் ஆகும்.

**மகுடவாசகத்தின் பண்புகள்**

1. நிறுவன நோக்குப் பற்றி தெளிவான கருத்தை வெளிப்படுத்தல்
2. சுருக்கமானதாக, இலட்சினை மற்றும் ஆவணங்களில் பயன்படுத் தக்கதாக இருத்தல்
3. நேரான கருத்தைக் கொண்டிருத்தல் (எதிர்மறையாக அல்லாமல்)
4. தூண்டலை அல்லது ஊக்கலை ஏற்படுத்தக் கூடியதாக இருத்தல்

## 2. தூரநோக்கு Vision

நிறுவனத்தின் நம்பக்கூடிய ஆனால் உடனடியாக அடையமுடியாத கவர்ச்சிகரமான ஒர் இலட்சிய எதிர்காலம் பற்றிய காட்டுருவே தூரநோக் காகும்

**தூரநோக்கின் பண்புகள்**

1. ஏதிர்காலம் பற்றியது (தூரதிருஸ்டி) அளவு, கால வரையறை அற்றது.
2. நிறுவனத்தின் வழிகாட்டி முழுமையான கருமங்களின் பொழிப்பு.
3. தத்துவ, செயற்பாட்டு, நம்பிக்கை அடிப்படைகளில் நிறுவன எதிர் காலத்தைக் காட்டும்.
4. 3 இலிருந்து 7வருடங்களில் பாடசாலை எவ்வாறு இருக்க வேண்டு மென எடுத்துக்காட்டும்

செயற்பாட்டு ரீதியாக போட்டிகொண்ட, வளர்ச்சியடையும் தன்மை கொண்ட பாடசாலைகளில் மகுடவாசகம் எக்காலத்திற்கும் பொருத்தமான தாக காணப்படும். ஆனால் தூரநோக்கு எக்காலத்கிற்கும் பொருத்தமானதாக பொதுவானதாக அமையாது 10 வருடங்களுள் அடையக்கூடியதாக அமைக்கப்பட வேண்டும்

## 3. செயல்நோக்கம் Mission

ஒரு நிறுவனம் சமூகத்தில் இருப்பதற்கான அடிப்படைக் காரணம் அதாவது ஏனைய நிறுவனங்களில் இருந்து தன்னைப் பிரித்துக் காட்டக்கூடியவாறு தனது நடவடிக்கைகளைச் செயற்பரப்பை எடுத்துக்காட்டுவது செயல்நோக்க மாகும்.

**செயல்நோக்கை உருவாக்குவதற்கான குறிப்புகள்**

1. நிறுவன விழுமியம் (value) , நோக்கம் (purpose) , பலம் (strengths) என்பவற்றை உள்ளடக்கலாம்.
2. விளங்கக்கூடிய தெளிவான மொழியைப் பயன்படுத்த வேண்டும்
3. நிறுவனம் ஏன் செயற்படுகிறது எதை வழங்குகிறது? எதை அடைய எத்தனிக்கிறது? என்பதை உள்ளடக்கலாம்.
4. நிறுவனத்தின் தனித்துவமான அனுகூலங்கள், பயன்கள், மேம்பாடு களை உள்ளடக்கலாம்.
5. நிறுவனத்தின் நீண்டகால வெற்றிக்கான முழுத்தொகுப்புத் தந்திரோ பாயத்தை உள்ளடக்கலாம்.
6. ஊழியர்கள் மற்றும் பங்குதாரரிடம் இருந்து எதிர்பார்க்கப்படும் விசேட திறமை மற்றும் செயற்பாடுகளை உள்ளடக்கலாம்.

**பாடசாலை செயல்நோக்கில் மேற்காட்டிய விடயங்களை பின்வருமாறு காட்டலாம்**

1. மாணவர் யார்?
2. வழங்கப்படும் கல்விச் சேவைகள் எவை?
3. ஏந்துபிரதேசம் எது?
4. பயன்படுத்தப்படும் விசேட கற்பித்தல் தொழில்நுட்பங்கள் எவை?
5. பாடசாலையின் கற்பித்தல் செயற்பாட்டின் நோக்கம் என்ன?
6. பாடசாலை பின்பற்றும் மெய்யியல் (philosophical) அடிப்படை எது?
7. பாடசாலையின் சுயஎண்ணக்கரு (Selfconcept) எவ்வாறானது?
8. பாடசாலையின் பொதுப்படிமம்(Image) என்ன?
9. ஆசிரியர் பற்றிய அக்கறை என்ன?

இவற்றில் முக்கியமான வெளிப்படுத்த வேண்டியவற்றைத் தொகுத்து செயல்நோக்கை உருவாக்கலாம்.

## 4.விழுமியம் Values

பொதுவாக எது சரி அல்லது பிழை என்பதைத் தீர்மானிக்க சமூகத்தில் வழங்கப்பட்டு வரும் மரபு ரீதியான பிற்பாடுகளும் நம்பிக்கைகள் விழுமியங்கள் ஆகும்

**பாடசாலை ஒன்றின் மூலாதார விழுமியம்**

- ஆன்மீகம் - சமயியாக வாழ வழிகாட்டல்
- சமூகம் - அணியாக இயங்குதல்
- தனியாள் விருத்தி - சுய கௌரவம்
- ஒழுக்கம் - தமிழ்ப் பண்பாட்டில் வாழ்தல்

பாடசாலை அடையவிளையும் இலக்காக தூரநோக்கு காணப்படுகிறது. அடைவதற்கான தந்திரோபாயங்களாக செயல்நோக்கு காணப்படுகின்றது. செயற்பாட்டுக்கான வரையறைகளாக விழுமியங்கள் காணப்படுகின்றன. பாடசாலை முதன்மைப்படுத்தும் விழுமியங்களைப் பட்டியற்படுத்திக் காட்டுவது சிறப்பானது.

Important

**பாடசாலைத் திட்டமிடலின் போது கவனத்தில் எடுக்க வேண்டியவை**

- பண்புசார் விருத்திக்கான எட்டுத் துறைகள்
- சிறுவர் நேயத்துக்கான ஆறு பரிமாணங்கள்
- தேசியக் குறிக்கோள்கள் எட்டு
- கல்வி துறைசார் விருத்திச் சட்டகம் மற்றும் வேலைத்திட்டத்தின் தொனிப்பொருள் மூன்று

**திட்டமிடலுக்கான வழிகாட்டல்கள்**

1. பாடசாலை மட்டத் திட்டமிடல் ஆலோசனை வழிகாட்டி (2004.10.01)
2. பாடசாலை அமுலாக்கல் திட்டத்திற்கான வடிவமைப்பு (1983-பகுதி1)
3. பாடசாலை மட்டத்தில் அமுல்படுத்துவதற்கான வருடாந்தத் திட்டத்தின் சட்டக் கோப்பு (1983 பகுதி 2)
4. ஆரம்பவகுப்புக்களுக்கான திட்டமிடல் வழிகாட்டி
5. பாடசாலை மேம்பாட்டுத்திட்டம் வழிகாட்டல் கைநூல் (2014)
6. பாடசாலைத் திட்டமிடல் பற்றிய வழிகாட்டிக் கைநூல் (2013)
7. பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வழிகாட்டல் கைந்நூல்(2013)



2013 ஆம் ஆண்டு தென்மராட்சி கல்வி வலயத்தைச்சேர்ந்த ஆரம்பப் பாடாசலை அதிபர்கள், கிழக்குமாகாணத்தின் சிறந்த சிறுவர்நேயப் பாடசாலைகளை தரிசிக்கும் கல்விச் சுற்றுலாவில் கலந்துகொண்டவர்கள்



2014 ஆம் ஆண்டு தென்மராட்சி கல்வி வலயத்தைச்சேர்ந்த ஆரம்பப்பிரிவு பாடசாலை அதிபர்கள் மத்திய மாகாணத்தின் சிறுவர் நேய அணுமுறை தொடர்பான சிறந்த செயற்பாடுகளையும் பல்மட்ட கற்பித்தற் செயற்பாடுகளையும் பார்வையிடுவதற்காக யுனிசெவ்வின் நிதியுதவியுடன் மேற்கொண்ட பாடசாலைத் தரிசிப்பு

# பாடசாலை மட்ட திட்டங்கள்

## பாடசாலை மட்ட அடிப்படைத் திட்டங்கள்

1. ஐந்து வருடங்களுக்கான உபாயத்திட்டம் - (வேலைத்திட்டம்-programme)

2. வருடாந்த அமுலாக்கல் திட்டம் - (நிகழ்ச்சித்திட்டம் - Project)

3. செயற்பாட்டுத் திட்டங்கள் அல்லது விசேடசெயற்திட்டங்கள்
(செயற்திட்டம் -Action plan or Special Project)

## வேலைத்திட்டம் (ஐந்தாண்டுத்திட்டம்)

ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட பல நிகழ்ச்சிதிட்டங்களின் தொகுப்பு வேலைத்திட்டமாகும். தொடர்ந்து செல்லும் நீண்டகாலப்பகுதியைக் கொண்ட தாகவும் தந்திரோபாய இலக்குகளைக் கொண்டதாகவும் நன்மை வடிவிலான வெளியீட்டைக் கொண்டிருக்கும்.

## பாடசாலை ஐந்தாண்டு உபாயத் திட்டமிடல்

பாடசாலையின் அடுத்த ஐந்து வருடங்களுக்கான குறிக்கோள்கள் இலக்குகளைத் தீர்மானித்து பாடசாலையின் தேவைகளைப் பூர்த்திசெய்யக் கூடிய விழுமியங்களை உறுதிப்படுத்தக் கூடிய மூல மேம்பாட்டுத் தந்திரோபாயங்களை உருவாக்கும் செய்முறையே ஐந்தாண்டுத் உபாயத் திட்டமிடல் ஆகும்

## சுழற்சி முறை ஐந்தாண்டுத் திட்டமிடல்

ஒவ்வொரு வருடமும் முடிவடைந்த வருடத்தை நீக்கிப் புதிதாக ஐந்தாவது வருடத்தை உள்வாங்கி அடுத்த ஐந்தாண்டுகளுக்கு வருடாந்தம் திட்டமிடலை மேற்கொள்ளுதல் சுழற்சி முறை ஐந்தாண்டுத் திட்டமிடலாகும்.

## நிகழ்ச்சித்திட்டம் (ஒரு வருட அமுலாக்கல் திட்டம்)

ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட பல வேலைகளின் (task) தொகுப்பு நிகழ்ச்சித்திட்டமாகும். தற்காலிக குறுகிய காலப்பகுதியைக் கொண்டதாகவும் செயற்பாட்டு இலக்குகளைக் கொண்டதாகவும் தொட்டுணரக்கூடிய அல்லது பார்க்ககூடிய குறிப்பான வெளியீட்டைக் கொண்டிருக்கும்.

## பாடசாலையின் வருடாந்த அமுலாக்கற் திட்டமிடல்

உபாயத்திட்டத்தில் இருந்து அல்லது வேலைத்திட்டத்தில் இருந்து குறித்த ஒரு வருடகாலத்திற்குள் நிறைவேற்ற வேண்டிய குறிக்கோள்களையும் உபாயங்களையும் நோக்கங்களையும் அவற்றிற்கான செய்பாடுகளையும் தெரிவு செய்து நடைமுறைப்படுத்துவதற்கான முற்கூட்டிய வரைவே வருடாந்த அமுலாக் கல் திட்டமாகும்.

## செயற்பாட்டுத்திட்டம் (விசேட செயற்திட்டம்)

ஒரு நிகழ்ச்சித்திட்டத்தில் வேலைசெய்வோரின் செயலாற்றுகை மற்றும் வேலைப்பழக்கங்களை முன்னேற்றுவதற்காக அவர்களின் நேரடி மேற்பார்வை யாளர்களால் உருவாக்கப்படும். குறிப்பானதாகவும் இலக்கை இலகுவாக அடை வதற்கு அந்த நேர பின்னடைவுகளை சமாளிப்பதற்கு செயற்பாடடுத்திட்டம் உருவாக்கப்படும்.

## பாடசாலைமட்ட விசேட நிகழ்ச்சி திட்டம் அல்லது செயற்பாட்டுத் திட்டம்
## Special Projects or Action Plan

பாடசாலையில் வழமையான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டினை மேற்கொள்ளும்போது ஏற்படும் சவால்களை எதிர்கொள்ள உருவாக்கப்பட்ட குறிப்பான இலக்கை அடைய ஒரு வருடத்திலும் குறைந்த கால எல்லையுள் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட தலையீடு பாடசாலை மட்ட செயற்பாட்டுத் திட்டமாகும்.

# பாடசாலைத் திட்டமிடற் செய்ம்முறை

### பாடசாலைச் சுயமதிப்பீடு

கல்வித்திட்டமிடல் மற்றும் பாடசாலை மேம்பாட்டுக்குத் தேவையான தகவல் களைப் பெறுவதற்கு பாடசாலையின் அடைவுதொடர்பாக பாடசாலைச் சமூகத்தால் மேற்கொள்ளப்படும் முறையான முழுமையான மதிப்பீட்டுச் செய்முறை பாடசாலை சுயமதிப்பீடு எனப்படும்.

### பாடசாலை மீளாய்வு

பாடசாலை சுயமதிப்பீடு மற்றும் வெளிவாரி மதிப்பீடுகள் மூலம் பெறப்பட்ட தகவல்களை தகவல்களை பகுப்பாய்வு செய்து முன்னைய வருடப் பகுப்பாய் வுடனும் ஒப்பிட்டு பெறுமதியான தகவல்களை பெற்றுக் கொள்ளும் செய்ம்முறை பாடசாலை மீளாய்வு எனப்படும்

### சுயமதிப்பீடு மற்றும் மீளாய்வைப் பயன்படுத்தி உபாயத்திட்டத்தை உருவாக்கல்

1. பாடசாலையின் பலவீனங்கள், தேவைகள், எதிர்பார்ப்புகள், சவால்கள், அச்சுறுத்தல்கள் என்பவற்றைத் துறைரீதியாகத் தொகுத்தல்
2. தொகுக்கப்பட்டதில் ஒத்தவிடயங்களை ஒன்றாக்கி முக்கியத்துவ அடிப்படை யில் ஒழுங்குபடுத்துதல்
3. ஐந்து வருடங்களில் நிறைவேற்ற வேண்டிய நிறைவேற்ற முடியுமான விடயங் களைத் தெரிவுசெய்தல்
4. தெரிவு செய்த விடயங்களை நோக்கங்களாக மாற்றியமைத்தல்
5. நோக்கங்களில் அடங்கும் குறிக்கோள்களை வரையறுத்தல்
6. கால அடிப்படையில் முன்னுரிமை கொடுத்து குறிக்கோள்களை ஒழுங்கு படுத்தல்

# பாடசாலை திட்டமிடல் செய்முறையின் படிமுறைகள்

1. தூரநோக்கு **Vision**
2. செயல்நோக்கம் **Mission**
3. விழுமியங்கள் **Values**
4. பிரச்சினை **Problem**
5. குறிக்கோள் **Goal**
6. உபாயம் **Strategy**
7. நோக்கம் **Objective**
8. செயற்பாடு **Activity**
9. குறிகாட்டி **Indicator**

**சுய மதிப்பீடும் மீளாய்வும்**

தமது செயலாற்றுகையை விளங்கிக் கொள்ளுதல்

**பாடசாலை உபாயத் திட்டம்**

தூரநோக்கு மற்றும் இலக்குகளை அடையாளம் காணுதல்

**பாடசாலை வருடாந்த அமுலாக்கல் திட்டம்**

பாடசாலை விருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

**வருடாந்த செயற்பாட்டு அறிக்கை**

பாடசாலை செயலாற்றுகையை அறிக்கைப்படுத்துதல்

**FORMAT 28**

| தலைப்பு Theme | அடிப்படைப் பிரச்சினை Baseline problem | குறிக்கோள் Goal | உபாயம் Strategie | நோக்கம் Objective | செயற்பாடு Activity | காலம் Timeframe | நிதிமூலம் Source of Funding | நிதி மதிப்பீடு - மீண்டெழும் Estimate Cost - Recurrent | நிதி மதிப்பீடு - மூலதனம் Estimate Cost - Capital | குறிகாட்டி Indicater | விளைவு Output | பயன் Outcome | பொறுப்பான குழு Responsibility | வகைசொல்பவர் Accountable Person |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| | | | | | | | | | | | | | | |

*Important*

ஐந்தாண்டு திட்டம் பின்வருமாறு கான்ற் அட்டவணையில் காட்டப்படும். அதில்காணப்படும் நிழற்றப்பட்ட நிரல்கள் தரப்பட்டவிடயங்களாக இருக்கும் ஏனையவை பாடசாலையால் தயாரிக்க வேண்டியவையாகும்.

## தலைப்பு Theme

திட்டமிடல் சம்பந்தமான பிரதான துறைகள் திட்டமிடல் சம்பந்தமான தலைப்பாக அமையும் பாடசாலையொன்று பின்வரும் மூன்று தலைப்புகளின் கீழ் திட்டமிடலை மேற்கொள்ள முடியும்.

1. பொது நிர்வாகம்
2. மனித, பௌதீக வள முகாமை
3. கலைத்திட்ட முகாமை

## அடிப்படைப் பிரச்சினை Baseline problem

எதிர்பார்க்கும் நிலைக்கும் தற்போதய நிலைக்கும் இடையிலான இடைவெளி பிரச்சினையாகும்.

## குறிக்கோள் Goal

குறித்த ஒரு வேலைத்திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டம் அல்லது செயற்பாட்டுத் திட்டம் நிறைவேற்ற உள்ள முழுமையான விடயங்களையும் உள்ளடக்கிய வாசகம் குறிக்கோளாகும்.

### பிரச்சினை problem

- கணிசமான மாணவர்கள் வகுப்புக்குரிய தேர்ச்சியை அடையவில்லை
- பொதுபரீட்சைப் பெறுபேறு முழுநாட்டினதும் பெறுபேற்று வீதாசாரத்திலும் கணிசமான அளவு பின்தங்கியுள்ளது.
- கற்றல் கற்பித்தல் செய்ம்முறையில் மாணவர் போதுமான ஆர்வத்தைக் காட்டவில்லை

**குறிக்கோள்**

"முறைசார் கலைத்திட்ட முகாமை"

(கற்றல் விளைவை அதிகரிக்கக்கூடிய செயற்றிட்டங்கள் மற்றும் செயற்பாடுகளைக் கொண்ட பொருத்தமான கற்பித்தல் தலையீடு)

## உபாயம் Strategie

குறிக்கோளை அடைவதற்கான வழிமுறைகளாகவும் நீண்டகாலத்தைக் கொண்டதாகவும் உள்ள அடிப்படைச் செயற்பாடுகள் ஆகும்.

**குறிக்கோள்**

"முறைசார் கலைத்திட்ட முகாமையை மேம்படுத்தல்"

**உபாயம்**

1. மாணவர் அடைவுமட்டத்தை உயர்த்துதல்
2. மாணவரிடம் பண்பாட்டு விழுமியங்கள் தொடர்பான உணர்வை வலுப்பெறச் செய்தல்
3. போசாக்கு மட்டத்தைப் போசாக்கற்ற மாணவரிடம் அதிகரித்தல்

## நோக்கம் Objective

குறிப்பான, கால வரையறைக்கு உட்பட்ட, உபாயத்தை அடைவதற்கான நடவடிக்கைகள் நோக்கங்கள் ஆகும்.

**நோக்கங்கள் கொண்டிருக்க வேண்டிய பண்புகள் SMART**

| | |
|---|---|
| Specific | - குறிப்பானது |
| Measurable | - அளவிடக்கூடியது |
| Acceptable | - ஏற்க்கக்கூடியது |
| Relevant | - பொருத்தமானது |
| Timely | - நேரவரையறையுள்ளது |

S - specific, significant, stretching
M - measurable, meaningful, motivational
A - agreed upon, attainable, achievable, acceptable, action-oriented
R - realistic, relevant, reasonable, rewarding, results-oriented
T - time-based, timely, tangible, trackable

**உபாயமும் நோக்கமும் Strategie and Objective**

**உபாயம்**

மாணவர் அடைவுமட்டத்தை உயர்த்துதல்

**நோக்கம்**

1.கணித பாடாத்தில் 35 புள்ளிகளுக்கு குறைவாக பெற்ற மாணவர்களில் 80 வீதமானவர்களை 50 புள்ளிகளுக்கு மேல் பெறவைத்தல்

2. வகுப்பு ரீதியாக அடையாளம் காணப்பட்ட மெல்லக்கற்போரின் வாசிப்பு மட்டத்தைக் குறித்த வயதுக்குரிய தேர்ச்சி நிலையை அண்மிக்கச் செய்தல்

## விளைவு Output

திட்டத்தைச் செயற்படுத்தும் போது கிடைக்கும் அளவிடக்கூடிய உடனடி வெளியீடு விளைவாகும். இது "நாங்கள் என்ன செய்தோம்" என்ற வினாவின் பதிலாக (செயற்பாடுகள், பங்குபற்றுனர்) காணப்படும். இது நோக்குடன் (objective) சம்மந்தப்பட்டது

## பயன் Outcome

திட்டத்தைச் செயற்படுத்தும் போது கிடைக்கும் பண்புரீதியான நீண்டகால மாற்றம் பயனாகும். இது "அங்கே என்ன மாற்றம் ஏற்பட்டது" என்ற வினாவின் பதிலாக (கற்றல், செயல், நிலைமை) காணப்படும். இது குறிக்கோளுடனும் (Goal) உபாயத்துடனும் **(Strategie)** சம்மந்தப்பட்டது

## செயற்பாடு Activity

நோக்கத்தைப் பூர்த்திசெய்ய நிறைவேற்றப்பட வேண்டிய நடவடிக்கைகள் செயற்பாடுகள் எனப்படும். செயற்பாடுகளும் நோக்கத்தின் பண்புகளை கொண்டிருக்கும்.

## நோக்கமும் செயற்பாடும் Objective And Activity

**நோக்கம்**

கணித பாடாத்தில் 35 புள்ளிகளுக்கு குறைவாக பெற்ற மாணவர்களில் 80 வீதமானவர்களை 50 புள்ளிகளுக்கு மேல் பெறவைத்தல்

**செயற்பாடு**

- மாதாந்தம் மாணவருக்கு முற்சோதனை மற்றும் பிற்சோதனைகளை ஒழுங்குசெய்தல்
- வாராந்த வேலைத் தாள்களை வழங்குதல்
- தேவையான மாணவர்க்குப் பரிகாரக் கற்பித்தலில் ஈடுபடல்

## பொறுப்பான குழு Responsibility

திட்டத்தில் குறித்த செயற்பாட்டை நடைமுறைப்படுத்தும் பாடசாலையில் சுற்றுநிருபங்களுக்கு அமைவாக ஏற்படுத்தப்பட்ட குழுக்கள் பொறுப்பான குழு எனப்படும்.

## வகைசொல்பவர் Accuntable Person

திட்டத்தில் குறித்த செயற்பாட்டை நடைமுறைப்படுத்தும் குழுவின் திட்டநிறைவேற்றல் தொடர்பாக பொறுப்புக்கூறும் அங்கத்தவர் வகை சொல்பவர் ஆவார்.

## குறிகாட்டி Indicator

- அனுபவம்சார் அவதானிப்பின் பெறுபேறு குறிகாட்டியாகும். இது உண்மை நிலையை அளவிட்டுக் காட்டும்

## செயற்பாடும் குறிகாட்டியும் Activity and Indicator

**செயற்பாடு**

சராசரி மாணவர் அடைவை எல்லாப் பாடங்களிலும் 2% தத்தால் அதிகரித்தல்.

**குறிகாட்டி**

- ♦ முற்சோதனை பிற்சோதனைப் புள்ளிகள்
- ♦ வழங்கிபூர்த்தி செய்யப்பட்ட வேலைத்தாள்கள்
- ♦ தவணைப் பரீட்சை புள்ளிப் பகுப்பாய்வு

**காலச் சட்டகம் Timeframe**

குறிப்பிட்ட திட்டம் செயற்படுத்தப்படும் வரையறுக்கப்பட்ட காலப்பகுதி காலச்சட்டகம் எனப்படும். இது உபாயத்திட்டத்திற்கு ஐந்தாண்டு காலப்பகுதியாக வும் அமுலாக்கல்திட்டத்திற்கு 12 மாதங்களாகவும் காணப்படும்

**நிதிமூலம் Source of Funding**

திட்டச் செயற்பாட்டுக்கான நிதி எங்கிருந்து பெற்றுக்கொள்ளத் தீர்மானிக் கப்பட்டுள்ளது என்பதைக் காட்டும்

**நிதி மதிப்பீடு - மீண்டெழும் செலவு Estimate Cost - Recurrent**

வருடாந்தம் திரும்ப திரும்ப ஏற்படும் பௌதீக வளமாக மாற்றமடையாத கிரய மதிப்பீகள் மீண்டெழும் கிரய மதிப்பீடு எனப்படும்.

**நிதி மதிப்பீடு - மூலதனச் செலவு Estimate Cost - Capital**

பௌதீக வளங்களை உருவாக்க விருத்திசெய்ய நீண்டகால நோக்கில மைந்த கிரய மதிப்பீடுகள் மூலதன கிரய மதிப்பீடு எனப்படும்

Important

**பாடசாலைத் திட்டமிடல் தொடர்பான முக்கிய குறிப்புகள்**

1. பிரச்சினைகளின் தீர்வே திட்டம் ஆகும். பிரச்சினையை சுயமதிப்பீடும் மற்றும் மீளாய்வு நடவடிக்கை மூலம் இனங்கண்ட பின்பு அதைத் தீர்ப்பதற்கான நோக்கங்களையும் செயற்பாடுகளையும் வரையறுத்துக் கொள்ளுதல் இலகுவான விடயமாகும்.
2. குறிக்கோள் உபாயங்களை வரையறுப்பதில் பலரும் இடர்ப்படுவது அனுபவ உண்மையாகக் காணப்படுகிறது. இது திட்டமிடல் செய்ம்முறையைக் கடினமான சுமையான விடயமாகப் பலரும் கருதக் காரணமாகிறது.
3. இச் சிக்கலை இலகுபடுத்தும் முகமாக இனங்காணப்பட்ட நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளை ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட குறிக்கோள் உபாயங்களைப் பொருத்தி திட்டத்தை அமைத்துக் கொள்ளும் இலகு வழி இங்கு தரப்படுகின்றது.

## பாடசாலைத் திட்டமிடல் தொடர்பான முக்கிய குறிப்புகள்

1. இதற்கமைய ஐந்தாண்டுத் திட்டத்திற்கான குறிக்கோள் உபாயங்களைப் பின்வருமாறு மூன்று துறைகளாகப் பிரிக்கப்பட்டுத் தரப்படுகிறது.
2. மேலும் பாடசாலையில் பலவகையான குழுக்கள் சுற்றுநிருபத்தின் அடிப்படையில் அமைக்கப்படுகின்றன. பாடசாலைத் திட்டத்தில் அவை தொடர்பான விடயத்தை நிறைவேற்றுவது அக்குழுவின் பணியாகும்.
3. குழுக்களின் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் திட்டச் செயற்பாடுகள் ஒப்படைக்கப்பட்டு அவை ஆசிரியர் செயலாற்றுகைத் தரங்கணிப்பீட்டில் உள்ளடக்கப்பட வேண்டும்.
4. குறித்த ஆசிரியர் திட்டச் செயற்பாட்டில் தனக்குரிய பகுதியை நிறைவு செய்யாதபோது அவருக்காக செயலாற்றுகை தரங்கணிப்புக்குரிய சிபார்சு வழங்கப்பட மாட்டாது.
5. ஒவ்வொரு குழு தொடர்பாகவும் ஒருவர் வகைசொல்லும் உறுப்பினராக பொறுப்பளிக்கப்படுவார்.
6. திட்டமிடலில் பௌதீக வள அபிவிருத்தி தொடர்பாக கட்டடங்கள் தேவை யேற்படும்போது பாடசாலை தேவைபட்டியலுக்கு (School Norms) அமைவாக தேவையுள்ளதா என ஆராயவேண்டும்.
7. கட்டடங்கள் தேவைப்படும்போது கட்டடத்திற்கான நிதியீட்டத்தினை பெறுவதற்கான நடவடிக்கை அல்லது கட்டடத்திற்கான அனுமதியை பெற்றுக்கொள்வதை திட்டத்தில் உள்ளடக்கவேண்டும். நிதியீட்டம், கட்டடத்திற்கான அனுமதி என்பன கிடைக்கப்பட்டபின்பே திட்டத்தில் கட்டடம் அமைப்பது உட்படுத்தப்படவேண்டும்.
8. மாணவரின் தொகையுடன் மாற்றம் அடையும் தளபாடம் போன்ற பௌதிக வளங்கள் திட்டத்தில் உள்ளடக்கப்படும்போது எதிர்கால மாணவர் தொகையுடன் ஒப்பிட்டு பற்றாக்குறை இருப்பின் அவற்றைப் பெற்றுக் கொள்ளும் செயற்பாடு திட்டத்தில் விளக்கப்படும்.
9. ஒவ்வொரு வகைத் தளபாடத்திற்கும் வருடாந்தத் தேய்வு கழிக்கப்பட்டு திருத்தம் உள்ளடக்கப்பட்டு கிடைக்கும் தேறிய தளபாடத் தொகை குறித்த தளபாடத்திற்குரிய மாணவர் தொகையுடன் ஒப்பிடப்பிட்டு பற்றாக்குறை இருப்பின் அது திட்டத்தில் உள்ளடக்கப்படும்.
10. தளபாட தேவைபோன்ற விடயங்களிற்கு தேவை கணிப்பீடு அட்டவணை யாக தயாரிக்கப்பட்டு திட்டத்துடன் இணைக்கப்படவேண்டும்.



"“விபுலம் விழா”

2014 ஆம் ஆண்டு தரம் 5 இற்கான புலமைப்பரிசில்ப் பரீட்சையில் தென்மராட்சிக் கல்வி வலயம் வடமாகாணத்தில் இரண்டாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டது. சித்தி பெற்ற மாணவர்களையும் வழிகாட்டிய ஆசிரியர் அதிபர்களையும் பாராட்டும் முகமாக இடம்பெற்ற வலயமட்ட பாராட்டு விழாவும் ஆரம்பக் கல்வி மாணவருக்கான விழுமியக் கல்வி தொடர்பான வகுப்பறைச் செயற்பாடுகளை உள்ளடக்கிய “விழுமியம்” நூல் வெளியீடும் இவ்விழாவில் இடம்பெற்றது.






2014 இல் வேள்ட்விஷன் அனுசரணையுடன் சிறுவர் உரிமை தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் வலய மட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட ஊர்வலத்தின் காட்சி



2014 ஆம் ஆண்டு விசேட தேவை உள்ள மாணவர்களுக்கு சிறப்பான கல்விச்சூழலை வழங்குவதற்கு சாவகச்சேரி சக்தி அம்மன் ஆரம்பபாடசாலையில் அமைக்கப்பட்ட விசேட கல்வி அலகில் மாணவர் விருப்புடன் கல்வி பயிலும் காட்சியும்

# பாடசாலைத் திட்டமிடற் செய்ம்முறை

திட்டமிடல் துறைகளும் அவற்றுக்கான குறிக்கோள்களும் உபாயங்களும் கீழே அட்டவணையில் தரப்படுகிறது. தரப்பட்ட உபாயங்களில் பாடசாலைக்கு பொருத்தமான உபாயங்களிற்கு (உங்கள் பாடசாலையின் அடையாளம் காணப் பட்ட பிரச்சினையுடன் சம்மந்தப்பட்ட) நோக்கங்களையும் செயற்பாடுகளையும் தீர்மானிப்பதன் மூலம் இலகுவாக திட்டமிடலின் பிரதான செயற்பாடுகளை பூர்த்தி செய்யலாம்.

## துறை 1 - பொது நிர்வாகம்

| குறிக்கோள் | உபாயம் |
|---|---|
| தந்திரோபாய முகாமையை மேம்படுத்தல் | தூரநோக்கு, செயல்நோக்கு மீளாய்வு செய்தல் |
| | ஐந்தாண்டுத் திட்டமிடல் |
| | வருடாந்த அமுலாக்கல் திட்டமிடல் |
| | பாடசாலை நாட்காட்டி தயாரித்தல் |
| | பாடசாலை நேரஅட்டவணை தயாரித்தல் |
| அலுவலக முகாமையை மேம்படுத்தல் | பாடசாலை மேம்பாட்டுத்தை நடைமுறைப்படுத்தல் |
| | புதிய மாணவரைச் சேர்த்தல் |
| | பதிவேடுகளைப் பராமரித்தல் - 5 “S” முறைமை |
| சமூகஉறவுவை மேம்படுத்தல் | பழைய மணவர் சங்கத்தைச் செயற்படுத்தல் |
| | நலன் விரும்பிகள் வளவாளர்களைப் பயன்படுத்தல் |
| | பெற்றோர் பங்குபற்றலை உயர்த்தல் |
| | அரச நிறுவனங்களிடம் இருந்து உதவி பெறல் |
| | அரச சார்பற்ற நிறுவனங்களிடம் உதவி பெறல் |

## துறை 2 - மனித, பௌதிக வள முகாமை

| குறிக்கோள் | உபாயம் |
|---|---|
| பாடாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தியை மேம்படுத்தல் | வழமையான ஆசிரியர் அபிவிருத்திச் செயற்பாடு |
| | உயர்மட்ட ஆசிரியர் அபிவிருத்திச் செயற்பாடு |
| மனிதவள முகாமையை மேம்படுத்தல் | கல்விசாரா ஊழியர் அபிவிருத்திச் செயற்பாடு |
| | மனிதவளத் தேவையைப் பூர்த்தி செய்தல் |
| | செயலாற்றுகைத் தரங்கணிப்பீட்டுச் செயற்பாடு |
| மாணவர் நலனோம்பலை மேம்படுத்தல் | மாணவர் பங்குபற்றல் தக்கவைத்தல் நடவடிக்கை |
| | சுகாதாரமும் போசணையும் அமுலாக்கல் |
| | ஆலோசனையும் வழிகாட்டலும் செயற்பாடு |
| | தொழில் வழிகாட்டல் செயற்பாடு |
| | பாடசாலைச் சிற்றுண்டிச்சாலையை நடத்துதல் |
| | ஏனைய நலன்புரி சேவைகள் |
| பௌதீகவள முகாமையை மேம்படுத்தல் | பௌதிகவளத் தகவல்களைப் பேணும் காட்சிபடுத்தும் செயற்பாடு |
| | பௌதிகவள பராமரிப்பு செயற்பாடு |
| | பௌதிகவளங்களைப் பெற்றுக்கொள்ளல் |
| | பௌதிகவளங்களைப் பயன்படுத்தல் |

## துறை 3 - கலைத்திட்ட முகாமை

| குறிக்கோள் | உபாயம் |
|---|---|
| முறையான கலைத்திட்ட முகாமையை மேம்படுத்தல் | உள்ளக மேற்பார்வையை அமுலாக்கல் |
| | சாதாரண கற்றல் கற்பித்தல் செயற்பாடு |
| | உயர்மட்ட கற்றல் கற்பித்தல் செயற்பாடு |
| | இரு மொழி கற்பித்தல் செயற்பாடு |
| | தரஉள்ளீட்டுப் பாவனையை உச்சப்படுத்தல் |
| | நூலகப் பயன்பாட்டை உச்சப்படுத்தல் |
| | விசேட தேவையுள்ள மாணவருக்கான செயற்பாடு |
| | விசேட செயற்றிட்டங்கள் |
| அடைவுமட்ட விருத்தியை மேம்படுத்தல் | அத்தியாவசிய கற்றல் தேர்ச்சி அமுலாக்கம் |
| | கணிப்பீடு பரிகாரக் கற்பித்தலும் |
| | தவணைப்பரீட்சைப் பகுப்பாய்வு |
| | பொதுப்பரீட்சைப் பகுப்பாய்வு |
| இணைப்பாடவிதான முகாமையை மேம்படுத்தல் | மன்றங்கள், கழகங்களைச் செயற்படுத்தல் |
| | போட்டிகளுக்கு வழிகாட்டல் |
| | உடற்பயிற்சி நிகழ்ச்சி – மகிழ்வுடன் செயற்படுவோம் |
| | காலைக் கூட்டம் |
| | பாடசாலைமட்ட விளையாட்டு நிகழ்ச்சி |
| | சாரணியம், முதலுதவிப்படை, அனர்த்தமுகாமை அணி |
| | கலை நிகழ்ச்சிகள், பரிசில்நாள் , ஏனையவை |

Child Friendly Information

**சிறுவர் என்பவர்கள் யார் என்பதனை வரையறை செய்யும் சட்டங்கள்.**

1. 18 வயதுக்குட்பட்டவர்களைச் சிறுவர் என வரையறை செய்யும் சட்டங்கள்
    - ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம்
    - இலங்கை தண்டணைச் சட்டக்கோவை
    - அநாதைச் சிறார் கட்டளைச் சட்டம்
    - குடியியல் நடைமுறைக் கோவை
2. 16 வயதுக்குட்பட்டவர்களைச் சிறுவர் என வரையறை செய்யும் சட்டம்
    - தெருச்சுற்றிகள் சட்டப் பிரமாணம் (சிறுமி)
3. 14 வயதுக்குட்பட்டவர்களைச் சிறுவர் என வரையறை செய்யும் சட்டங்கள்
    - சிறுவர் இளம்பராயத்தவர் சட்டம்
    - பெண்கள் தொழிற்சட்டம்
    - தொழிற்சாலைக் கட்டளைச் சட்டம்
    - சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் தொடர்பான சட்டம்
    - தத்தெடுத்தல் கட்டளைச் சட்டம்

## துறைரீதியாக உபாயங்களுக்குப் பொறுப்பான குழுவும் வகைகூறுபவரும்

திட்டமிடலுக்கான உபாயங்களும் அவற்றுக்குப் பொறுப்பான குழுக்களும் வகைசொல்பவரும் கீழே அட்டவணையில் தரப்படுகிறது. திட்டக் கருமங்களை ஏனையோருக்குக் கையளித்துப் பாடசாலையில் உள்ள அனைவரும் பாடசாலை செயற்பாடுகளில் பங்குபற்ற அதிபர் இடமளிக்க வேண்டும்.

### துறை - பொது நிர்வாகம்

| உபாயம் | பொறுப்பான குழு | வகைகூறுபவர் |
|---|---|---|
| தூரநோக்கு, செயல்நோக்கு மீளாய்வு | SDC | அதிபர் |
| ஐந்தாண்டுத் திட்டமிடல் | | |
| வருடாந்த அமுலாக்கல் திட்டமிடல் | | |
| பாடசாலை நாட்காட்டி தயாரித்தல் | SMT | உப அதிபர் |
| பாடசாலை நேரஅட்டவணை தயாரித்தல் | | |
| பாடசாலை மேம்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் | SMT | அதிபர் |
| புதிய மாணவரைச் சேர்த்தல் | SMT | அதிபர் |
| பதிவேடுகளைப் பராமரித்தல் - 5 "S" முறைமை | SMT | உப அதிபர் |
| அலுவலக தொடர்பாடல் | | |
| பழைய மணவர் சங்கத்தைச் செயற்படுத்தல் | SDC | உப அதிபர் |
| நலன் விரும்பிகள் வளவாளர்களைப் பயன்படுத்தல் | | |
| பெற்றோர் பங்குபற்றலை உயர்த்தல் | | |
| அரச நிறுவனங்களிடம் இருந்து உதவி பெறல் | | |
| அரச சார்பற்ற நிறுவனங்களிடம் உதவி பெறல் | | |

Important

- பண்புசார் மதிப்பிடல் பொது நிர்வாகம் அதிபர், சமூகஉறவு உப அதிபர் பொறுப்பில் இருக்கும், இத்துறையைத் திட்டமிட்டு வழிநடத்தும் குழுவின் வகைகூறும் பொறுப்பும் அவர்கள் வசமிருக்கும். குழுவின் அங்கத்தவரிடம் வேலைகள் பொறுப்பளிக்கப்படும் அவை குறித்த ஆசிரியரின் செயலாற்றுகைத் தரங்கணிப்பில் உள்ளடக்கப்படும்.

அதிபர்கள் தமது பாடசாலைக்கும் தேவைக்கும் ஏற்ப குழுக்களையும் வகைகூறுபவர்களையும் மாற்றம் செய்யமுடியும்.

| உபாயம் | பொறுப்பான குழு | வகைகூறுபவர் |
| --- | --- | --- |
| வழமையான ஆசிரியர் அபிவிருத்திச் செயற்பாடு | SBTD குழு | SBTD குழு செயலாளர் |
| உயர்மட்ட ஆசிரியர் அபிவிருத்திச் செயற்பாடு | | |
| கல்விசாரா ஊழியர் அபிவிருத்திச் செயற்பாடு | SMT | உபஅதிபர் |
| மனிதவளத் தேவையைப் பூர்த்தி செய்தல் | SMT | அதிபர் |
| செயலாற்றுகைத் தரங்கணிப்பீட்டுச் செயற்பாடு | SBTD குழு | அதிபர் |
| மாணவர் பங்குபற்றல் தக்கவைத்தல் நடவடிக்கை | வசதிவழங்கும் குழு | குழு நிர்வாக அங்கத்தவர் |
| சுகாதாரமும் போசணையும் அமுலாக்கல் | சுகாதாரக் குழு | பொறுப்பாசிரியர் |
| ஆலோசனையும் வழிகாட்டலும் செயற்பாடு | சிறுவர் பாதுகாப்புக் குழு | ஆலோசனை வழிகாட்டல் பொறுப்பாசிரியர் |
| தொழில் வழிகாட்டல் செயற்பாடு | சிறுவர் பாதுகாப்புக் குழு | ஆலோசனை வழிகாட்டல் பொறுப்பாசிரியர் |
| பாடசாலைச் சிற்றுண்டிச்சாலையை நடத்துதல் | சுகாதாரக் குழு | பொறுப்பாசிரியர் |
| ஏனைய நலன்புரி சேவைகள் | ஒழுக்காற்றுக் குழு | பொறுப்பாசிரியர் |
| பொதிகவளத் தகவல்களைப் பேணும் காட்சிபடுத்து செயற்பாடு | சுற்றாடல் குழு | பொறுப்பாசிரியர் |
| பௌதிகவள பராமரிப்பு செயற்பாடு | அனர்த்த முகாமைக் குழு | பொறுப்பாசிரியர் |
| பொதிகவளங்களைப் பெற்றுக்கொள்ளல் | SDC | அதிபர் |
| பௌதிகவளங்களைப்பயன்படுத்தல் | SMT | உப அதிபர் |

Child Friendly Information

## சிறுவர்களினால் ஒப்பந்தங்களில் ஈடுபடுதல்
## Contract from Children

இளம் வயதினர்களினால் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தங்கள், சட்டத்தின் முன்னிலையில் செல்லுபடியாகாது. இளம் வயதினர்கள் சொத்தொன்றை விற்பதற்காக ஒப்பந்தமொன்றில் ஈடுபடுவதெனின் அதற்காக நீதிமன்றின் அனுமதியுடன் செயற்படுதல் வேண்டும்.

பிள்ளைகளின் பொறுப்பு அண்மைக்கால தீர்மானிக்கப்பட்ட வழக்குத் தீர்ப்புகளின்படி பிள்ளைகள் தந்தை தாயின் பொறுப்பில் வைக்கப்படுதல் வேண்டுமென உறுதியான ஏற்பாடுகள் காண்பிக்கப்படவில்லை.

தரப்பினரின் கோரிக்கை, பிள்ளையின் ஆகக் கூடிய நலன் விண்ணப்பதாரிக்குப் பிள்ளையினைப் போசிப்பதற்கு உள்ள இயலுமைத்தன்மை மற்றும் வேறு சந்தர்ப்பத்துக்குரிய விடயங்களைக் கவனத்திலெடுத்து பொருத்தமான முறையில் கட்டளையிடுவதற்கு நீதிமன்றிற்கு முடியும்.

| உபாயம் | பொறுப்பான குழு | வகைகூறுபவர் |
|---|---|---|
| உள்ளக மேற்பார்வையை அமுலாக்கல் | SMT குழு | பொறுப்பாசிரியர் |
| சாதாரண கற்றல் கற்பித்தல் செயற்பாடு | SMT குழு | பொறுப்பாசிரியர் |
| உயர்மட்ட கற்றல் கற்பித்தல் செயற்பாடு | SMT குழு | பொறுப்பாசிரியர் |
| இரு/மும் மொழி கற்பித்தல் செயற்பாடு | SMT குழு | பொறுப்பாசிரியர் |
| தரஉள்ளீட்டுப் பாவனையை உச்சப்படுத்தல் | SMT குழு | பொறுப்பாசிரியர் |
| நூலகப் பயன்பாட்டை உச்சப்படுத்தல் | நூலக அபிவிருத்திக் குழு | ஆசிரியர் - நிர்வாக அங்கத்தவர் |
| விசேட தேவையுள்ள மாணவருக்கான செயற்பாடு | சிறுவர் பாதுகாப்புக் குழு | ஆலோசனை வழிகாட்டல் பொறுப்பாசிரியர் |
| விசேட செயற்றிட்டங்கள் | SMT குழு | பொறுப்பாசிரியர் |
| அத்தியாவசிய கற்றல் தேர்ச்சி அமுலாக்கம் | SMT குழு | பொறுப்பாசிரியர் |
| கணிப்பீடும் பரிகாரக் கற்பித்தலும் | SMT குழு | பொறுப்பாசிரியர் |
| தவணைப்பரீட்சைப் பகுப்பாய்வு | SMT குழு | பொறுப்பாசிரியர் |
| பொதுப்பரீட்சைப் பகுப்பாய்வு | SMT குழு | பொறுப்பாசிரியர் |
| மன்றங்கள், கழகங்களைச் செயற்படுத்தல் | இணைப் பாடவிதான அபிவிருத்திக் குழு | பொறுப்பாசிரியர் |
| போட்டிகளுக்கு வழிகாட்டல் | சுற்றாடல் குழு | பொறுப்பாசிரியர் |
| உடற்பயிற்சி நிகழ்ச்சிகள்– மகிழ்வுடன் செயற்படுவோம் | இணைப் பாடவிதான அபிவிருத்திக் குழு | பொறுப்பாசிரியர் |
| காலைக் கூட்டம் | ஒழுக்காற்றுக் குழு | பொறுப்பாசிரியர் |
| பாடசாலைமட்ட விளையாட்டு நிகழ்ச்சி | இணைப் பாடவிதான அபிவிருத்திக் குழு | பொறுப்பாசிரியர் |
| சாரணியம், முதலுதவிப்படை, அனர்த்தமுகாமை அணி | சுகாதாரக் குழு அனர்த்த முகாமைக் குழு இணைப் பாடவிதான அபிவிருத்திக் குழு | பொறுப்பாசிரியர் |
| கலை நிகழ்ச்சி, பரிசில்நாள் , ஏனையவை | அழகியல் அபிவிருத்தி குழு இணைப் பாடவிதான அபிவிருத்திக் குழு | பொறுப்பாசிரியர் |

Child Friendly Information

## உடலியில் வன்முறை

தண்டனைச் சட்டக் கோவையில் உடலியல் வன்முறைகள் எனும் தலைப்பின் கீழ் மனிதனின் உடற்கூறுகளுக்கு உபாதை விளைவித்தல், கொடூரமான முறையிலான மிரட்டல், பலாத்காரமாக பெற்றுக் கொள்ளல், காயம் விளைவித்தல், ஒருவரை சட்டவிரோதமாக தடுத்து வைத்தல், பாலியல் வல்லுறவில் ஈடுபடல், முறையற்ற விதத்தில் பயன்படுத்தல் போன்றன இனங்காணப்பட்டுள்ளன.

## உளவியல் பாதிப்புகள்

தண்டனைச் சட்டக்கோவையில் உளவியல் பாதிப்புகள் என்பதன் மூலம் காரசாரமாக ஏசுதலை குறிப்பிடுகிறது. கீழ் மட்டத்திலிட்டுக் கதைத்தல், அவமதிப்பை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகள், பாதிக்கப்பட்டவருக்கு மேலும் மன அழுத்தத்தை ஏற்படுத்தல் போன்றனவும் மேற்சொன்னவற்றுள் அடங்கும்.

## சுழற்சி முறை ஐந்தாண்டுத் திட்டம்

**FORMAT 29**

| | | | காலச் சட்டகம் Timeframe | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| குறிக்கோள் Goal | உபாயம் Strategie | நோக்கம் Objective | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | செலவு மதிப்பீடு Estimate Cost | குறிகாட்டி Indicater |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

## சுழற்சி முறை ஐந்தாண்டுத் திட்டப் பாதீடு

**FORMAT 30**

| துறை | காலம் Timeframe & நிதி மதிப்பீடு Estimate Cost | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2015 | | 2016 | | 2017 | | 2018 | | 2019 | | |
| குறிக்கோள் Goal | மீண்டெழும் - Recurrent | மூலதனம் - Capital | மீண்டெழும் - Recurrent | மூலதனம் - Capital | மீண்டெழும் - Recurrent | மூலதனம் - Capital | மீண்டெழும் - Recurrent | மூலதனம் - Capital | மீண்டெழும் - Recurrent | மூலதனம் - Capital | நிதிமூலம் Source of Funding |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | | | |

Child Friendly Information

### பிள்ளையொன்றைத் தத்தெடுத்து வளர்த்துக் கொள்வது தொடர்பான சட்ட நிலை - Adoption Laws

பிள்ளைகள் இல்லாதவர்களினால் பிள்ளையொன்றினை வளர்த்தெடுப்பதற்குச் சட்டத்தினால் காட்டப்பட்டுள்ள விதத்திலேயே செயற்படுதல் வேண்டும். பெற்றோர்களின் அல்லது பாதுகாப்பாளர் ஒருவரின் விருப்பம் இன்றிப் பிள்ளையொன்றைப் பிள்ளையாக வளர்த்தெடுத்தல் தண்டனைக் கோவையினால் தடைசெய்யப்பட்டுள்ளது.

## சுழற்சி முறை ஐந்தாண்டுத் திட்டப் பாதீடுச் சுருக்கம்

FORMAT 31

| துறை | காலம் Timeframe & நிதி மதிப்பீடு Estimate Cost | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2015 | | 2016 | | 2017 | | 2018 | | 2019 | | |
| குறிக்கோள் Goal | மீண்டெழும் - Recurrent | மூலதனம் - Capital | மீண்டெழும் - Recurrent | மூலதனம் - Capital | மீண்டெழும் - Recurrent | மூலதனம் - Capital | மீண்டெழும் - Recurrent | மூலதனம் - Capital | மீண்டெழும் - Recurrent | மூலதனம் - Capital | நிதிமூலம் Source of Funding |
| துறை 1 | | | | | | | | | | | |
| துறை 2 | | | | | | | | | | | |
| துறை 3 | | | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | | | |

Child Friendly Information

### வீட்டு வன்முறைகளில் இருந்து பாதுகாப்பு Prevention of Domestic Violence

2005 ஆம் ஆண்டின 34 ஆம் இலக்க வீட்டு வன்முறைகளைத் தடுக்கும் சட்டத்தின் பிரகாரம் வீடுகளினுள் பெண்கள் பிள்ளைகள் அல்லது வேறு எவரும் உடல் ரீதியில் அல்லது உள ரீதியில் வன்முறைக்குள்ளாகும் போது இச் சட்டத்தின் கீழ் அந்த எவருக்கும் தமது பிரதேசத்தின் நீதிவான் நீதிமன்றத் திலிருந்து பாதுகாப்புக் கட்டளையொன்றைக் கோர முடியும்.

பாதிக்கப்பட்டவர் 18 வயதுக்குக் குறைவானவராக இருக்கும் போது (When the age of the victim is under 18 years) அப்பிள்ளையின் பாதுகாப்புக்காகப் பிள்ளையின் தந்தைக்குத், தாய்க்கு அல்லது பாதுகாப்பாளருக்குப் பிள்ளை வசிக்கும் இடத்தில் பதிவாகியுள்ள ஒருவருக்குத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருக்கு,ப் பொலிஸ் அலுவலாளர் ஒருவருக்குப் பிள்ளை சார்பாகக் கோரிக்கையொன்றை விடுக்கலாம்.

# வருடாந்த அமுலாக்கல் திட்டம்

**FORMAT 32**

துறை I - ..........................................

குறிக்கோள் - ..........................................

| நோக்கம் Objective | செயற்பாடு Activity | காலம் Timeframe | | | | | | | | நிதிமூலம் Source of Funding | நிதி மதிப்பீடு – மீண்டெழும் Estimate Cost – Recurrent | நிதி மதிப்பீடு – முலதனம் Estimate Cost – Capital | குறிகாட்டி Indicater | பொறுப்பான குழு Responsibility | வகைசொல்பவர் Accountable Person |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாதம் | | 1 | | | | 2 | | | | | | | | | |
| கிழமை | | 1 | 2 | 3 | 4 | 1 | 2 | 3 | 4 | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |

**EXAMPLE**

துறை I - முறையான கலைத்திட்ட முகாமையை மேம்படுத்தல்

குறிக்கோள் - உயர்மட்டகற்றல், கற்றபித்தல் நடைமுறைப்படுத்தல் சுற்றாடல் முதல் 3 அலகு தொடர்பானது.

| நோக்கம் | செயற்பாடு | காலம் | | | | | | | | | | | | பொறுப்பு | செலவு | குறிகாட்டி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | | | |
| மூன்று களப்பயணம் | ஆரம்ப நடவடிக்கை | x | | | | | | | | | | | | | | |
| | அனுமதிபெறல் | | x | | | | | | | | | | | | | |
| | நடைமுறைப்படுத்தல் | | | x | | | | | | | | | | | | |
| ஒரு கண்காட்சி | ஆரம்ப நடவடிக்கை | | | | | x | | | | | | | | | | |
| | தயாரிப்புக்கள் | | | | | | x | | | | | | | | | |
| | ஒழுங்கமைப்பு | | | | | | | x | | | | | | | | |
| | நடைமுறைப்படுத்தல் | | | | | | | x | | | | | | | | |
| மாணவர் சஞ்சிகையாக்கம் | தயாரிப்புவேலைகள் | | | | | | | | x | x | x | | | | | |
| | வெளியீடு காட்சிப்படுத்தல் | | | | | | | | | | x | x | | | | |
| | | | | | | | | | | | | | | | | |

## மாதாந்த அமுலாக்கல் திட்டம் அல்லது செவ்வைபார்த்தல் அட்டவணை அல்லது மாதாந்தச் செலவு மதிப்பீடு

**FORMAT 33**

| குறிக்கோள் Goal | உபாயம் Strategie | நோக்கம் Objective | செயற்பாடு Activity | ஜனவரி மாதம் | | | | நிதிமூலம் Source of Funding | நிதி மதிப்பீடு – மீண்டெடுழும் Estimate Cost – Recurrent | நிதி மதிப்பீடு – மூலதனம் Estimate Cost – Capital | குறிகாட்டி Indicater | பொறுப்பான குழு Responsibility | வகைசொல்பவர் Accountable Person |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 | 4 | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |

## அமுலாக்கல் திட்டத்திற்கான செலவு மதிப்பீடு

**FORMAT 34**

| மாதம் | குறிக்கோள் | செலவு | |
|---|---|---|---|
| | | மீண்டெடுழும் | மூலதனம் |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

**Important**

வருடாந்த அமுலாக்கல் திட்ட மாதிரியில் இரண்டு மாதங்கள் மாத்திரம் காலச்சட்டத்துள் காட்டப்பட்டுள்ளது. திட்டம் தயாரிக்கப்படும்போது பன்னிரண்டு மாதங்கள் உள்ளடக்கப்படல் வேண்டியது அவசியம்.

# நியாயித்தில் சட்டகத்தில் திட்டத்தை முன்வைத்தல்

## நியாயித்தல் சட்டகத்தின் (Logical Framework) தேவைப்பாடு

கல்வி அமைச்சால் வெளியிடப்பட்டிருக்கும் பாடசாலை திட்டமிடல் வழி காட்டல் கைநூலில் திட்டமிடல் மாதிரி அமைப்புக்களில் நியாயித்தல் சட்டகம் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவே சுருக்கமாக நியாயித்தல் சட்டக பயன்பாடு பற்றி நோக்குவோம்.

**1. முறைமைசார்ந்த கருவி** (Systematic Tool)
செயற்திட்டத்திற்கான வளங்கள், செயற்பாடுகள், பெறுபேறுகள் என்பவற்றுக் கிடையிலாக தொடர்பை எடுத்துக்காட்டும் ஒழுங்கமைக்கப்பட்ட சிந்தனை யாக காணப்படும்

2. **காட்சிசார் தொடர்பாடல் கருவி** (Visual Communication Tool)
செயற்திட்டத் தலையீட்டுநியாயத்தை தர்க்கரீதியாக காட்ட பகிர்ந்து கொள்ள உதவும்

3. **மேற்பார்வைக்கான கருவி** (Monitoring Tool)
குறிகாட்டிகள் மற்றும் சரிபார்த்தல் மூலங்கள் ஊடாக முன்னேற்றத்தை அளவிடக்கூடியதாக இருத்தல்

4. **இடர்முகாமைக் கருவி** (Risk Management Tool)
அமுல்படுத்தலில் பாதிப்பை ஏற்படுத்தும் இடர்களை அடையாளம் கண்டு கையாள்வதற்கு உதவும்

**FORMAT 35**

| | குறிகாட்டி **Indicators** | செவ்வை பார்த்தல் உபாயம் **Means of verification** | எடுகோள் **Assumption** |
|---|---|---|---|
| குறிக்கோள் **Goal** | | | |
| பயன் **Outcome** | | | |
| வெளியீடு **Output** | | | |
| செயற்பாடு **Activity** | | | |

## நியாயித்தல் சட்டகத்தின் நிலைக்குத்தான நியாயத் தொடர்பு
[The vertical Logic of LogFrames]

**செயற்பாடு**

செயற்திட்ட விளக்கம் என்ற பகுதியில் அடிமட்டத்தில் செயற்பாடு காணப்படு கிறது. சேற்பாடுகன் சிறப்பாக நிறைவுறும் போது விளைவு(ழுரவிரவ) கிடைக்கும். செற்பாடுகள் பெரும்பாலும் "தயார்செய்தல், செய்தல், நிர்மானித்தல், ஆய்வு செய்தல், பகுப்பாய்வு செய்தல், வடிவமைத்தல், அனுமதிபெறல், ஒழுங்கமைத்தல், காட்சிப்படுத்தல், நடைமுறைப்படுத்தல்" போன்ற சொற்களைக் கொண்டதாக இருக்கும்

**விளைவு அல்லது வெளியீடு**

செயற்திட்ட விளக்கம் என்ற பகுதியில் விளைவு என்பது நேரடியான உடனடி பெறுபேறுகள் விளைவாகும். வெளியீடுகள் சரியாக இருக்கும் போது பயன் (outcome) கிடைக்கும். வெளியீடுகள் அளவிடக்கூடியதாக குறித்துக் காட்டக்கூடிய தாக காணப்படும். விளைவு "பங்குபற்றியோர் நடைபெற்றதடவைகள் வழங்கப்பட்ட தொகை செய்யப்பட்டவிடயங்கள்" என்றவாறாக காணப்படும்.

**பயன்**

செயற்திட்ட விளக்கம் என்ற பகுதியில் செயற்திட்டத்தின் முடிவில் குறிக்கப் பட்ட இலக்குத் தொகுதியினர் பெற்றுக்கொண்ட நன்மைகள் பயன் ஆகும். பயன் குறிக்கோளை, உபாயத்தை அடைவதற்கு பங்களிப்பை வழங்கும். இது "அதிகரிப்பு, உயர்ச்சி, முன்னேற்றம்" என்றவாறாக காணப்படும்

**குறிக்கோள்**

குறிப்பிட்ட துறைக்கு செயற்திட்டம் வழங்கிய பங்களிப்பு குறிக்கோளாக காட்டப்படும். இது துறைசார்ந்த மேம்பாடாக, விருத்தியாக எடுத்துக்காட்டப்படும்.

## நியாயித்தல் சட்டகத்தின் கிடையான நியாயத் தொடர்பு
## (The Horizontal Logic of Logframes)

**நோக்கு செவ்வை பார்த்தல் குறிகாட்டி Objectively Verifiable Indicators (Quantity & Quality) - OVI**

குறிக்கோளின் அடைவுபற்றி பண்பு, அளவு, நேரவரையறை ரீதியாக எடுத்துக்காட்டும் ஆதாரம் நோக்கு செவ்வை பார்த்தல் குறிகாட்டி ஆகும்

**செவ்வை பார்த்தல் உபாயம் Means of verification**

குறிகாட்டிகளின் நிலையை எடுத்துக் காட்டக்கூடிய குறிப்பான மூலங்கள் செவ்வை பார்த்தல் உபாயமாகும்.

**எடுகோள் Assumption**

செயற்றிட்டத்தின் வெற்றியைப் பாதிக்கக் கூடிய வெளிவாரி காரணிகள்

கான்ற் அட்டவணையில் உள்ள திட்டத்தை நியாயித்தல் சட்டகத்திற்கு பின்வருமாறு மாற்றலாம்

EXAMPLE

குறிக்கோள்: முறையான கலைத்திட்ட முகாமையை மேம்படுத்தல்

உபாயம் : உயர்மட்ட கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை நடைமுறைப்படுத்தல் – சுற்றாடல் முதல் 3 அலகு தொடர்பானது

| நோக்கம் | செயற்பாடு | காலம் 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | பொறுப்பு | செலவு | குறிகாட்டி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மூன்று களப்பயணம் | ஆரம்ப நடவடிக்கை | x | | | | | | | | | | | | | | |
| | அனுமதிபெறல் | | x | | | | | | | | | | | | | |
| | நடைமுறைப்படுத்தல் | | | x | | | | | | | | | | | | |
| ஒரு கண்காட்சி | ஆரம்ப நடவடிக்கை | | | | | x | | | | | | | | | | |
| | தயாரிப்புக்கள் | | | | | | x | | | | | | | | | |
| | ஒழுங்கமைப்பு | | | | | | | x | | | | | | | | |
| | நடைமுறைப்படுத்தல் | | | | | | | x | | | | | | | | |
| மாணவர் சஞ்சிகையாக்கம் | தயாரிப்புவேலைகள் | | | | | | | | x | x | x | | | | | |
| | வெளியீடு காட்சிப்படுத்தல் | | | | | | | | | | x | x | | | | |
| | | | | | | | | | | | | | | | | |

| | செயற்திட்ட விளக்கம் | குறிகாட்டிகள் | சாரிபார்த்தல் உபாயம் | எடுகோள்கள் |
|---|---|---|---|---|
| குறிக்கோள் | கலைத் திட்ட முகாமையை மேம்படுத்தல் | பொதுப் பரீட்சை பெறுபேற்று உயர்ச்சி | பரீட்சை பெறுபேறு | பரீட்சை முறையில் மாற்றங்கள் ஏற்படுதல் |
| பயன் | கற்றல் அனுபவங்களை செயற்பாடுகள் ஊடாக வழங்கி அடிப்படைத் தேர்ச்சிகளில் மாணவர்களின் பாண்டித்திய நிலையை உயர்வடையச் செய்தல் | அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளில் ஒரே தடவையில் பாண்டித்திய நிலை அதிகரித்தல் | அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிப் பதிவுகள் | மாணவர் பாண்டித்தியத்தை திருத்தமாக அளக்கக்கூடிய கருவிகளைப் பயன்படுத்தல் |
| வெளியீடு | 1. மாணவர்களைக் களப்பயணத்தில் ஈடுபடுத்தல்<br>2. கண்காட்சி நடத்துதல்<br>3. மாணவர் சஞ்சிகையாக்கத்தில் ஈடுபடுதல் | களப்பயணத்தில் பங்கு பற்றிய மாணவர்களின் எண்ணிக்கையும் தடவைகளும்<br>கண்காட்சியில் காட்சிப் பொருட்களை தயாரித்த, பார்வையிட்ட மாணவர்களின் தொகை<br>சஞ்சிகையாக்கத்தில் ஈடுபட்ட மாணவர்கள் எண்ணிக்கை | உரிய கோவைகள் | மாணவர்கள் களப்பயணம், கண்காட்சி போன்றவற்றை கற்றல் அனுபவமாக்கும் திறன் கொண்டிருத்தல்<br>செயற்பாடுகளில் மாணவர்கள் தாமே ஈடுபட்டு அனுபவம் பெறல் |
| செயற்பாடுகள் | 1. செற்பாடுகளைத் திட்டமிடல்<br>2. அனுமதி பெறுதல்<br>3. களப்பயணம், சஞ்சிகையாக்கம், கண்காட்சி செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்தல் | போக்குவரத்துச் செலவு 30000<br>பொருட்களுக்கான செலவு 30000<br>ஏனைய செலவு 10000 | கைச்சாத்துக்கள்<br>ஒப்பந்தங்கள்<br>கூறுவிலைகள் | மாணவர்களிடம் பங்களிப்பை பெறுவதில் உள்ள சிரமம்<br>வழிகாட்ட போதுமான ஆசிரியர்கள் இன்மை |

**தயாரிப்பு வள உதவி: திரு.எ.கிறொசைறோ (முகாமையாளர் – பிரதேச அபிவிருத்தித் திட்டம் – சாவகச்சேரி. "வேள்ட்விஷன் லங்கா"**

# திட்டமிடலுக்கான கணிப்பீடுகளை மேற்கொள்ளல்

## எதிர்வரும் வருடங்களிற்கான மாணவர் தொகையை முன்னெறிகை செய்தல் (projection)

தகவல்கள் குறைவாக உள்ளபோது இலகுவாக மாணவர் தொகையை முன்னெறிகை செய்யும் முறைகள்


### முறை -1 - வளர்ச்சி வீத முறையூடாக (Growth rate method)

மாணவர் சேர்வுத் தொகை எதிர்வரும் வருடங்களில் எவ்வாறு காணப்படும் என்பதை கணிப்பதற்கான சூத்திரம் இதுவாகும்

$$\text{வளர்ச்சி வீதம்} \quad \frac{\text{இறுதி வருடசேர்வு} - \text{ஆரம்ப வருட சேர்வு}}{\text{கடந்த வருடங்களில் எண்ணிக்கை} \times \text{ஆரம்ப வருட சேர்வு}} \times 100$$

கூட்டல் மாற்ற வீதத்தை அடிப்படையாகக் கொண்டு எதிர்வரும் வருடங்களுக் குரிய மாணவர் உள்ளெடுப்பை மதிப்பீடு செய்வதற்குப் பின்வரும் சூத்திரம் பயன் படும்

$$\text{Z வருட தொடக்க உள்ளெடுப்பு} = \text{(Z-1) வருட உண்மை அல்லது மதிப்பிட தொடக்க உள்ளெடுப்பு} \times \frac{\text{100+/- வளர்சி வீதம்}}{100}$$




| வருடம் | மாணவர் தொகை Y |
|---|---|
| 2005 | 15 |
| 2006 | 17 |
| 2007 | 20 |
| 2008 | 19 |
| 2009 | 18 |
| 2010 | 22 |
| 2011 | 24 |
| 2012 | 28 |
| 2013 | 27 |
| 2014 | 30 |

$$\text{மாணவர்தொகை} = \frac{30-15}{10\times15} 100$$
$$= 10\ \%$$

$$\text{2015 இல் மாணவர்தொகை} = 30 \times \frac{100+10}{100}$$
$$= 33 \text{ மாணவர்கள்}$$

## முறை 2 - கூட்டுவீத வளர்ச்சி முறை (compound rate of grouth method)

மாணவர் சேர்வுத் தொகை வளர்ச்சி வீதம் எதிர்வரும் வருடங்களில் எவ்வாறு காணப்படும் என்பதைக் கணிப்பதற்குப் பயன்படும் சூத்திரம் இதுவாகும்.

$$\text{கூட்டுவீத வளர்ச்சி வீதம்} = \left\{ \left( \frac{\text{இறுதி வருடச்சேர்வு}}{\text{ஆரம்ப வருடச் சேர்வு}} \right)^{1/\text{வருடங்களின் எண்ணிக்கை}} - 1 \right\}$$


**குறிப்பு:-**

வருடங்களின் எண்ணிக்கையென்பது இங்கு ஆரம்ப இறுதி வருடங்களிடை யேயான வித்தியாசமாகும்.

கூட்டுவீத வள்ச்சி முறையை அடிப்படையாகக் கொண்டு எதிர்வரும் வருடங்களுக்குரிய மாணவர் உள்ளெடுப்பை மதிப்பீடு செய்வதற்குப் பின்வரும் சூத்திரம் பயன்படும்

$$\text{குறித்த வருட மாணவர் உள்ளெடுப்பு} = \text{இறுதி வருட சேர்வு} \left\{ 1 + \left( \frac{\text{கூட்டுவீத வளர்ச்சி வீதம்}}{100} \right) \right\}^{\text{வருடங்களின் எண்ணிக்கை}}$$

**குறிப்பு:-** வருடங்களின் எண்ணிக்கையென்பது இங்கு இறுதி வருடத்திற்கும் உள் ளெடுப்பு கணிக்கப்படும் வருடத்திற்கும் இடையேயான வித்தியாச மாகும்.




1991 இல் மாணவர்தொலை 846
2001 இல் மாணவர் தொலை 1027
மாணவர் வளர்சசி வீதத்தைக் கணித்து 2011 ஆம் ஆண்டுக்கான மணவர் தொகையை காண்தல்

$$\text{மாணவர் வளர்ச்சிவீதம்} = \{(\tfrac{1027}{846})^{(\frac{1}{10})} - 1\} \times 100$$
$$= \{(1.2139)^{0.10} - 1\} \times 100$$
$$= \{1.0196 - 1\} \times 100$$
$$= 1.96\%$$

$$\text{2011 இல் மாணவர் தொகை} = P2001 \times (1 + \tfrac{R}{100})^{n}$$
$$= 1027 \times (1 + .0196)^{10}$$
$$= 1027 \times 1.2142$$
$$= 1247 \text{ மாணவர்}$$

## பாடசாலை உள்ள பிரதேசத்தின் மாணவர் தொகை பற்றிய விபரம் பெறக்கூடியதாக இருக்கும் போது

நாட்டில் அல்லது பிரதேசத்தில் குறித்த தரத்தில் கற்கும் வயதுள்ள மாணவர்களில் எத்தனை வீதமானவர்கள் பாடசாலை முறைமைக்குள் உள்ளெடுக்கப் பட்டுள்ளனர் என்பதை இச் சூத்திரம் மூலம் கணிப்பிடலாம்

$$\text{மொத்த தொடக்க உள்ளெடுப்பு வீதம்} = \frac{\text{Y(2014) வருடம் Z (1) தரத்திற்கான தொடக்க உள்ளெடுப்பு}}{\text{Y(2014) வருடம் Z (1) தரத்திற்கான பாடசாலை பிரவேச வயது சனத்தொகை}} \times 100$$

எதிர்வரும் வருடத்தில் தொடக்க உள்ளெடுப்பை குறித்த வீதத்தால் அதிகரிக்கத் திட்டமிட்டால் எதிர்வரும் வருட மாணவர் தொகை எவ்வாறு காணப்படும் என்பதை இச்சூத்திரம் மூலம் கணிக்கலாம்

$$\text{Z(2015) வருட இலக்கு வைக்கப்பட்ட தொடக்க உள்ளெடுப்பு} = \frac{\text{Y(2015) வருட மதிப்பிட தொடக்க உள்ளெடுப்பு}}{\text{தளவருடமொத்த தொடக்க உள்ளெடுப்பு வீதம்}} \times \text{Z(2015) வருட இலக்கு வைக்கப்பட்ட தொடக்க உள்ளெடுபு வீதம்}$$

**EXAMPLE**

2005 இல் மாணவர் உள்ளெடுப்பு 200 முதலாம் தரத்திற்கான பிரதேச வயதில் உள்ளோர் 210 மாணவர் சேர்வை 2015 இல் 98 வீதமாக அதிகரிக்க திட்டமிடப் பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு தொடக்க உள்ளெடுப்பாக 33 மாணவர்கள் முந்திய உதாரணத்தில் கணிக்கப்பட்டுள்ளது.

$$\text{மொத்த தொடக்க உள்ளெடுப்பு வீதம்} = \frac{200}{210} \times 100 = 95.24$$

$$\text{2015 இல் இலக்கு வைக்கப்பட்ட தொடக்க உள்ளெடுப்பு} = \frac{33}{95.24} \times 98 = 34$$

பிரதேசத்தில் உள்ளெடுக்கப்படும மாணவர்களின் வீதம் 95.24 ஆக உள்ளபோது பாடசாலையின் உள்ளெடுக்கப்படும் மாணவர் 33 ஆக கணிக்கப்பட்டுள்ளது. ஆயினும் பாடசாலை 98 வீதமான மாணவர்கள் உள்ளெடுக்க திட்டமிடும்போது அவ்வீததிற்கான மாணவர் தொகை 34 ஆக அமையும்.

**முறை 3**

கடந்த வருடங்களின் மாணவர் தகவல்கள் தொடர்ச்சியாக இருக்கும் நிலையில் எதிர்கால மாணவர் தொகையைத் திருத்தமாக முன்னெறிகை செய்யும் முறை

## எளிய வர்க்க முறை (Least squart method)

வருடங்களுக்கும் மாணர்தொகைக்கும் இடையிலான தொடர்பின் போக்குக்கேற்ப எதிர்வரும்கால மாணவர் தொகையைக் கணிக்கும் முறையாகும்.

பின்வரும் உதாரணத்தின் மூலம் இம்முறையை இலகுவாக விளங்கிக் கொள்ளலாம்

**EXAMPLE**

| வருடம் | மாணவர் தொகை Y | வருட எண்ணிக்கை X | $X^2$ | XY |
|---|---|---|---|---|
| 2005 | 15 | 1 | 1 | 15 |
| 2006 | 17 | 2 | 4 | 34 |
| 2007 | 20 | 3 | 9 | 60 |
| 2008 | 19 | 4 | 16 | 76 |
| 2009 | 18 | 5 | 25 | 90 |
| 2010 | 22 | 6 | 36 | 132 |
| 2011 | 24 | 7 | 49 | 168 |
| 2012 | 28 | 8 | 64 | 224 |
| 2013 | 27 | 9 | 81 | 243 |
| 2014 | 30 | 10 | 100 | 300 |
| | $\sum Y = 220$ | $\sum X = 55$ | $\sum X^2 = 385$ | $\sum XY = 1342$ |

$Y = a + bX$

$Y =$ மாணவர் தொகை

$X =$ வருடம்

$a =$

$b =$

மாணவர் தொகையை கணிப்பதற்கு a, b யை பின்வருமாறு அறியலாம்

$$\sum Y = Na + b.\sum X$$
$$\sum XY = a.\sum X + b.\sum x^2$$

220 = 10 a+55b --------------- 1

1342 = 55a + 385b ----------- 2

1 இனை 11 ஆல் பெருக்கினால்

$2420 = 110a + 605b$ -----------3

2 இனை 2 ஆல் பெருக்கினால்

$2684 = 110a + 770b$ ----------4

4 இல் இருந்து 3 ஐ கழித்தால்

$246 = 165b$

**b=1.4909**

b=1.4909 ஐ 1 இல் பிரதியிட்டால்

$220 = 10a + 55 \times 1.4909$

$10a = 138.0005$

$a = 13.8$

$Y = 13.8 + 1.4909 \times X$

**X** ஐ சமன்பாட்டில் பிரதியிட்டால் மாணவர் தொகை பின்வருமாறு காணப்படும்

| வருடம் | வருட எண்ணிக்கை X | Y | மாணவர் தொகை |
|---|---|---|---|
| 2015 | 11 | 30.2 | 30 |
| 2016 | 12 | 31.7 | 32 |
| 2017 | 13 | 33.2 | 33 |
| 2018 | 14 | 34.7 | 35 |
| 2019 | 15 | 36.2 | 36 |

**பாச்சல் வீத மாதிரியுருவும் அவசியமான வீதங்களும்**

பாச்சல் வீத மாதிரியுருவை பாடசாலைக்கு தயாரிப்பதன் முலம் பல்வேறு திட்டமிடலுக்கான தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

| | உண்மைத் தகவல் ✔ 2012 | ✔ 2013 | மதிப்பீடு ? 2014 |
|---|---|---|---|
| | | | |
| **தரம் 3** | 100 | 106 | |
| **தரம் 4** | | 85 | ? |
| | | | |

குறித்த ஒரு தரத்தில் உள்ள மாணவர்கள் அடுத்தவருடம் அடுத்த தரத்திற்கு செல்லும் போது அவர்களின் தொகையில் இடை விலகியோர் தொகையும் மீளக் கற்போர் தொகையும் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆகவே

குறித்த தரத்தில் கற்ற மாணவர் தொகை = வகுப்பேற்றப்பட்டோர் தொகை + இடை விலகியோர் தொகை + மீளக் கற்போர் தொகை

அடுத்த தரத்திற்கு வகுப்பேற்றப்பட்டோர் தொகை = குறித்த தரத்தில் கற்ற மாணவர் தொகை - (குறித்த தரத்தில் இடை விலகியோர் தொகை + குறித்த தரத்தில் மீளக்கற்போர் தொகை)

எனவே குறைந்தது மூன்று வருடங்களுக்கு இத்தொகைகளை வகுப்பு ரீதியாக கணித்து கொள்ளலாம் அதற்கான அட்டவணை வருமாறு

| வருடம் | தரம் | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | | 2 | | | 3 | | | 4 | | | 5 | | |
| | P | R | D | P | R | D | P | R | D | P | R | D | P | R | D |
| 2011 | | | | | | | | | | | | | | | |
| 2012 | | | | | | | | | | | | | | | |
| 2013 | | | | | | | | | | | | | | | |
| 2014 | | | | | | | | | | | | | | | |

தொகைகளை அடிப்படையாக கொண்டு வீதாசாரங்களைக் கணிப்பதன் மூலம் எதிர் வரும் வருடத்திற்கான வீதாசாரங்களை முன்னெறிகை செய்யலாம். அதனூடாக எதிர்கால மாணவர் தொயையை அறிய முடியும் இடைவிலகல், மீளக்கற்போர் தொகைகளை முன்னெறிகை செய்து அவற்றைக் குறைப்பதற்கு திட்டமிடலாம்

| வருடம் | தரம் | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | | 2 | | | 3 | | | 4 | | | 5 | | |
| | PR | RR | DR | PR | RR | DR | PR | RR | DR | PR | RR | DR | PR | RR | DR |
| 2011 | | | | | | | | | | | | | | | |
| 2012 | | | | | | | | | | | | | | | |
| 2013 | | | | | | | | | | | | | | | |
| 2014 | | | | | | | | | | | | | | | |

வகுப்பேற்ற வீதம் $PR_g^y = \frac{E_{g+1}^{y+1} - R_{g+1}^{y+1}}{E_g^y}$

மீளக்கற்போர் வீதம் $RR_g^y = \frac{R_g^{y+1}}{E_g^y}$

இடைவிலகல் வீதம் $DR_g = 100 - (PR_g - RR_g)$

பூர்த்திவீதம் $GR_{fg}^{fy} = \frac{G_{fg}^{fy}}{E_{fg}^{fy}}$

| | |
|---|---|
| PR | வகுப்பேற்ற வீதம் |
| RR | மீளக்கற்போர் வீதம் |
| DR | இடைவிலகல் வீதம் |
| GR | பூர்த்தி வீதம் |
| E | சேர்வுத் தொகை |
| R | மீளக்கற்போர் |
| G | பூர்த்திசெய்தோர் |
| y | குறித்த வருடம் |
| g | குறித்த தரம் |
| y+1 | முந்திய வருடம் |
| g+1 | முந்திய தரம் |
| fy | இறுதி வருடம் |
| fg | இறுதி தரம் |

EXAMPLE

| விபரம் | தரம் 1 | தரம் 2 |
|---|---|---|
| 2007 இல் மாணவர் சேர்வு | 1000 | 900 |
| 2008 இல் மாணவர் சேர்வு (புதிதாக சேர்ந்தோர், வகுப்பேற்றப்பட்டோருடன் 2007 இல் சேர்ந்து 2008 இல் அதே தரத்தில் கற்போரையும் உள்ளடக்கியது) | 950 | 850 |
| மீளக்கற்போர் (2007 இல் சேர்ந்து 2008 இல் அதே தரத்தில் கற்போர்) | 100 | 50 |

**2007 ஆம் ஆண்டின் முடிவில்**

2 ஆம் தரத்திற்கு வகுப்பேற்றம் = 850 - 50
= 800

1 ஆம் தரத்தில் மீளக்கற்போர் = 100

1 ஆம் தரத்தில் இடைவிலகல் = 1000 - ((850 - 50) +100)
= 100

மாணவர் சேர்வு = வகுப்பேற்றியோர் + மீளக்கற்போர் + இடைவிலகியோர்
= 800 + 100 + 100
= 1000

**2007 ஆம் ஆண்டிற்கான வீதக் கணிப்புக்கள்**

வகுப்பேற்ற வீதம் $= \frac{850 - 50}{1000} \times 100$
$= 80\%$

மீளக்கற்போர் வீதம் $= \frac{100}{1000} \times 100$

$= 10\%$

இடைவிலகல் வீதம் $= \frac{1000-((850-50)+100)}{1000} \times 100$

$= 10\%$

மாணவர் சேர்வு 100% = வகுப்பேற்றியோர் % + மீளக்கற்போர் % + இடைவிலகியோர் %
= 80%+10%+10%
= 100%



2014 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாணவர்களுக்கான வழிகாட்டும் கருத்தரங்கை வலையத்தைச்சேர்ந்த வளவாளர்கள் நடாத்தும் காட்சி



வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் 2014 ஆம் ஆண்டுக்கான மாணவர் உடல் திறன் வெளிப்படுப்படுத்தும் நிகழ்வில் மாணவர்களின் மனதைக் கவரும உடற்பயிற்சி நிகழ்வு

# பிள்ளைநேய திட்டமிடலில் கவனிக்க வேண்டிய விடயங்கள்

## 1. உடல்ரீதியிலான தண்டனைக்கான மாற்று நடவடிக்கைகள்

சகல சந்தர்ப்பங்களிலும் மாணவர்களுக்கு உடல் ரீதியான தண்டனைகளை வழங்குவதிலிருந்து தவிர்த்துக்கொள்ள வேண்டும். உடல்ரீதியான தண்டனைகளுக்குப் பதிலாக கீழ்க் குறிப்பிடப்பட்ட மாற்று நடவடிக்கைகளைப் பின்பற்ற முடியும்.

1. பாடசாலையிலுள்ள மாணவர்கள் ஒழுக்க விழுமியத்திற்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபடவிருக்கும் சந்தர்ப்பங்களைக் குறைப்பதற்காகப் பாடசாலைச் செயற்பாடு மற்றும் பாட இணை நடவடிக்கைகளினைச் சிறந்த முறையில் ஒழுங்கு செய்தல்.
2. பாடசாலைகளின் ஒழுக்க விழுமியங்கள் தொடர்பாகச் சகலருக்கும் விளக்கமூட்டல் மற்றும் சிறந்த செயற்பாடுகளை மேற்கொள்வதுடன் தவறான செயற்பாடுகளுக்கு உதவாதிருத்தல் அல்லது அதனை அங்கீகரிக்காது இருத்தல்.
3. சிறந்த பழக்கங்களை ஏற்படுத்துவதற்கும் பாடசாலைகளில் ஒழுக்கத்தைப் பேணுவதற்கும் ஒழுக்க விழுமிய செயற்பாடுகளின் முக்கியத்துவத்தை விளக்கமூட்டல், முன்மாதிரியாக மேற்கொள்ளல் மற்றும் மாணவர்களுக்குச் சரியான வழிமுறைகளைக் காண்பித்தல்.
4. மாணவர்கள் தவறிழைக்கும் வேளையில் அவரால் இழைக்கப்பட்ட தவறை விளக்கமூட்டல்.
5. மோசமான முறை ஒழுக்கத்திற்கெதிரான செயற்பாடுகளை மேற்கொண்ட வேளையிலும் உடல் மற்றும் உளரீதியான தண்டனைகளை வழங்குவதற்குப் பதிலாக எச்சரிக்கை செய்தல் மற்றும் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களுக்கு அறிவித்தல்.
6. தவறிழைத்த மாணவர் அனுபவிக்கும் வரப்பிரசாதங்களை வரையறுத்தல் அல்லது இடைநிறுத்தல். உ + ம் : வகுப்புத் தலைவர், மாணவர் தலைவர் போன்ற பதவிகளை இல்லாமற் செய்தல்.
7. பாரிய ஒழுக்கத்திற்கெதிரான செயற்பாடுகளை மேற்கொண்ட வேளையில் பெற்றோருக்கு அறிவித்து இரண்டு வாரத்திற்கு அதிகரிக்காத வகுப்புக்குத் தடை விதித்தல். மேற்கூறப்பட்ட 6 மற்றும் 7 கீழ் செயற்படும் போது அதிபரினால் பாடசாலை ஒழுக்க சபையை அழைத்து அதன் மூலம் மேற்கொள்ளப்படும் பரிசோதனைக்குப் பின்னர் எடுக்கப்படும் தீர்மானத்தின் கீழ் மாத்திரம் அவ்வாறு செயற்பட வேண்டும்.
8. பாடசாலை ஒழுக்க சபையினால் மிக மோசமான ஒழுக்கத்திற்கெதிரான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தீர்மானித்த வேளையில் அச் செயற்பாட்டின் தன்மை மற்றும் தீவிரத் தன்மைக்கமைய

வலயக் கல்விப் பணிப்பாளரின் முன் அங்கீகாரத்துடன் 2 வாரத்திற்கு மேற்படாத காலத்திற்குள் வகுப்புத்தடை அல்லது பிள்ளை வேறொரு பாடசாலைக்குக் கல்வி கற்ற தரத்திற்கே மாற்றம் செய்தல்.

- மாணவர்கள் தொடர்பில் நடவடிக்கைகளை எடுக்கும் போது அது தொடர் பாக ஆவணரீதியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதுடன் அவை கவனமாக கல்லூரியில் வைத்திருக்கவும் வேண்டும். மேலும் 6 மற்றும் 8 இன் செயற்பாடுகளின் போது அதிபரினால் அது தொடர்பாக (லொக்) சம்பவக் குறிப்பேட்டுக் குறிப்பொன்றும் பேண வேண்டும். மேற்கூறப்பட்ட வாறு மாணவர்களது சிறந்த செயற்பாடுகளை ஏற்படுத்தும் நோக்கில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் கல்லூரியின் பிரதான கூட்டம் அல்லது அறிவித்தற் பலகையில் பாடசாலையினுள் பகிரங்கப்படுத்தப் பொறுப்பாக இருக்க வேண்டும்.

## 2. உடல்ரீதியிலான தண்டனைக் கெதிரான சட்ட ஏற்பாடுகள்

பாடசாலையில் ஒழுக்கத்தைப் பேணும் நோக்கிலாக இருந்தாலும் மாண வர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டால் கீழ்க் குறிப்பிட்டவாறு சட்ட நடவடிக்கை களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படும்.

1. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் III ஆம் அத்தியாயம் II ஆவது வாசகம் மற்றும் XVI ஆவது அத்தியாயம் 126 ஆவது பிரிவிற்கமைய அடிப்படை உரிமை மீறும் வழக்குத் தாக்கல் செய்யமுடியும்.
2. 1995 - இல- 22 கொண்ட குற்றவியல் சட்டத்தின் மூலம் (மறுசீரமைக் கப்பட்ட) சட்டத்தின் 3 ஆவது வாசகம் மற்றும் பிரதான சாசனத்தின் 308 (அ) பிரிவின் கீழ் பிள்ளைகள் மோசமான முறையில் தண்டனைக்கு உட்படுத்திய தவறின் கீழ் வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.
3. கல்வி அமைச்சின் பொறுப்பாளர்களினால் நடத்தப்படும் ஒழுக்காற்று விசாரணைகளில் உடல் ரீதியான தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டால் தாபன விதிக் கோவையின் II ஆவது பிரிவின் கீழ் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க முடியும்.

## 3. சிறுவர் துஷ்பிரயோகம்

1. பாடசாலைகளுக்குள் சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் இடம்பெறுவது கவலைக்குரிய விடயமாகும். பாடசாலையில் பிள்ளையின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டிய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் ஏனையோர் மூலம் பிள்ளைகளை முறையற்ற ரீதியில் நடத்தப்படுவது கவலைக்குரிய நிலைமையாகும்.

2. சிறுவர் துஷ்பிரயோகத்தில் பாலியல் வற்புறுத்தல் மாணவர் அல்லது மாணவி உட்படுத்தப்படுவது பாரிய குற்றமாகும். இலங்கையின் 80வது தசாப்த நடுப்பகுதியில் சிறுவர் மற்றும் உடல் ரீதியலான துஷ்பிரயோகம் குற்றமென்றும் 90ம் தசாப்த ஆரம்ப பகுதியில் சிறுவர் பாலியல் உறவு பாரிய தண்டனைக்குரிய குற்றமென்றும் இனம்காணப்பட்டது. இதனால் பாடசாலைகளில் மாணவர் அல்லது மாணவிகள் ஏதாவதொரு முறையில் துஷ்பிரயோகத்திற்கு இலக்காவதைத் தடுப்பது அதிபரினதும் ஆசிரியரினதும் பொறுப்பாகும்.
3. பாடசாலைகளில் மாணவர் அல்லது மாணவி பாலியல் அல்லது வேறு முறையிலான துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டால் அது உண்மையானது என ஊர்ஜிதப்படுத்தப்படும் பட்சத்தில் பாரிய தண்டனைகளுக்கு இலக்காக வேண்டியேற்படும் என்பதை விசேடமாக வலியுறுத்தப்படுகின்றது. .
4. பாடசாலைகளில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் உட்பட பாடசாலைக்குள் மேற்கொள்ளப்படும் சகல நடவடிக்கைகளுக்கும் தடை ஏற்படக் கூடியவாறு கல்லூரியில் கல்வி மற்றும் கல்விசாராப் பணியாளர் சபை அங்கத்தவர்களினால் ஒழுக்கத்திற்கு எதிரான செயற்பாடுகளுக்கு மாணவர்களைத் தூண்ட ஒருபோதும் நடவடிக்கை எடுக்கக்கூடாது. மாணவர்கள் ஒழுக்கத்திற்கெதிரான செயற்பாடுகளுக்குத் தூண்டுவது அவ்வாறானவர்களினால் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகக் குற்றச்சாட்டுக்கள் சமர்ப்பிக்கப்படும் வேளையில் அக்குற்றம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டால் மாணவர்கள் தூண்டப்பட்டது. தொடர்பாக உரிய குழுவுக்கு அல்லது நபருக்குத் தீவிர தண்டனை வழங்க முடியும்.

- இவ்வாறு சட்டரீதியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது மேற்கூறப்பட்ட 2.2 மற்றும் 2.3 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயற்பாடுகளை மேற்கொள்ள முடியுமென மேலும் அறியத் தருகின்றேன்.
- மேலதிக விபரங்களுக்கு கல்வி அமைச்சின் 2005 /17இலக்க சுற்றறிக்கையை பார்க்கவும்.

# கட்டாயக்கல்விச் செயற்பாட்டை அமுற்படுத்தல்

## பிள்ளையின் கல்விக்காக உள்ள உரிமை – Right to Educaton of Children

கல்விக்கான கட்டளைச் சட்டத்தின் படி எமது நாட்டில் எல்லாப் பிள்ளைகளுக்கும் 14 வயது வரை கல்வியைப் பெற்றுக் கொடுப்பது கட்டாயக் கடமையாக்கப்பட்டுள்ளது. தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பாத பெற்றோர்களுக்கெதிராகவும் வழக்குத் தொடர்ந்து தண்டனை வழங்கப்பட முடியும்.

# பாடசாலை மட்டம்

## 1. கல்வி வசதிகளை வழங்கும் குழு

**அங்கத்தவர் :**

- அதிபர் (தலைவர்)
- ஆரம்பம் மற்றும் இடைநிலைப் பிரிவின் பொறுப்பாளர்கள் - 02
- ஆசிரியர்கள் - 02
- மாணவத் தலைவர்கள் - 02
- பெற்றோர் -02

- அதிபரின் மேற்பார்வையின் கீழ் குழு தேர்ந்தெடுத்து நியமிக்கப்பட வேண்டும். குழுவிற்காகப் பெற்றோர்களை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் பெற்றோர் கூட்டத்தில் நியமிக்க வேண்டும்.

**பதவிக்காலம் :**

- குழுவின் உத்தியோகபூர்வ காலம் : 01 வருடம்

**கூட்டம் :**

- பாடசாலைத் தவணைக்குக் குறைந்தபட்சம் இரண்டு தடவை கூட வேண்டும்.

**செயற்பாடுகள் :**

1. பாடசாலையின் அமைவிடப் பிரதேசத்தை இனங்காணுதல், வரைபில் உள்ளடக்குதல் சமூகப் பொருளாதாரப் புள்ளிவிபரங்களைச் சேகரித்தல்
2. பாடசாலையின் அமைவிடப் பிரதேசத்தில் வாழும் பாடசாலை செல்லாத சிறார்களை இனங்காணுதல் மற்றும் பாடசாலைக்குச் சேர்த்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல்.
3. பாடசாலையில் சேர்ந்துள்ள இருப்பினும் தொடர்ந்தும் பாடசாலைக்குச் சமுகமளிக்காத மற்றும் ஏற்றுக்கொள்ள முடியுமான காரணங்களின்றி 03 வாரங்களுக்கு மேற்பட்ட காலம் பாடசாலைக்கு சமுகமளிக்காத பாடசாலையை விட்டு விலகும் நிலையை எதிர்கொண்டுள்ள சிறார்களை இனங்காணுதல் மற்றும் சமுகமளிப்பைத் தொடர்ச்சியாகப் பேணுவதனை அமுற்படுத்தல்.
4. பாடசாலைக்கல்வியை விட்டு விலகிய சிறார்களை மீண்டும் பாடசாலைக்குச் சேர்த்துக் கொள்ளல் மற்றும் விலகியமைக்கான காரணங்களின் பாதகமான நிலைகளை நீக்குவதற்காக நடவடிக்கை எடுத்தல்.
5. மாணவர்கள் தொடர்பாகப் பெற்றுக்கொண்ட புள்ளிவிபரங்கள், பகுப்பாய்வு, தகவல்களைப் பயன்படுத்திப் பின்னூட்டல் செயற்பாடுகளை முறையாக மேற்கொள்ளல். தேவையான சந்தர்ப்பங்களில் அத்தகவல்களைச் சிறார்களின் சமுகமளிப்புக் குழு, (வரவுக்குழு) பரிசோதனைக் குழுவிற்கு வழங்குதல்

6. பாடசாலையில் மாணவர்களுக்குத் திருப்தியான கற்றல் சூழ்நிலையை ஏற்படுத்தத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தல் மற்றும் உரிய தரப்பினரை அறிவுறுத்தல்.
7. கல்விக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் தொடர்பாகப் பெற்றோரை அறிவுறுத்தல்.
8. தேவையான சந்தர்ப்பங்களில் முறைசாராக் கல்விச் செயற்றிட்ட உதவி உத்தியோகத்தர்கள், ஆரம்ப மற்றும் விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் சமுர்த்தி முன்னோடிகளுக்கு உதவுதல்.
9. மேற்கூறப்பட்ட விடயங்களைப் பூர்த்தி செய்வதன் மூலம் மாணவர்களின் பாடசாலைக் கல்வியை வெற்றிகரமாக்கும் முகமாகக் கூட்டாக இணைந்து செயற்படல்.

**பேண வேண்டிய ஆவணங்கள்**

1. குழுக்கூட்டம் - சமுகமளிப்பு ஆவணம்
2. குழுக்கூட்ட அறிக்கைப் புத்தகம்
3. பாடசாலை செல்லாத சிறார்கள், பாடசாலையை விட்டு விலகிய சிறார்கள் மற்றும் விலகும் நிலையை எதிர்கொண்டுள்ள சிறார்கள் தொடர்பான தகவல்கள் குறித்து.
4. சட்ட ரீதியான கட்டமைப்பின் கீழ் அல்லது வேறு நிறுவனங்கள் ஊடாகப் பாடசாலைக்கு உட்படுத்திய சிறார்கள் தொடர்பான அறிக்கை.

- கட்டாயக் கல்விக் கட்டளையின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள குழுக்களின் பணிகள் மற்றும் பொறுப்புகளுக்கு இப்பாடசாலை மட்டத்திலான குழு எக்காரணம் கொண்டும் தடையாக இருக்கக் கூடாது. இக்குழுக்களின் சேவையைத் தொடர்ந்தும் பலப்படுத்துவதற்காக பாடசாலை மட்டத்திலான குழு சகல சந்தர்ப்பங்களிலும் இருக்க வேண்டும்.
- மேலதிக விபரங்களுக்கு கல்வி அமைச்சின் ED/1/18/2/1 இலக்க சுற்றறிக்கையை பார்க்கவும்.

## கிராமசேவையாளர் பிரிவு மட்டம்

### 2. பாடசாலை கட்டாய வரவுக் குழு

**அங்கத்தவர்**

- கிராம அலுவலர் பிரிவு பாடசாலை அதிபர்கள்
- ஒவ்வொரு பாடசாலையினதும் அபிவிருத்தி சங்க உறுப்பினர் இருவர்
- அப் பிரிவிற்கான கிராம அலுவலர்
- அப் பிரிவிற்கான சமுர்த்தி உத்தியோகத்தர்
- மாகாணக் கல்விப் பணிப்பாளரால் நியமிக்கப்படும் அதிகாரம் பெற்ற அலுவலர்

**நிர்வாகம்**

1. குறித்த கிராம அலுவலர் பிரிவில் 5 பாடசாலைக்கு மேல் இருந்தால் 2 பாடசாலையில் வரவுக் குழு அமைக்கப்படும்
2. தேவைக் கேற்ப கூட்டம் கூட்டப்படும்
3. மாகாணக் கல்விப் பணிப்பாளர் 2 வருடத்திற்கு ஒரு தவிசாளரை குழுவில் இருந்து நியமிப்பார்.
4. தவிசாளர் பதவி சுழற்சி முறையில் 2 வருடங்களுக்கு ஒருமுறை மாற்றப் படும்

**பணிகள்**

1. பெப்ரவரி மாதம் பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகளின் பட்டியல் தயாரித்தல்
2. மேற்குறித்த வேலையைச் செய்வதற்குரிய தத்துவம் குழுவிற்கு உண்டு.
3. குறித்த பட்டியல் அதிகாரம் பெற்ற அலுவலரிடம் ஒப்படைத்தல் வேண்டும்
4. அதிகாரம் பெற்ற அலுவலர் 4 வாரங்களுள் பிள்ளையைப் பாடசாலைக்கு வருகை தரச் செய்தல் வேண்டும்
5. அதிகாரம் பெற்ற அலுவலர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட எவரேனும் பெற்றோரிடம் காரணங்களை விசாரணை செய்யும் அதிகாரத்தைக் கொண்டுள்ளனர்
6. அதிகாரம் பெற்ற அலுவலர் கொண்டுள்ள அதிகாரங்கள்.
    - விசாரணைசெய்தல்
    - பிள்ளையை முன்னிலைப்படுத்தச் செய்தல்
    - இதற்காக வளவில் பிரவேசித்தல்
7. அதிகாரம் பெற்ற அலுவலரின் சிபார்சின் பேரில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் பிள்ளையின் கல்விச் செயற்பாட்டில் திருப்தியடைந்தால் அவர் அப்பிள்ளைக்குப் பாடசாலை வருகை தொடர்பாக விலக்களிக்க லாம்.
8. மாகாணக் கல்விப் பணிப்பாளரின் பணிப்பின் பின்பு ஏனைய பிள்ளை களுக்கு 2 மைல் தொலைவிற்குள் பாடசாலை வழங்கப்படும்.
9. மூன்று மாதத்தின் பின் குழு குறித்தபிள்ளைகளின் வரவு தொடர்பாக அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு அறிக்கையிட வேண்டும்.

## பிரதேச செயலக பிரிவு மட்டம்

### 3. பாடசாலை கட்டாய வரவுக் கண்காணிப்புக் குழு

**அங்கத்தவர்**

- பிரதேச செயலர் பிரிவு கோட்டக்கல்விப் பணிப்பாளர்
- பிரதேச செயலர் பிரிவுக்கான நன்னடத்தைப் பாதுகாப்பு உத்தியோகத்தர்

• பிரதேச செயலர் பிரிவுக்கான உதவிக் காவற்றுறைக் கண்காணிப்பாளர்
• பிரதேச செயலர் பிரிவுக்கான பிரபல சமூக சேவையாளர் ஒருவர்

**கூட்டம்:**

• தேவைக் கேற்ப கூட்டம் கூட்டப்படும்

**பணிகள்**

1. இவ் ஒழுங்குகளின் பின்னும் பெற்றோர் பிள்ளையை பாடசாலைக்கு அனுப்பும் கடமையில் தவறின் கட்டாய பாடசாலை வரவுக் கண்காணிப்புக் குழுவுக்கு எழுத்துமூலம் அதிகாரம் பெற்ற அலுவலர் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்
2. கட்டாய பாடசாலை வரவுக் கண்காணிப்புக் குழுவுக்கு அழைப்பாணை அனுப்பவும் பெற்றோரை சந்திக்கவும் தத்துவம் உண்டு.
3. குறித்த விடயம் தொடர்பாக பெற்றோரைக் குற்றவாளி ஆக்க முடியும்

• மேலதிக விபரங்களுக்கு 1997 நவெம்பர் 25 ம் திகதி செவ்வாய்க் கிழமை 1003/5 இலக்கம் வர்த்தமானி அறிவித்தலைப் பார்க்கவும்.

Important

## அடிப்படைக் கற்றல் கற்பித்தற் செயற்பாடு
## (Basic teaching learning prosess)

• அடிப்படைக் கற்றல் கற்பித்தற் செயற்பாடு தொடர்பாகப் பாடப்புத்தகம், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, பாடசாலைநேரசூசி, பாடத்திட்டம், பாடக்குறிப்பு என்பவற்றைக் கொண்ட சிறப்பான திட்டமிடல் உண்டு.
• வகுப்பறையில் பாடசாலை நேரத்தில் ஆசிரியரினால் தீர்க்க முடியாத பிரச்சினை அடையாளம் காணப்பட்டால் அவற்றைத் தீர்ப்பதற்கு வரு டாந்த அமுலாக்கல் திட்டத்தில் விசேட செயற்பாடுகள் திட்டமிடப்படும்
• அடிப்படைக் கற்றல் கற்பித்தலுக்கான விசேட செயற்றிட்டங்களுக்கு ஐந்தாண்டுத்திட்டத்தில் குறிப்பிட்ட தொகையை கடந்த கால அனுபவங் களின் அடிப்படையில் ஒதுக்கலாம்.
• குறிப்பாக ஐந்துவருடங்களுக்குப் பாடரீதியாக, அலகுரீதியாக பிரச்சினை களை அடையாம்கண்டு திட்டமிடல் மேற்கொள்ள முடியாது. அவ்வாறு இடம்பெறின் அது நடைமுறைக்குப் பொருத்தமற்ற தேவையற்ற செயற்பாடாக அமையஇடமுண்டு.
• இழந்தபாடவேளைகளை மீட்கும் நடவடிக்கைகள் திட்டமிடலுக்குள் வராத ஆசிரியரின் தனிப்பட்ட பொறுப்பு நிறைவேற்றல் செயற்பாடாகும்.

## கணினி மூலம் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்தலைத் தடுத்தல்
## Prevention of computer Based Child Abuse

கணினிச் சேவைகள் வழங்குநர்கள் அக் கணினிகளைப் பயன்படுத்திச் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுவதைத் தடுப்பதற்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டியதுடன், அத்தகைய செயலொன்றைப் பற்றித் தெரிந்து கொண்ட உடன் தாமதிக்காமல் பிரதேசத்தின் பொலிஸ் அலுவலகத்தின் பொறுப்பதிகாரிக்கு முறைப்பாடு செய்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுதல் இரண்டாண்டு காலத்திற்கு மேற்படாத சிறைத் தண்டனை மூலம் அல்லது அபராதம் மூலம் தண்டிக்கப்படக் கூடிய ஒரு குற்றமாகும்.

## சிறுவரை தொழிலில் அமர்த்துவதில் இருந்து பாதுகாத்தல்
## Prevention of Child Labour

14 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளை எந்த விதமான தொழிலும் ஈடுபடுத்துவது தடுக்கப்பட்டிருந்த போதிலும் பாடசாலைக் கல்விக்குத் தடை ஏற்படாத விதத்தில் குடும்பத்துக்குரிய தொழில் முயற்சியில் அல்லது அரசாங் கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பாடசாலைகளில் பயிற்சியில் ஈடுபடுத்த முடியும்.

நடைமுறையிலுள்ள இப்போதைய சட்டத்தின்படி 14-18 இடையிலான வயதுடைய சிறுவர் ஊழியர்கள் நிபந்தனைகளுக்குட்பட்டு சேவையில் ஈடுபடுத் தப்பட முடியுமெனினும், பாடசாலை நேரத்தினுள், பிள்ளைக்கு ஆபத்து ஏற்படக் கூடிய பாரமான எதையும் தூக்குவதற்கு, கொண்டு செல்வதற்கு அல்லது அகற்றுவதற்கு பிள்ளைகளின் உயிருக்கு, சுகாதாரத்துக்கு, கல்விக்கு அல்லது உடல் ரீதியாக ஊறு ஏற்படக்கூடிய தொழில்களில் ஈடுபடுத்துவது கூடாது.

பிள்ளைகளை ஊழியம் செய்யும் வேலைகளில் ஈடுபடுத்தும் மற்றும் பிச்சையெடுக்க வைக்கும், தரகர்களுக்கு அல்லது பெற்றோர்களுக்கெதிராக 05 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்க முடியும்.

### உயர் மட்டச் செயற்பாடு (Higher order prosess)

- மாணவரின் உயர்மட்ட சிந்தனையைத் தூண்டக் கூடியதாக வேறுபட்ட அனுபவங்களைப் பெறக்கூடியதாக ஐந்து வருடங்களுக்குச் செயற்பாடு களைத் திட்டமிட முடியும்.
- களப்பயணம், பாடரீதியான செயற்பாட்டு முகாம், மாணவர் சஞ்சிகை ஆக்கம், அலகு ரீதியான கண்காட்சி, விசேட வளவாளருடனான செய்ம்முறை வகுப்புகள், மாணவர்ஆக்கச் செயற்பாடுகள் போன்றவை உயர் மட்டச் செயற்பாடுகளுக்கான உதாரணங்கள் ஆகும்.
    - ♦ பாடசாலை நேரத்திற்கு வெளியே
    - ♦ பாடசாலைக்கு வெளியே
    - ♦ வெளியில் இருந்து வளவாளர்
    - ♦ வழமையான கற்பித்லுக்கு புறம்பான செயற்பாடு

# தவறிழைத்த பிள்ளைகள் தொடர்பாக அமுலில் உள்ள விசேட சட்ட ஏற்பாடுகள்
# Special Laws relating to Juvenile Offenders

1. சட்டத்தின்படி பிள்ளைகளிடமிருந்து வழக்கு விசாரிக்கப்பட வேண்டியது அவர்களுக்குச் சாதகமான சூழ்நிலையொன்றில் பிள்ளைகளுக்காகப் பணிபுரியும் அனுபவம் மிக்க அலுவலாளர் ஒருவரின் துணையுடனேயாகும்.

2. பிள்ளையொருவரை சிறைப்படுத்தும் போது சட்டத்திற்குட்பட்டவாறு செய்யப்பட வேண்டியதுடன் வழக்கு முடியும் வரை அல்லது பிணை வழங்கப்படும் வரை பிள்ளை பொருத்தமான இடம் ஒன்றில் தடுத்து வைக்கப்படுதல் வேண்டும்.

3. குற்றவியல் குற்றம் நிரூபிக்கப்படுவதற்குக் குற்ற மனம் தடுக்கப்பட்ட செயல் இரண்டும் ஒருமித்துக் காணப்பட வேண்டும்

4. ஏதேனும் ஒரு செயலுக்காக 8 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்குக் குற்ற மனம் காணாப்படமாட்டாது என்பதனால் நீதி மன்றத்தால் தண்டிக்கப்படமாட்டார். பிள்ளையொருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட நேர்ந்தால் அது ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்படும். தண்டனைக் கோவையின் 75ஆம் பிரிவின் படி வயது 8 வயதிற்கு குறைந்த பிள்ளையொருவரினால் செய்யப்படக்கூடிய எதுவும் ஒரு குற்றச் செயலாகாது. தண்டனைக் கோவையின் 76ஆம் பிரிவின்படி போதிய அளவில் முதிர்ந்த புத்தியற்ற 08 வயதிற்கு அதிகமான 12 வயதிற்குக் குறைந்த பிள்ளையொருவரின் செயல்கள் குற்றச் செயல்களாகாது. சாட்சிகள் கட்டளைச் சட்டத்தின் 113ஆம் பிரிவின் படி வயது 12 இற்குக் குறைந்த பிள்ளையொருவரினால் பெண்களுக்கெதிராக பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட முடியாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

5. குற்றம் புரிந்த சிறுவர் தொடர்பான ஏற்பாட்டை சிறுவர் இளம் பராயத்தவர் கட்டளைச் சட்டம் கொண்டுள்ளது.

6. சிறுவர் வயது வந்தவருடன் சேர்த்துக் குற்றஞ் சாட்டப்பட்டாலொழிய காவல் நிலையத்திலும் நீதிமன்றத்திலும் வயது வந்தவருடன் சேராது ஒழுங்கு செய்யப்பட வேண்டும்

7. கொலை களவு போன்ற குற்றங்கள் புரிந்துள்ளார் அல்லது பிரபல்யமான குற்றவாளிகளுடன் தொடர்புபட்டுள்ளார் என காவல் நிலையப் பொறுப்பதிகாரி திருப்திப்படின் சிறுவனைப் பிணையில் விடாது தடுப்பு இல்லங்களில் தடுத்து வைக்கலாம்.

8. நீதிமன்றம் முன் சிறுவர் கொண்டுவரப்படும் பொழுது காவல் நிலையப் பொறுப்பதிகாரி அப்பிரதேச நன்னடத்தை அலுவலருக்கு அறிவித்தல் வேண்டும்.

## தந்திரோபாய முகாமைச்செயற்பாடு

1. சூழற்சி முறை ஐந்தாண்டுத்திட்டம் தயாரிப்பு
2. வருடாந்த அமுலாக்கல் திட்டம் தயாரிப்பு
3. பாடசாலை நாட்காட்டி தயாரிப்பு
4. பாடசாலை நேரசூசி தயாரிப்பு

- ஒவ்வொருவருடமும் செப்ரெம்பர் - நவெம்பர் காலப்பகுதியில் வருடாந்த அமுலாக்கல் திட்டத்தில் உட்படுத்தப்படும்.
- தயாரித்தல், அனுமதிபெறல், உரியவருக்கு ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் காலம் ஒதுக்கப்படும்
- SDC, SMT இதற்குப் பொறுப்பானது



2014 இல் கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலையில் பொங்கலிட்டு மாணவர்கள் பண்பாட்டு விழுமியங்களைக் கடைப்பிடிக்கும் செயற்பாட்டில் மகிழ்வுடன் ஈடுபடும் காட்சி

# பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி

### பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி தேவையை அறிந்து கொள்ளல்

- உள்ளக மேற்பார்வை அறிக்கைப் பகுப்பாய்வு
- பகுதித் தலைவர்களின் மாதாந்த அறிக்கைப் பகுப்பாய்வு
- பண்புசார் விருத்தி கணிப்பீட்டு அறிக்கைப் பகுப்பபய்வு
- கல்வி துறையில் ஏற்படும் மாற்றங்கள் புதிய விடயங்கள்
- பாடத்துறை ஆசிரியர்களின் தேவைகள் தொடர்பான வேண்டுதல்கள்

### பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டத் தலைப்புக்கள்

- பாடவிடயம்
- பிள்ளைவிருத்தி
- மாணவர் கணிப்பீடு
- சமூகஉறவை மேம்படுத்தல்
- கற்றல் கோட்பாடுகள்
- கற்பித்தல் முறைகள்
- வகுப்பறை முகாமைத்துவம்

### உயர் மட்ட ஆசிரிய அபிவிருத்தி செயற்பாடு (HOP)


- களப்பயணம்
- சஞ்சிகையாக்கம்
- தரவட்டம்
- கண்காட்சி
- முகாம்
- ஆய்வுகள்
- வெளிவளவாளரைப் பயன்படுத்தல்
  (செய்துகாட்டல்கள், செய்முறை வகுப்புக்கள் விரிவுரை கள், பட்டறைகள், முகாம்கள்)

### வழமையான ஆசிரிய அபிவிருத்தி

- தரவட்டம்
- இணைந்து கற்பித்தல்
- ஆசிரியர் கூட்டம், ஆசிரியர் சந்திப்பு
- சகபாடி மேற்பார்வை
- நுண்முறைக் கற்பித்தல்
- சகபாடிகளிக் விரிவுரைகள், செய்துகாட்டல்கள்
- கற்றல் சாதன தயாரிப்பு
- பாடசாலை மட்ட தொழில் வழிப்படுத்தல்
- வேறு பாடசாலைகளுடன் ஒத்துழைப்பு

### பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி பேண வேண்டிய ஆவணங்கள்

- பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்தி குழு(அனுமதி ஆவணம்)
- பாடசாலைத் தேவையை இனங்கண்ட முறை
- பாடசாலை மட்ட அபிவிருத்தி திட்டம்
- முன்னேற்ற மீளாய்வு (SBTD கூட்ட அறிக்கை)
- பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்திக்கான சம்பவ திரட்டு
- செயற்பாடுகளின் பின்னூட்டல் கோவை
- செயற்பாடுகளின் தனி தனியான அறிக்கை



# Sugirtham

Child Friendly Bulletin

**Primary Education Unit**
**Zonal Education Office**
**Thenmaradchy.**

Re-Print
Provincial Education Department
Northern Province
Maruthanamadam
Chunnagam

Evergreen Printers
021 222 9893